சிவயோக தீபிகை

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
மற்றும் ஆய்வு மையம்
தஞ்சாவூர்

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 579

சிவயோக தீபிகை

முனைவர். ஜெ. ஜெயவாணிஸ்ரீ,
சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்,
உதவிப்பேராசிரியர்,
அரசினர் கலைக்கல்லூரி, கும்பகோணம்,

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்
மற்றும்
ஆய்வு மையம்,**

தஞ்சாவூர்.

2016]   [விலை: ரூ. 100-00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	சிவயோக தீபிகை
பதிப்பாசிரியர்	:	முனைவர் ஜெ. ஜெயவாணிஸ்ரீ சிறப்புக்கேண்மை பதிப்பாசிரியர்,
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.
வெளியீட்டு எண்.	:	579
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதல் பதிப்பு
வெளியீட்டு நாள்	:	2016
தாள்	:	TNPL 18.6 கி. கி
நூல் அளவு	:	21 X 14 செ.மீ.
பக்கங்கள்	:	128
படிகள்	:	500
எழுத்து	:	12 புள்ளி
அச்சிட்டோர்	:	ஒளி அச்சுக்கோப்பு மற்றும் ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம்.
புத்தகக்கட்டு	:	மெலிந்த அட்டை
பொருள்	:	இலக்கியம்
ISBN	:	978-93-85343-17-9
விலை	:	ரூ. 100/-

வெளியீட்டாளர் முகவுரை

தஞ்சையில் அமைந்து தரணி முழுமைக்கும் அறிவுச் செல்வமாகப் பயன்பட்டுக்கொண்டிருக்கும் அரும் பெரும் நிறுவனம் சரசுவதி மகால் நூலகமாகும். சுவடிக் கருவூலமாகவும், பன்மொழி நூற்களஞ்சியமாகவும், பன்மொழி ஆய்வு மையமாகவும் திகழும் சரசுவதி மகால் நூலகம் ஆற்றிவரும் தொண்டு அளப்பரியது. அதன்கண் அமைந்துள்ள அரிய சுவடிகளை நூல்களாகச் சிறப்பான முறையில் பதிப்பித்து வெளியிட்டு வருகின்றது. அவ்வரிசையில் சிவயோக தீபிகை என்னும் இந்நூல் தற்பொழுது முதல் பதிப்பாக வெளிவருகிறது.

பக்தி இலக்கிய வரலாற்றில் நாயன்மார்களின் தொண்டு எண்ணத்தக்கது. சைவ சமய உண்மைகளை அவர்கள் பாடல்களாகப் பாடியுள்ளனர். அதற்கு இலக்கணமாகத் திகழ்பவை பதினான்கு பண்டார சாத்திரங்களாகும். இவை சைவநெறியாக அமைந்த பதி, பசு, பாசம் ஆகிய நெறிகளைத் தெளிவாக உணர்த்து கின்றது. சிவயோக தீபிகை (சுவடி எண். 1012) என்னும் இந்நூலில் ஐந்த படலங்கள் இடம்பெற்றுள்ளன. முதல் படலத்தில் சிவமயம் குறித்த செயல்களும், இரண்டாம் படலத்தில் பூசை, யோகம் பற்றியும், மூன்றாவது படலத்தில் வண்ணங்கள், தியான ஸ்தலங்கள் முதலியவை களும், நான்காவது படலத்தில் நியமம், யானம் போன்றவைகளும், ஐந்தாவது படலம் முதல் நான்கு படலங்களின் விளக்கமாக அமைந்துள்ளது. இந்நூல் சைவ சமய நெறியையும், சித்தாந்த நெறியையும் முழுவதுமாக உணர்ந்து கொள்ளவும். தெளிவாக உரைப்பதற்கும் ஏதுவான நூலாகும். சுந்தரம் என்னும் பெருமான் சிவயோகத் தீபிகையை இயற்றியுள்ளார். இந்நூலின்

பதிப்புப் பணியை சிறப்பாகச் செய்துள்ள சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர் முனைவர் ஜெ. ஜெயவாணிஸ்ரீ அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

இந்நூல் வெளிவரத் தேவையான நிதியுதவி நல்கிய அரசுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் நன்கு வெளிவர ஆவன செய்துள்ள நூலக நிருவாக அலுவலர் **அ. பூங்கோதை,** M. A., அவர்களுக்கும், நூலகர் முனைவர் **எஸ். சுதர்ஷன்,** M. A., B.Lit.. M.L.I.S. Ph.D அவர்களுக்கும், ஒளியச்சு மற்றும் கணினி அச்சகப்பிரிவினருக்கும் மற்றும் நூலகப் பணியாளர் களுக்கும், என் பாராட்டுக்கள்.

இந்நூல் சைவ சமய நெறியையும், சித்தாந்த நெறியையும் முழுவதுமாக உணர்ந்து கொள்ள பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

ஆ. அண்ணாதுரை, இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்.

தஞ்சாவூர்,
27-12-2016

பதிப்புரை

இந்து மதத்தில் சைவம், வைணவம் என்பன தொன்மையான சமயங்கள்.இவை அகச்சமயங்கள் என்று அடையாளப்படுத்தப்படும். இத்தகைய சிறப்பு வாய்ந்த சமயங்களில் முதன்மையானது சைவ சமயம், சைவ சமயத்தின் தொன்மைச் சிறப்பை அறிய நமக்குச் சங்க இலக்கியம், புராணங்கள், இதிகாசங்கள் துணை நிற்கின்றன.

பக்தி இலக்கிய வரலாற்றில் நாயன்மார்களின் தொண்டு எண்ணத்தக்கது. சைவ சமய உண்மைகளை அவர்கள் பாடல்களாகப் பாடியுள்ளனர். அதற்கு இலக்கணமாகத் திகழ்பவை பதினான்கு பண்டார சாத்திரங்களாகும். இவை சைவநெறியாக அமைந்த பதி, பசு, பாசம் ஆகிய நெறிகளைத் தெளிவாக உணர்ந்து கொள்ள வழி வகுக்கின்றன. பதி, பசு, பாசம் ஆகிய நெறிகளின் தன்மையை மேலும் தெளிவுபடுத்தவும், கற்பித்த உணர்வை வளர்க்கவும் நமக்குக் கிடைத்துள்ள நூல்தான் சிவயோக தீபிகை (சுவடி எண்.1012) ஆகும்.

இந்நூலில் ஐந்து படலங்கள் இடம்பெற்றுள்ளன. முதல் படலத்தில் சிவமயம் குறித்த செய்திகள் கவனப்படுத்தப் பட்டுள்ளன. குறிப்பாக இராஜ யோகம், சிவயோகம், சிவ தத்துவங்கள், பக்தி பூசை முறைகள் மொழியப்பட்டுள்ளன.

இரண்டாம் படலத்தில் பூசை, யோகம், உடலியல் இயக்கத்துக்கு ஏற்ப அமைந்துள்ள முறைகள், குறிப்பாக அட்டாங்க யோகம், மனோகரம், பரமநதி, யோகத்தின் செயல்பாடுகள் என்பன 59 தலைப்புகளில் விளக்கப் பெற்றுள்ளன.

மூன்றாவது படலத்தில் வண்ணங்கள், தியான ஸ்தலங்கள், சத்தி நிலை, உடம்பில் உள்ள இயக்க நிலைகள் அவற்றின் காற்று சுழற்சி, லிங்கம் மனவாய் என்பன குறிப்பிடத்தக்கன. இவை குறித்த பதிவுகள் 63 தலைப்புகளில் விளக்கப்பெற்றுள்ளன.

நான்காவது படலத்தில் மிகவும் இன்றியமையாத நியமம், யானம் போன்ற நெறிகள் விளக்கப்பட்டுள்ளன. இவை 52 தலைப்புகளில் நெறியாக்கப்பெற்றுள்ளன.

ஐந்தாவது படலம், முதல் நான்கு படலங்களின் விளக்கமாக அமைந்துள்ளது. இந்நூலிலுள்ள ஒவ்வொரு நெறியிலும் சிவஞானபோதம், சிவஞான சித்தியார் நெறிகளோடு ஒப்பத் தகுந்த முறையில் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

இந்நூல் சைவ சமய நெறியையும், சித்தாந்த நெறியையும் முழுவதுமாக உணர்ந்து கொள்ளவும், தெளிவாக உரைப்பதற்கும் ஏதுவான நூலாகும்.

சுந்தரம் என்னும் பெருமான் சிவயோகத் தீபிகையை இயற்றியுள்ளார். இந்நூல் சிவயோகிகளுக்கு மிகமிக அருமை வாய்ந்தன. பலரும் கற்றுத் தெளிந்து கொள்ளக் கூடியன.

சுவடியிலுள்ள எழுத்துகளின் தன்மை,குறிகள் போன்ற வற்றைக் கொண்டு நோக்குமிடத்து இவை சுமார் இருநூறு அல்லது இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனலாம். அதற்கும் முன்பாகவே இது வழக்கில் இருந்திருக்க வேண்டுமென அறியமுடிகிறது.

மூல ஏட்டிலிருந்து பல ஏடுகளும் வழி ஏடுகளாக எழுதப்பெற்று வந்துள்ளதால் ஏடுகள் ஒவ்வொன்றிலும்

பிழைகள் மலிந்து காணப்படுகின்றன. மேலும், ஏடு எழுதுவோரின் கவனக்குறைவு, விரைவு, பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு இவற்றிடையே வேறுபாடின்மை போன்ற காரணங்களாலும் இத்தகைய பிழைகள் தோன்றியுள்ளன.

பல சுவடிகளையும் ஆராய்ந்து, மூல நூலின் வடிவங்கள் இவையாகத்தாம் இருக்கவேண்டுமென்ற நிலையைப் பெற வேண்டி இருக்கிறது. இவ்வாறு எழுத்துகள் மாறுபாடு கொண்ட சொற்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

யோகி சா.அ.இராமரின் கருத்தின்படி சுவடியிலுள்ள நூற்பொதி செய்திகளையோ, கருத்துகளையோ பதிப்பின் போது மாற்றுதல் கூடாது என்பதில் எவருக்கும் எவ்வித ஐயமுமில்லை என்பதற்கேற்ப இப்பிழைகளில் எழுத்துப் பிழை, இலக்கணப் பிழை மட்டும் நீக்கி பதிப்பிக்கப்பட்டுள்ளது.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் சதுர்விதங்களையும் இந்நூலினால் அனுபவிக்கமுடியும் எனும் நோக்கத்தினால் இது எழுதப்பட்டுள்ளது. இதில் சொற்குற்றம், பொருட்குற்றம் இருப்பின் பொருட்படுத்தாது இவ்வரிய நூலை அங்கீகரிக்க வேண்டுகிறேன்.

சிவபூஜை விள்க்கம் என்னும் இந்நூலினைப் பதிப்பிப்பதற்கு ஆணை வழங்கிய மேனாள் ஆட்சித்தலைவர் திரு. எம். சண்முகம், இ.ஆ.ப., அவர்களுக்கும், இந்நூல் 'வெளிவருவதற்கு உதவிய நூலக நிருவாக அலுவலராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

நூல்கள் மறைந்து வரும் இக்காலக்கட்டத்தில் அதன் முக்கியத்துவத்தினை அறிந்து நூல்களை வெளிக்கொண்டு

வந்து மக்களுக்கு பயனைடையச் செய்யும் விதமாக வெளியிடும் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நூலக இயக்குநர் **ஆ. அண்ணாதுரை,** இ. ஆ. ப., அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இந்நூல் வெளிவர ஆவன செய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் திருமதி. **அ. பூங்கோதை,** M. A., அவர்களுக்கும், நூலகர் முனைவர் **எஸ். சுதர்ஷன்,** M. A., B.Lit. M.L.I.S. Ph.D அவர்களுக்கும், ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் திரு. கோ. செல்வராஜ் அவர்களுக்கும், இந்நூலை அச்சுப்பிழைத் திருத்தம் செய்து கொடுத்த கும்பகோணம் திரு. வய். மு. கும்பலிங்கம், தலைமை யாசிரியர் (ஓய்வு) அவர் களுக்கும், எனக்கு உறுதுணைபுரிந்த திரு. ஆர் செந்தில்குமார் அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகின்றேன். இந்நூலை நன்கு அச்சிட்டுத் தந்த நூலக ஒளி அச்சுக்கோப்புப் பிரிவினருக்கும் மற்றும் நூலகப் பணியாளர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றியுடன்,

முனைவர் **ஜெ. ஜெயவாணிஸ்ரீ**



சிவ பூசை விளக்கம்

உலகிலுள்ள சமயங்கள் எல்லாவற்றையும் கடந்து மலைபோல் விளங்குவதும், தானே முடிந்த முடிபுமாகிய சமயமாக விளங்குவதும் சைவ சித்தாந்தமாகும். சைவசித்தாந்தத்தில் வீடுபேறாகிய வீட்டினை அடைவதற்கு சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு மார்க்கங்கள் உள்ளன. அவை, தாசமார்க்கம், புத்திமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்பவை யாகும்.. இதனை அப்பர் தேவாரத்தில்,

மதிதருவ னெஞ்சமே யுஞ்சு போக
வழியால திதுகண்டாய் வானோர்க் கெல்லாம்
அதிபதியே ஆரமுதே ஆதீ என்றும்
அம்மானே ஆரூரெம் மையா வென்றுந்
துதிசெய்து துன்றுமலர் கொண்டு தூவிச்
சூழும் வலஞ்செய்து தொண்டு பாடிக்
கதிர்மதிசேர் சென்னியனே கால காலா
கற்பகமே யென்றன்றே கதறா நில்லே.

என வரும் பாடலால் அறியப்படுகிறது.

சரியை: புறத்தொழில் மாத்திரத்தால் சிவபெருமானுடைய உருவத் திருமேனியை வழிபடுதல்.

கிரியை: அகத்தொழில், புறத்தொழில் இரண்டாலும் சிவபெருமானுடைய அருவுருவத் திருமேனியை வழிபடுதல்.

யோகம் : அகத்தொழில் மாத்திரத்தால் சிவபெருமானுடைய அருவத் திருமேனியை வழிபடுதல்.

ஞானம் : அறிவினால் மட்டுமே உருவம், அருவுருவம், அருவம் என்னும் மூவிதத் திருமேனிகளையும் கடந்து நிற்கும் அகண்டாகார சோதி மயமான சிவபெருமானை நோக்கிச் செய்யும் வழிபாடாகும். இந்த நான்கு மார்க்கங்களும்,

விரும்பும் சரியைமுதல் மெய்ஞ்ஞான நான்கும்
அரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே

என்பதற்கு வீடுபேறு சாதனமாக நிற்கும்.

சரியை இல்லாமல் கிரியையும், கிரியை இல்லாமல் யோகமும், யோகமில்லாமல் ஞானமும், ஞானமில்லாமல் இறைவனுடைய திருவடி பேறாகிய வீடுபேற்றை அடையமுடியாது.

சரியை, கிரியைப் பயனற்றவை என இகழ்ந்து ஞானத்தினாலே முத்தியடைய விரும்புவோர் பலர். இவர்கள் படியின் வழியாக ஏறிச்செல்லாமல், கீழே நின்று மலையின் உச்சிக்குப் பாய விரும்புபவரை போன்றவர் ஆவர். ஆதலால் பேரானந்தப் பிறவா நிலையை அடைய விரும்புபவர் புறத்தும் அகத்தும் சிவபெருமானை வழிபடுவது இன்றியமையாததாகும். சிவபெருமான் புறத்தே சிவாலயங்களில் சிவலிங்கம் முதலிய வடிவங் களையும் சிவஞானிகளுடைய உடலினை ஆதாரமாகக் கொண்டும், அகத்தே உயிரிடம் பிரேரகனாக இருந்து கொண்டும், மக்களால் செய்யப்படும் வழிபாட்டை ஏற்று அருளுகின்றார். அகத்தே செய்யப்படும் வழிபாட்டிற்குக் கண் முதலிய ஐம்பொறிகளும், கை முதலிய உறுப்புகளும் தொழிற்படாது. இவை சிவத்தொண்டிலே சென்றால் மட்டுமே தீயவழியில் செல்லாமல் நிற்கும். இல்லை என்றால் தம் விருப்பப்படி செயல்படும். நமக்குள்ள எந்த கருவியையும் தீய வழியிலிருந்து நேராக அடக்குவது என்பது எளிதானதல்ல. அதற்கு நல்வழி காட்டவேண்டும் என்பதை திருவள்ளுவர்,

பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

என்பதன் வாயிலாக விளக்குகிறார்.

எனவே புறக்கரணங்களை முதலில் செந்நெறிப் படுத்தாவிட்டால், அகப்பூசை செய்வது இயலாததாகும். சிவஞானிகளுடைய திருமேனியைக் காண்பது மிகவும் அரிதாகும். இப்பிறவியிலேயே சிவனை ஒருமுறையாவது காணமுடியாமலும் போகும் என்பதால் கண் முதலிய ஐம்பொறிகளும், உறுப்புகளும் பயன்படுவதற்குக் கோயில் வழிபாடே மக்களுக்கு சிறந்ததாகும். கோயில் அறிவுடையோர், ஞானிகள் ஈறாக யாவருக்கும் அவசியமானதாகும். இதனை சிவஞான சித்தியார்,

திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவன் ஆங்கே
உருக்கோலி மந்திரத்தா லெனநினையு மவர்க்கு
முளனெங்கு மிலனிங்கு முளனென் பார்க்கும்
விருப்பாய வடிவாகி யிந்தனத்தின் எரிபோல்
மந்திரத்தின் வந்துதித்து மிகுஞ்சுரபிக் கெங்கும்
உருக்காண வொண்ணாத பான்முலைப்பால் விம்மி
யொழுகுவது போல்வெளிபட் டருளுவனாவன் அன்பர்க்கே.

என வலியுறுத்துகிறார். ஆலயத்திலுள்ள சிவலிங்கத்திலே சரியைவான்களுக்கு மறைந்திருந்தும், கிரியைவான் களுக்கும் யோகிகளுக்கும் வணங்கும்போது மட்டும் தோன்றியும், ஞானவான்களுக்கு அன்பாக எப்போதும் தோன்றி அருளுகின்றார் எனக் குறிப்பிடுகின்றார். பட்டினத்தார், தாயுமானவர், சிவவாக்கியர் முதலிய மகான்களுக்கு,

சிற்றம் பலமும் சிவனு மருகிருக்க
வெற்றம் பலத்தேடி விட்டோமே

பண்ணே னுனக்கான பூசையொரு வடிவிலே
தீர்த்த லிங்க மூர்த்தியென்று தேடியொடுத் தீயரே

என்றும் சிவாலய வழிபாடு, சேவை செய்தல் பயனுடையது என வலியுறுத்துகின்றனர்.

கோயில்

கோயில் எல்லாவற்றிலும் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், ஸ்தூபி, சுற்றுப்பிரகாரம், கோபுரம் முதலியன ஒரே தன்மையாக அமைக்கப்பட்டு இருக்கின்றன.

கோயில் என்பது உடலையும், இருதயத்தையும் குறிப்பதாகும். இதில் இருதயம் என்பது சிதம்பரத்தையும், உடல் என்பது மற்ற கோயில்களையும் குறிக்கும். கோயிலுள்ள கருவறை, அர்த்தமண்டபம், மகா மண்டபம் மூன்றும் ஆன்ம தத்துவம், வித்யாதத்துவம், சிவதத்துவம் முதலியவற்றைக் குறிக்கும்.

கருவறை என்பது பிரதான மூர்த்தியாகிய சிவலிங்கத்தை வைத்து வணங்கும் இடமாகும். அதற்கு மூலஸ்தானம் எனவும் வழங்குவர். அதாவது உலகத்தி லுள்ள தோன்றும் படைப்புக்குக் காரணமான மூலப் பிரகிருதியின் இடமாகும். அதாவது சிவபெருமான் உலகைப் படைக்கும் காலத்தில் அவரது அருட்சக்தியை மாயையிலிருந்து வெளிப்படுத்துகின்றார் என்பதாகும். அப்போது அரூபியா எனவிருக்கும் சிவபெருமான் ரூபாரூபி ஆகிறார் என்பதைக் குறிப்பிடுகின்றது. கருவறைக்கு மேல் இருதயகமலாகாரமாக விளங்கும் தூபியானது இருதயமே ஆன்மாவிற்கு இருப்பிடமாகவும், ஆன்மாவிற்குப் பிரேரகனாகவும் இருப்பவர் இருதயத்தி லிருந்து சிதாகாசத்தில் விளங்குபவரும் சிவபெருமானே என்பதை உணர்த்துகின்றது.

அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஸ்நபன மண்டபம், அலங்கார மண்டபம், சபா மண்டபம் என்னும் மண்டபங்கள் நிவிருத்தி, பிரதிஷ்டை, வித்தியை, சாந்தி, சாந்தியாதீதம் என்னும் கலைகளை உணர்த்துகின்றன.

சிவபெருமானைச் சூழ்ந்திருக்கும் ஐந்து சுற்றுகள் அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞான மயம், ஆனந்தமயம் என்னும் ஐந்து விதகோசங் களையும் குறிக்கின்றன. மூன்று சுற்றுகள் ஐந்து கோசங்களி னால் ஆன ஸ்தூல சூக்ஷ்மகாரணம் என்னும் மூவகைச் சரீரங்களை விளக்குகின்றன.

கோயில்களில் அமைக்கப்பட்டிருக்கும் கோபுரங் களை பிரம்ஹரந்திர மத்யகபாலத்வாரம் என்று யோகிகள் கூறுவர். மூலத்தான மூர்த்திக்கு நேராக அமைக்கப் பட்டிருக்கும் துலஜஸ்தம்பம் யோகியானவர்களுக்கு நடுநாடியாகிய சூட்சுமத்தில் அசைவற்று நிறுத்திக் கொண்டு தியானத்தில் இருந்தால் மனம் முதலிய கரணங்கள் யாவும் நின்று பிரபஞ்சமே தோன்றாமல் சிவதரிசனம் உண்டாகும் என்னும் உண்மையை வலியுறுத்துகிறது. இதனை சிவப்பிரகாசர் உணர்த்துகையில்,

தறிபோ லுடல நேரிருந்து
        தயங்கு மருங்கி னிருநாடி
நெறிபோய் மீளும் வலியதனை
        நிறுவி நடுநா டியிற்செலுமூ
யறிவோர் சிறிதுஞ் சலியாம
        லன்னப் பெயர்மந் திரமாறிக்
குறிபோ யிருந்த வொருகுறியைக்
        குறித்துக் கொண்டங் கிருந்தனரால்

வாயு நிற்ப மனநின்று
        மனந்தா னிற்பப் பொறிநின்று
பாய பொறிக ணிற்பவிடர்
        படுபுன் புலன்க ணின்றனவா

மாய புலன்க ணின்;றமையா
லகிலத் தோன்றா துள்ளத்தே
தூய பரமா னந்தபரஞ்
சோதி தோன்றக் கண்டிருந்தார்.

என பிரபுலிங்க லீலை எனும் நூலில் குறிப்பிடுகிறார். 'கோயில்களில் சிவலிங்க மூர்த்தியைத் தெரியவிடாமல் மறைத்து நின்று நீக்கிய வலியாகும். சிவபெருமனைக் காட்டி நிற்கும் கதவுகளாகும். இராகம், துவேசம், லோபம், மோரகம், மதம், மாற்சரியம் என்பவைக்குக் காரணமாகிய அவித்தையை உணர்த்துவதாகும்.

சிவலிங்கம்

திருமூலர் வாக்கிற்கிணங்க,

ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம்
ஆய பசுவும் அடலே றெனநிற்கும்
ஆய பலிபீட மாகுநற் பாசமாம்
ஆய வானிலை ஆய்ந்துகொள் வார்கட்கே

இப்பாடலின் கருத்துப்படி, சிவலிங்கம் சிவாநந்தத்தைக் கொடுக்கும் சிவத்தையும், எதிரே இருக்கும் நந்தி முக்தியடைந்த ஆன்மாவையும், பலிபீடம் மலத்தையும் நீக்கும் சிவசக்தியையும் குறிக்கும். பலிபீடம் மங்களத்தை உண்டாக்கும் லிங்கம் எனப்படும். இதனை சைவ சமயநெறி எனும் நூலில்,

தூலலிங்க மாந்தூபி சூக்குமமாம் உள்ளிலிங்க
மேலும் பலிபத் திரம்

என விளக்குகிறது. மேலும், சிவசதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், கர்த்துரு சாதாக்கியம்,

கர்ம சாதாக்கியம் என்றும் கூறப்படுகிறது. சாதாக்கியம் என்பது பிருதிவி தத்துவத்திலிருந்து 34-ஆவதும், சிவ தத்துவத்திலிருந்து 3-ஆவதுமான தத்துவமாகும். சிவபெருமான் ஆன்மாக்களுக்கிடையே தியான பாவனையின் நிமித்தமாக நிட்கள சகள எனும் அருவுருவாகவும், திருவுருவம் கொண்ட நிலையை ஆவுடையாளுடன் கூடிய லிங்கமாகும். இதனை சைவ சமயநெறி எனும் நூலில்,

நிட்களன்றா னன்பால் நினைந்தருச்சிக் கச்சகள
நிட்களனா னானிமல னே

எனவும் விவரிக்கிறது. ஞான சக்தியாகிய சிவலிங்கத்தில் காணப்படும் ஆவுடையான் கிரியாசக்தியைக் குறிக்கும். இலிங்கத்தில் பிரமபாகம், விஷ்ணுபாகம், ருத்திரபாகம் என மூன்று பாகங்கள் உள.

அவற்றுள் பிரமபாகம் நபும்சக லிங்கமும், விஷ்ணு பாகம் ஸ்திரீ லிங்கமும், ருத்திரபாகம் பும்லிங்கமுமாக ஆண், பெண், அலி உருவமாக இருப்பதாகும். அவன் அவள், அதுவாக இருக்கும் உலகத்திலே உயர்திணைப் பொருளும், அஃறிணைப் பொருளும் தம்மிடத்தே தோன்றி ஒடுங்குகின்றன என்பதை உணர்த்துகின்றன.

அகரம் கண்டமும், உகரம் கோமுகமும், மகரம் வட்டமும், பிரணவம் இலிங்கமுமாக இருப்பன. சிவபெருமானே முதற்பொருள் என்பதையும், எல்லாச் சுருதிகளும் பிரணவத்திடமிருந்து தோன்றி ஒடுங்குவது போலவே எல்லா தேவர்களுக்கும் பிறப்பிடமாம் என்பதை,

சமயகோ டிகளெல்லாந் தந்தெய்வ மெந்தெய்வமென்
றெங்குத் தொடர்ந்தெதிர் வழக்கிட

நிற்பவரும் சிவபெருமானே என உணர்த்துகின்றது.

சிவலிங்கத்திற்கு நேராக வைக்கப்பட்டிருக்கும் நந்தி, பீடம் இரண்டும்,

பதிபசு பாச மெனப் பகர்மூன்றிற்
பதியினைப்போல் பசுபாச மனாதி

என்பதில் பதியாகிய சிவம் எப்பொழுதும் உண்டோ அப்பொழுதே பசு பாசங்களும் உள்ளன. இம்மூன்றும் அநாதி, நித்யம் என்பது சித்தாந்தம்.

பூசை

ஞானத்தை உண்டாக்கக் கூடியதே பூசையாகும். இப்பூசையானது, முதலில், ஆன்மார்த்தம் என்ற தான் மட்டுமே உய்வதாகச் செய்வதாகும். இரண்டாவது பரார்த்தம் என்பதில் பிறர் உய்வதாகச் செய்வதாகும்.

ஆன்மார்த்தமாவது, சிவதீட்சை செய்யும் காலத்தில் ஆசாரியனால் கொடுக்கப்பட்ட இலிங்க முதலிய வைகளை வைத்து வணங்குதல், பரார்த்தமாவது, உலகத்திலுள்ள தேவர்கள், முனிவர்கள், அரசர் முதலிய வர்களால் உருவாக்கப்பட்ட கோயில்களை வணங்குவது. இவை இரண்டிற்கும் வணங்குவதில் வேறுபாடு இல்லை எனினும் ஆவரண பூசை, உபசாரங்கள், உற்சவம், பிராயச்சித்தம் முதலியவைகள் அதிகமாக மாறுபட் டாலும் பஞ்சசுத்தி, வழிபாடு, நைவேத்யம், தீபாராதனை முதலியவை ஒன்றே.

பஞ்ச சுத்தியாவது ஆன்மசுத்தி, ஸ்தான சுத்தி, திரவிய சுத்தி, மந்திர சுத்தி, இலிங்க சுத்தி என்பவையாகும். பஞ்சசுத்தி முடித்து தான் சிவபெருமானை வணங்க வேண்டும்.

முதலாவது, ஆன்ம சுத்தியாவது பூதசுத்தி, அந்தரி, யாகம், சமாதி என்பவையின் தொகுதி. பூதசுத்தி என்பது உடலுக்குக் காரணமான ஐவகைப் பூதங்களையும் சுத்தி செய்வதாகும். இதில் சூட்சும சரீர சுத்தி, தூல சரீர சுத்தி என இருவகையுண்டு. உடலைச் சுத்தி செய்வதால் அதனோடு தொடர்புடைய ஆன்மாவைப் பிராண யாமத்தினால் த்வாத சாந்தத்தில் இருக்கும் சிவனிடத்தில் சேர்ப்பதாகும். தத்துவங்களை மகா மாயையிலும், புரியஷ்டங்களை சூட்சும சரீரங்களான சப்த, பரிச, ரூப, கந்த, மனசு, புத்தி, அகங்காரம் வரை சிவமீறாகவுள்ள மூர்த்திகளிலும் ஒடுங்கியதாகப் பாவித்தல் சூட்சும தேக சுத்தியாகும்.

நிவிருத்தி முதலியவைகளின் பீஜாக்ஷரங்களை உச்சரித்து அவைகளின் வலிகெடச் செய்து தன் சரீரத்தை ஊர்த்துவ மூலமான ஆலமரமாகப் பாவித்து அதனை வலக்கால் பெருவிரலிலிருந்து உண்டான அக்கினியினால் தகித்து திருவருட் சத்தியாகிய அமிர்தத்தினால் நினைத்துச் சுத்தமானதாகப் பாவித்தல் ஸ்தூல தேக சுத்தியாகும். பிருதிவி முதலிய தத்துவங்கள் சடங்களானதால் அவைகள் தாமாகக் காரியப்படாது. அவற்றிலிருந்து நீங்கும் பாவனையாகும். இதனை சிவப்பிரகாசர்,

பாங்குபடத் தத்துவங்கள் நீங்கப் பூதசுத்தி

என உணர்த்துகிறார்.

அந்தரியாகம்

வெளியே செய்யும் முறை போலவே இருதய கமலத்தில் சிவபெருமானை வணங்கிப் பூசைப் பலனை அவரிடத்தில் ஒப்புவித்தலாகும்.

சமாதி

அகண்டகாரமான சிவபெருமானை விந்து தானத்தில் தீப ஜ்வாலை போன்றவராக எண்ணி வணங்கி அனுமதி பெறுதல். இதனை திருநாவுக்கரசர்,

காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும் பாலாய்நிறையநீ ரமையவாட்டி
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே

எனக் குறிப்பிடுகிறார். வாயு சங்கீதையில்,

நாபியழ றனிலோமஞ் செய்ததற்பின்
புருவநடு வதனி னன்காத்
தீபசிகை போலுறையுஞ் சிவன்றன்னை
நினைந்தகத்துட் பூசை தன்னை
மாபவத் தீர்த்திட முடிந்தபின் னிலிங்கத்
தனிற்றழலில் வயங்கு மண்ணில்
தூபமுத லியவேந்திச் சிவபூசை
தனையியற்றத் தொடுக்க வேண்டும்.

என விவரிக்கிறது.

ஸ்தான சுத்தி

அசுரர்கள் தம்முள் வராமல் இருக்க அஸ்திர மந்திரத்தினால் திக்பந்தனம் செய்வதால் பூசை செய்யுமிடத்தின் நாற்புறமும் அக்னி வடிவமாகிய மதிலும், கவச மந்திரத்தை உச்சரித்து அவைகுண்டனம் செய்வதால் இவை மூன்றும் அகலும். சக்தி மந்திரத்தைக் கூறி தேநு முத்திரை காட்டுவதால் திருவருட் சத்தியாகிய வலை மேலும் கீழும் உண்டானதாகப் பாவித்து சிவன்

உறைவதாக சிவதத்துவத்தை உண்டாக்குவதாகும். பகர்சிவ தத்துவ மாக்கற் றவசுத்தி என தத்துவப் பிரகாசம் விளக்குகிறது.

திரவிய சுத்தி

மலர் முதலிய பூசை திரவியங்களை பார்த்து சம்ஸ்காரங்களினால் சுத்தி செய்வதாகும். இதன் தத்துவமானது திரவியங்கள் யாவும் மாயையிலிருந்து தோன்றி மாயா சம்பந்தம் பெற்றிருப்பதால் சுத்தனாகிய சிவபெருமானுக்கு சிவ மந்திரத்தை உச்சரித்துக் கொண்டே பார்ப்பதாகும். சிவசக்தியை அதில் பதியும்படி செய்தால் அவை சுத்தமாகி சிவபெருமானுக்கு உகந்ததாகவும், எண்வகைச் சரீரங்களுள் அடங்கிய தாகவும் மாறும்.

> **நாலிரண்டு திருவுருவ நோக்கி நோக்கால்**
> **நலங்கொள் திரவிய சுத்தி நயந்து**

என ஞானபூசைத் திருவிருத்தம் குறிப்பிடுகிறது. திருநாவுக்கரசரும் இதனை,

> **பூவாகிப் பூவிகோர் நாற்ற மாகிப்**
> **புக்குளால் வாசமாய் நின்றா னாகி**

எனக் குறிப்பிடுகிறார்.

இலிங்க சுத்தி

சிவலிங்கத்தின் பேரிலிருந்த நிருமாலியங்களைக் களைந்து இலிங்கத்தையும் பீடத்தையும் அர்க்கிய நீரினால் அபிசேகித்தல் சித்ரபஞ்சம், அசித் பிரபஞ்சம் என்னும் இரண்டிலும் பிரிவறச் சேர்ந்து நிற்கும் சிவபெருமான் இலிங்கத்திடத்தேயும் இருக்கின்றார் என்பதை,

நாதன்மே லுகந்தமல ரொதுக்கி யுருவநோக்கி
விமலனிறை யுணர்ந்தெ வையுமே னியான
சீலமுமங் கருவுதிரு வையுமான சிறப்புமுணர்ந்
திலிங்க சுத்திசேர்த் திடாயே

என ஞானபூசைத் திருவிருத்தம் குறிப்பிடுகிறது. இத்தகைய ஐந்து சுத்திகளையும் செய்வது ஆணவம், கன்மம், மாயை, திரோதயி, மாயேயம் என்னும் ஐவகைப் பாசங்களைக் களைவதாகும் என்பதை,

பஞ்சவித சுத்தியினைப் பண்ணிடுக பாங்காகப்
பஞ்சவிதப் பாசம றுப்பார்

என சைவ சமய நெறி விளக்குகிறது. அடுத்து செய்வது அபிசேகம். வடித்தெடுத்த நீரில் மலர்களையும் வாசனை திரவியங்களையும் சேர்த்து சிவபெருமானை அபிசேகித்தலாகும். திருவருள் ஞான நீரெனப் பாவித்து அபிசேகம் செய்வதால் மல நிவாரணம் ஏற்படும் என்பதாகும்.

தம்மிற் சிவலிங்கங் கண்டதனைத் தாம்வணங்கித்
தம்மன்பால் மஞ்சனநீர் தாமாட்டி

என்றபடி சுத்தி செய்வதாகும்.

வஸ்திரம்

சிவபெருமானுக்கு மெல்லிய இழையை உடையதும், வெண்மையான பட்டு வஸ்திரத்தைச் சார்த்துவது திரோதான சக்தி நீங்குவதாகும்.

ஆசன பூசை

ஆதார சக்தி முதல் குடில சக்தி அந்தமாகவுள்ள முப்பத்தாறு தத்துவங்களையும் இருநூற்றிருபத்து நான்கு புவனங்களையும் உறுப்பாக உடையதும் அநந்தாசனம், சிம்காசனம், யோகாசனம், பத்மாசனம் என்னும் ஐந்து பிரிவினை உடைய ஆசனங்களைச் சிவபெருமானுக்கு இட்டதாகப் பாவித்தல்.

ஆலவித் தென்னகோடி பொருளெலா மடங்கனவரு
மூலமா யுறைந்து மன்னி முக்குணங் கடந்துவெய்ய
காலனாருயிரை யுண்ட கனைகழுகடவுள் மூர்த்தி
மேலதாங் குடிலைதன்னின் மேலிவீற் றிருக்கு மன்றே

என வாயு சங்கிதை உணர்த்துகிறது. இப்பூசையில் பதினாறு உபசாரங்கள் விதிக்கப்பட்டுள்ளன. அவை: ஆவாகனம், தாபனம், சந்நிதானம், சந்நிரோதனம், அவகுண்டனம், தேனுமுத்திரை, பாத்தியம், ஆசமநீயம், அருக்கியம், புஷ்பதானம், தூபம், நைவேத்தியம், பாநீயம், செப சமர்ப்பணை, தீபாராதனை என்பனவாம்.

ஆவாகனம்

பூசையின் பொருட்டுச் சிவபெருமானைச் சிவலிங்க வடிவத்தில் மூல மந்திரத்தைச் சொல்லி வரவழைத்து அபிமுகமாகச் செய்தலாகும். இதனை சதாசிவ ரூபத்தில்,

இப்படித் தரைமுதற் சமனை யீறாய்ச்
செப்ப வியாபிக்கும் பரம சிவனது
பொருவி லுயர்பரி பூரணந் தன்னை
யறவி லழுந்துத லாவா கனமே

என விவரிக்கிறது.

தாபனம்

அடியேனை ஏற்க இலிங்கத்தில் எழுந்தருளி இருக்க வேண்டுமென்று அன்புடன் யாசிப்பதாகும். ஆன்மா சிவபெருமானை அருளினால் அறிந்து அதிலழுந்துதலை நிலைபெறச் செய்வதாகும்.

அலையா தழுந்த நிலைபெறல் தாபநம்

என்பர்.

சந்திதானம்

வணங்கக்கூடிய கடவுள், ஏற்றுக்கொள்ளும் தன்மையையும், வணங்குபவராகிய தான் ஏற்றுக்கொள்ளும் தன்மையையும் உண்டு பண்ணுவதேயாகும்.

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தேன்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையும் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே

என்றும்,

இவன்றன தறிவு, சிவன்பூ ரணத்திலும்
சிவபூ ரணத்துவ மிவன்றன தறிவிலும்
ஒன்றை யொன்றகலா துறவு செய்திருப்ப
தொன்றிய சந்தி தானமென் றுரைப்பர்.

என்றும் கூறுவதில் கடவுள் ஆண்டவன், நாம் அடிமை என்னும் உணர்வு மனதில் பதியவைப்பதாகும்.

சந்நிரோதனம்

கடவுளே எப்பொழுதும் என்னிடத்தில் அனுக்கிரகத்தோடு இருக்கவேண்டும் என்னும் உணர்வு எக்காலத்திலும் மனதை விட்டு அகலாமல் இருப்பதாகும்.

இவனிடத் துறுமறி வென்று மொழியாச்
சமைவது தானே சந்நிரோ தனமாம்

என்பதாகும்.

அவகுண்டனம்

சிவலிங்கத்தைச் சுற்றிக் கவச மந்திரத்தினால் மூன்றிதழ் உண்டாவதாக பாவித்தல். இது சிவத்தை அறிவிப்பதாகும்

தேனுமுத்திரை

சிவலிங்கத்தின் முன்பாகப் பசுவின் மடி போன்ற தோர் முத்திரை காட்டுவதாகும். இலிங்கத்தையும் சிவபெருமானையும் அபின்னமாகப் பாவிப்பதாகும்.

பாத்தியம்

மூல மந்திரத்தை 'நம' என்னும் இறுதியை உடையதாக உச்சரித்து நீரை திருவடியில் சேர்ப்பதாகும்.

ஆசமநீயம்

மூல மந்திரத்தை 'சுவதா' என்னும் இறுதியை உடையதாக உச்சரித்துச் சிவபெருமானுடைய ஐந்து முகங்களிலும் மூன்று முறை நீரை ஊற்றுவதாகும்.

அருக்கியம்

மூல மந்திரத்தை உச்சரித்து சிவபெருமானுடைய ஈசானம் முதலிய சிரசுகளில் நீரை ஊற்றுதல், இதனால் ஆன்மாவானது தநுகரண புவனபோகங்களாகிய குற்றங்களிலிருந்து நீங்கி, இச்சா ஞான கிரியைகள் பொருந்திய திருவடியை அடைந்து அருள் விளக்கத்திலே திருமுடியை அடைவதாகும்.

> **பாத்தியா சமனார்க்கியம் பழுதக**
> **லான்ம சுத்தி நிமித்தமாகவும்**

என விவரிக்கிறது.

புஷ்பதானம்

மூல மந்திரத்தை உச்சரித்து மலர்களைச் சாத்துவதாகும்.

> **சதாசிவரூபம் நறுமலர்தனை நல்வீட்டின்பம்**
> **குறுகுத லேதுவாகவும் கொடுத்து**

தத்துவத்திரய பூசை

ஆன்ம தத்துவம், வித்தியாதத்துவம், சிவத்துவம் இம்மூன்றிற்கும் சிவபெருமானே அதிபதி என்று வணங்குதல். இதனால் ஆன்மபோகம் நீங்கிச் சிவபோதம் பதியும் காலத்தில் மனம் வாக்கு காயந்தான் வந்த வினைகளும் சஞ்சிதம் ஆகாமியம் பிராரத்தம் என்னும் வினைகளை நீக்குவதாகும்.

நீங்கரும் கருமசுத்தி நிமித்தும்
தீங்கறுந் தத்துவத் திரயஞ்சாத்தி

இதன்பின் இலயாங்கம், பஞ்ச பிரம்கடாசடங்கள், மந்திரங்கள் சொல்லி வணங்கவேண்டும்.

போகாங்கம்

பஞ்சபிரம்ஹணடங்க மந்திரங்களை எட்டு மூலைகளிலும் வணங்குதல். இதனால் சிவபோகத்திற் குரிய சர்வஞ்ஞத்துவம், நித்திய பரிபூரணம், அநாதி போதம், சுதந்திரம், அனுப்தசக்தி, அனந்தசக்தி என்னும் ஆறு குணங்களையும் ஆன்மா பெறுவதாகும்.

தூபம்

கிரியா சக்தி ரூபமாகிய தூபத்தைச் சிவசக்திக்குக் காட்டுவதாகும். அதாவது ஆணவமலமாகிய அறியா மையைக் கிரியாசக்தியைக் கொண்டு சிவபெருமான் நீங்குவதாகும்.

தீபம்

சிவசக்தியாகிய தீபம் ஆன்மாவினது மலத்தைப் போக்கி ஞானத்தை விளக்குவதாகும்.

ஞானவிளக்கம் நண்ணுதற் பொருட்டு
தூபதீபந் துதைந்தினி தனித்து

என வழங்குவர்.

நைவேத்தியம்

ஆன்ம குணமாகிய அகங்காரம், சங்கற்பம், குரோதம், மோகம் என்பனவற்றை அமுதமாக சமர்ப்பித்தலாகும்.

பாட்டிற் கின்புறு குருபரன் பாதமேற் கண்ணீ
ராட்டிச் சொன்மல ரணிந்துதற் போதலின் னமுதை
யூட்டித் தற்பரஞானமா மோம வெங்கனலை
மூட்டிச் சம்புவின் பூசைமேன் முயற்சியரானார்

என திருவிளையாடல் புராணத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

பாநீயம்

வாசனை பொருந்திய தீர்த்தத்தைச் சிவபெருமானுக்காக அளித்தல்.

செப சமர்ப்பணை

சிவ மூலமந்திரத்தை நூற்றெட்டு முறைக் கூறி அதை சிவனிடத்திலே ஒப்படைத்தல். இதனால் ஆன்மா சர்வ குணங்களிலிருந்து விடுபட்டு மோட்சத்தை அடைவதாகும்.

எல்லா நன்மையு மெய்துதற் பொருட்டு
நல்ல செபத்தை நயந்து நிவேதித்து

என சமர்ப்பித்தலாகும்.

ஆராத்ரிகம் (தீபாராதனை)

பல வகையான தீபங்களை மாலைநேரத்தில் ஐந்து தட்டுகளும், குடமும் தீபமாகக் காட்டுவர். ஐந்து தட்டுகள் ஈசான முதலியவற்றையும், குடம் சதாக்கிய தத்துவத்தையும் குறிப்பதாகும். ஈசானம் முதலிய சாதாக் கியத்தில் ஒடுங்கும். அச்சாதாக்கியமும் சிவத்திலே ஒடுங்கும் என்பதாகும்.

கடைசியில் கற்பூரம் காட்டுவது கற்பூரம் வெண்மை நிறத்தைப் பொருந்தி, அக்னி பற்றியதும் அதன் வடிவமாக விளங்கி, ஒரு பற்றுமில்லாமல் முற்றும் கரையப்பெற்று ஆகாயத்துடன் கலந்துவிடுவதை போல், ஆன்மாவானது சத்துவ குணத்தை அடைந்து ஞானமாகிய அக்னியுடன் சம்பந்தம் பெற்று மூவகைச் சரீரங்களும் எல்லாப் பற்றுக்களும் நீங்கி பரமுத்தியை அடைவதாகும்.

அக்னிகர்ப் பூரத்தை
அறவிழுங்கிக் கொண்டாற்போல்
மக்கினம் பட்டுள்ளே
மருவி இருந்தாண்டி

என்று பட்டினத்தாரும்,

தீதனையாக் கர்ப்பூர தீபமென நான்கண்ட
சோதியுட னொன்றித் துரிசறுப்ப தெந்நாளோ

என்று தாயுமானவரும் குறிப்பிடுவதால் தீபாராதனையின் சிறப்பை அறியமுடிகிறது. சிவபெருமானுக்கு அட்ட புட்பம் சாத்துவதால் கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு முதலியவற்றை பெறுவதாகும்.

வலம் வருதல்

கோபம் முதலியவற்றை நீக்கி மோட்ச சுத்தி, மல நிவாரணம், திருவருட்பேறு பெற ஆன்மாவாவது அருளின் வாயிலாக பெறுவதாகும்.

பூசையின் முடிவில் ஆன்மா பிரம்மா, விஷ்ணுவின் தொழிலையும், ஞானகிரியைகளை நீக்கி சிவனிடத்தில் சேருவதாகும்.

அயன்மா லிருவர் கீழாகையின்
பொருட் டுச்சதா சிவரூபம்
சயமாண் புறவெதிற் தண்டம் பண்ணி

என்பதால் விளங்கும்.

இவ்விதமாக கோயில்களில் நடத்தப்படும் தரிசனம், யாகம், உற்சவம் முதலான ஒவ்வொன்றும் சமய உண்மைகளை உட்கொண்டே விளங்குகின்றன. இதனை சிவஞானபோதமும்,

செம்மலர் நோன்றால் சேர லொட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே

எனவும், திருநாவுக்கரசரும்,

ஆக்கை யாற்பயனென் அரன்
கோயில் வலம்வந்து
பூக்கை யாலட்டிப் போற்றிஎன் னாதஇவ்
வாக்கை யாற்பயனென்

என்பதால் சிவாலயங்களுக்குச் சென்று வழிபடும் மாண்பையும், எடுத்த பிறவியின் பயனையும் எடுத்துரைக்கின்றனர்.

சிவாலய தரிசனம்

கதிரவ னொடுங்குங் காலம்
இரண்டரைக் கடிகை யென்ன
அதிரபுவ லமையுந் தானம்
அடைந் துமெய்ச் சுத்தி செய்தே
முதிரனுட் டானம் செய்து
மொய்த்தகண் மணியும் பூண்டு
பிதிர்தலில் அன்பு வாய்ந்து
பிறங்குவார் குழாத்தி னோடும்.

சூரியன் மறைவதற்கு இரண்டரை நாழிகைக்கு முன் (2½ நாழிகை 1 மணி) நீர்நிலையை அடைந்து உடம்பைத் தூய்மை செய்து விதிப்படி அனுட்டானம் செய்து, உருத்திராக்கம் தரித்துக்கொண்டு நீங்காத அன்புடைய சிவநேசச் செல்வர்களோடும் திருக்கோயிலுக்குப் போகவேண்டும்.

குறிப்பு: சிவதரிசனம் அதிகாலையில் செய்தால் இரவிலே செய்த பாவம் போகும். மதியம் செய்தால் பிறந்தநாள் தொடங்கிச் செய்த பாவம் போகும். மாலைக் காலத்திலே செய்தால் ஏழு பிறவிகளில் செய்த பாவம் போகும்.

சோமவாரம்: அட்டம், பிரதோசம், பௌர்ணமி, அமாவாசை, திருவாதிரை, உத்தராயணம், தட்சிணா யணம், சித்திரை, ஐப்பசி, மாதப்பிறப்பு, சூரிய கிரகணம், சந்திர கிரகணம், சிவராத்திரி முதலிய புண்ணிய காலங்களில் சிவனைக் கண்டு வணங்கினால் மிக மேலான புண்ணியங்கள் உண்டாகும்.

பிரதோசக் காலத்தில் மெய்யன்பரோடு சிவனைக் கண்டு வணங்கினால் கடன், வறுமை, நோய், பயம்,

துன்பம், மரணவேதனை, பாவம் என்னும் இவைக ளெல்லாம் நீங்கும். முத்தி சித்திக்கும். சைவ சமயத்தவர்கள் விபூதி, உருத்திராக்கம் மட்டுமாவது தரித்துக் கொண்டால் போதுமானதாகும். அவர்கள் சிவனடியார்களே எனச் சைவ நூல் கூறும்.

தேங்கங்காய் அரம்பை யீன்ற தீங்கனி நறுங்கற் பூரம்
துங்கமா ரடைகா யேனும் கிடைத்ததூக் கனிக ளேனும்
பங்கஞ்சா ராது கொண்டு பரமனா லயத்திற் செல்க
அங்கவை அரிதேல் முற்றத் தமைதரு துரா லொழிக்க

தேங்காய், இனிய வாழைப்பழம், கற்பூரம், பாக்கு, வெற்றிலை அல்லது கிடைத்த கனிகள் ஆகிய இவற்றை அரைக்குக் கீழ்ப்படாது மேலே உயர்த்தப்பெற்ற கைகளால் ஏந்திக் கொண்டு போகவேண்டும். குறிப்பாக சிவபெருமானது திருக்கோயிலுக்கு வெறுங்கையோடு போகக்கூடாது. பொருளில்லாதவன் இலை, மலர் கொடுத்தாவது வணங்கவேண்டும். கண்டிப்பாக சந்நதியினுள்ளே செருப்பு, சட்டை, பனியன், லுங்கி முதலியவற்றை அணியாமல் சென்று வணங்கவேண்டும்.

இனமறை புகழுந் தூல லிங்கமென் றுரைக்கப்பட்ட
கனககோ புரமுன் தாழ்ந்து கனிந்தசிந் தையினுட் புக்குப்
பகைபூ டணவே ரம்பப் பண்ணவன் பாதந் தாழ்ந்து
மனனமா நந்திப் புத்தேன் மருங்கடைந் திறைஞ்சல் செய்து

தூலலிங்கம் என்று சைவ நூல்களில் கூறப்பட்ட திருகோபுரத்தைத் தாழ்ந்து வணங்கி கனிந்த சிந்தையுடன் உள்ளே புகுதல் வேண்டும். அங்கு முதலில் பாம்பை அணிந்துள்ள விநாயகப் பெருமானையும், இடபதேவ ரான நந்தியையும் வணங்கி பின் கோபுரத்தில் எழுந்தருளியுள்ள அதிகார நந்திசுவரரை வணங்கி,

அடியனேன் சிவபிரானைச் சேவிப்பான் அணைந்தேன் தீமை
கடிதரும் விடை கொடுத்துக் கடைக்கணிந் தருளு கென்று
படியுற இரந்து வேண்டிப் பயத்தொடு பத்தி மேவ
'முடியநீ போய்வா' என்று மொழிந்தரு ளியதா எண்ணி

அடியேன்! சிவபெருமானை வணங்கி வருவதற்கு அனுமதி செய்தருளும் என மனதார வேண்டி, அவர் "நீ போய் வா" என்று அனுமதிக் கொடுத்து பயபக்தியுடன் உள்ளே செல்லவேண்டும்.

இருகரங் குவித்துட் புக்காங்
கிலங்கறின் றாடு மையர்
பொருவில் குஞ்சிதத்தாள் போற்றிப்
புண்ணியச் சிவபிரான்முன்
மருவியங் காதி சைவன்
மலர்க்கையி னனைத்து நல்கி
யொருவற வனையான் செய்யும்
உபசாரம் அனைத்து நோக்கி

கோயிலுக்குள் இரு கைகளையும் குவித்துக் கொண்டு சபா மண்டபத்திலே நடனஞ் செய்யும் ஆனந்த நடராசப் பெருமானது எடுத்த திருப்பாதத்தை வணங்கிக் கொண்டு சிவனது சந்நிதியை அடையவேண்டும். அங்கு ஆதி சைவ சிவாச்சாரியாரிடம் தேங்காய், பழம் முதலியவற்றைக் கொடுத்து அவர்கள் செய்யும் அனைத்தையும் கண்டு ஒன்றிய உள்ளத்தோடு கண்டு வணங்கிட வேண்டும்.

நிறையருட் பாட லாகி நிரம்புதே வாரம் யாரும்
அறைதிரு வாச கஞ்சீ ரமையிசைப் பாபல் லாண்டு
குறைதவிர் புராண மின்ன கொண்டுறத் துதித்தல் செய்து
மறைபுகல் விபூதி மேனி வளைந்திரு கையால் ஏற்று

அருளாளர்களாகிய சைவ சமயாசாரியர்கள் அருளிய தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருத்தொண்டர் புராணம் ஆகிய தமிழ்ப் பாடல்கள் துதித்துப்பாடி வணங்கவேண்டும். சிவாச்சாரியார் தரும் விபூதியைத் தாழ்ந்து இருகரம் நீட்டி வாங்கிக்கொள்ள வேண்டும்.

குறிப்பு: திருக்கோயிலில் ஓதத் தக்க பாடல்கள் தேவாரம், திருவாசகம் முதலான திருமுறைகளே ஆகும். இதர பாடல்கள் ஓதத் தக்கனவல்ல. பூசனைச் செய்யும் குருக்களுக்கு இயன்ற பொருளுதவி செய்தல் நல்லது.

சிறிகன்றணுவு மண்ணிற் சிந்திடா வகை தரித்துக்
குறிதரு சோமாக் கந்தர் குரவனா யமரு மையா
செறிபுகர் முகத்தே ரம்பர் சேவலங் கொடிப்பி ரானார்
முறிவறும் இவரைப் போற்றி வலஞ்செயல்முறை மையாமால்

பின்பு சிறிது அகன்று திருநீற்றை நிலத்திலே சிந்தாத வண்ணம் அண்ணாந்து "சிவசிவ" என்று கூறி நெற்றி முதலிய இடங்களில் அணிதல் வேண்டும். பின்பு சோமாஸ்கந்தர், பரிவாரத் தெய்வங்கள், தட்சிணாமூர்த்தி, விநாயகர், முருகர் முதலானோரை வணங்கி வலமாக வரவேண்டும்.

இருகர சலன நீக்கி இயைதரக் குவித்துக் கொண்டு
பொருவரு பெருமான் பாத தாமரை யுளம்பொ ருந்தி
வெருவறச் சிந்தித் தேனும் அவன்துதி விரித்திட் டேனும்
ஒருவரு மிரண்டு நீங்கா தொண்மையி னியற்றி யேனும்

வலம் வரும்போது இரண்டு கைகளையும் வீசிச் செல்லாமல், நெஞ்சுக்கு நேராக கைகளைக் குவித்துக் கொண்டு சிவபெருமானது திருவடிகளைச் சிந்தித்துக் கொண்டோ, பாடல்கள் சொல்லிக் கொண்டோ அல்லது இரண்டும் செய்து கொண்டோ வலம் வரவேண்டும்.

குறிப்பு: முதல் திருச்சுற்றில் சிவனைப் புனித நீராட்டும் காலத்தில் உட்திரிச்சுற்று வலம் வருதல், வணங்குதல் கூடாது.

அறைபெரும் பத்தி வாய்ந்த அறுபத்து மூவ ராய
நிறையுடை யரைத்து திக்கி னிகழுந்தற் றுதியின் மேலும்
குறைவிலா மகிழ்ச்சி யம்மான் கூறாமற் றதனால் அந்த
முறையுண்ட யரைச்சித் தித்து முனிவறத் துதிசெய் தேனும்.

(இது இரண்டாவது சுற்று)

இடைவெளி தோற்று றாமல் இனிதடி யெடுத்து வைத்தும்
இடைதர முக்காற் சூழல் விதிமேலு மியம்பா நிற்பர்
கடைபடு குணுங்கே யாவன் கைகளை வீசிச் செல்லின்
உடையிராக் கதனா மார்பின் உறப்பிணித் தடையின் மாதோ.

வலம் வரும்போது இடைவெளி விடாமல் அடிமேல் அடி எடுத்து வைத்து மூன்றுமுறை வலம் வருதல் உத்தமம். அதற்கு மேலும் 5, 7, 9, 15, 29 தரமும் வலம் செய்தல் உண்டு. கைகளை வீசிச் செல்பவன் பிசாசு எனப்படுவான். கைகளை மார்பில் கட்டிக் கொண்டு செல்பவன் இரக்கதன் எனப்படுவான்.

வலம் வரும்போது இவைவனுக்கு முன்னுள்ள பலி பீடத்தையும், நந்தியையும் சேர்த்து வலம் வரவேண்டும். அங்குப் பலிபீடமும், நந்தியும் இல்லையென்றால் அதற்கு வெளிச் சுற்றிலுள்ள பலிபீடத்தையும், நந்தியையும் சேர்த்து வலம் வரவேண்டும். சிவலிங்கத்துக்கும் அந்தந்த சுற்றிலுள்ள பலி பீடத்திற்கும், நந்திக்கும் இடையில் வலம் வரக்கூடாது.

அஞ்சலி செய்து சூழின் அமரனே யாவ னாலென்
றெஞ்சலில் சிவாக மங்கள இயம்பலின் இந்த வாறே
மஞ்சவிர் கோயில் சூழ்ந்து(ம்) ஆண்டதண் டீசர் பாற்போய்
தஞ்சமென் றிருகை தட்டித் தரிசன பலனை யின்று.

கைகளைக் கூப்பி வணங்கக் கூடியவர்களை தேவன் எனப்படுவான் என சிவாகமங்களில் கூறப்பட்டுள்ளது.

இங்ஙனம் மூன்றுமுறை வலம் வரும்போது சிவபெருமானால் சண்டேசருடைய திருச்சந்நிதியை அடைந்து வணங்கவேண்டும். இதனை திருநாவுக்கரசர் தேவாரத்தில் 'கைகால் கூப்பித்தொழீர்' என வலியுறுத்தி யுள்ளதைக் காணமுடிகிறது.

பெற்றனன் அடியேன் என்று பேசியஞ் சலித்த பின்னர்
அற்றமி லுமையாள் கோயில் அடைந்துப சார மாய
முற்றவும் முன்போல் ஆற்றி முனிவற நோக்கிப் போற்றிக்
குற்றமில் விபூதி யோடு குலவுசெஞ் சாந்து மேற்றே.

'அடியேனன் பெற்றனன்' என்று கூறி வணங்கிக் கொண்டு அம்மையார் கோயிலுக்குச் செல்லவேண்டும். அங்கு முன்போல் வணங்கித் துதித்து விபூதியும் செஞ் சாந்தும் எனும் குங்குமத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

குறிப்பு: அம்மையார் சந்நிதியிலும் விபூதி கொடுக்கப் பட்டது என்றும், கொடுக்கப்படவேண்டும் என்றும் இதனால் அறியப்படுகிறது. செஞ்சாந்து என்பது தேவாரத்தில் 'குங்குமக்குழம்பு' என வருவதால் தூளாகக் கொடுக்காமல் சந்தனம்போல் கொடுக்கப்பட்டது என அறியமுடிகிறது.

உறுவல மாகச் சூழ்போந் துயர்கொடி மரப்பாற் போந்து
மறுவில்ட் டதங்க மாக வணக்கமோ ரைங்காற் செய்து
பெறுமுறை யாங்க மர்ந்து பிறங்கிய மூலம் நூறு
மறுதிசெ யகோர நூறும் அடைவுறக் கணித்தல் வேண்டும்.

பின்பு வலமாக வந்து கொடிமரத்தின் கீழ்புறத்தில் வடக்கே தலைவைத்து அட்டாங்கமாக ஐந்துமுறை வணங்குதல் வேண்டும். பெண்கள் பஞ்சாங்கமாக வணங்க வேண்டும். பின்பு வடக்கு நோக்கி மூல மந்திரத்தை நூறு முறையும், அகோர மந்திரத்தை நூறுமுறையும் கூறித் திரும்பவேண்டும்.

குறிப்பு: அட்டாங்கமாக வணங்குதல் என்பது தலை, கை இரண்டு, செவி இரண்டு, மோவாய், புயங்களிரண்டு என்னும் எட்டு உறுப்பும் நிலத்திலே தேயும்படி வணங்குவ தாகும். அதாவது தலையை வைத்து மார்பு பூமியிலே படும்படி வலக்கையை மடக்கி, வலப்புயமும், இடப் புயமும் மண்ணிலே பொருந்தும்படிக் கைகளை அரையை நோக்க நீட்டி வலக்காதை முன்னும் இடக்காதை பின்னும் மண்ணிலே பொருந்தச் செய்வதாகும்.

பஞ்சாங்கமாக வணங்குதல் என்பது தலை, கை இரண்டு, முழந்தாளிரண்டு என்னும் ஐந்து உறுப்பும் நிலத்திலே தோயும்படி வணங்குவதாகும். கிழக்கு, வடக்கே கால் நீட்டலாகாது. இவை மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பன்னிரண்டு தரமாவது வீழ்ந்து வணங்குதல் ஆகாது. திரும்பும்போது சிவபெருமானுக்கும், நந்தித்தேவருக்கும் புறங்காட்டாமல் திரும்பவேண்டும்.

நடராசர் தத்துவம்

நடராசப்பெருமான் எல்லாவற்றையும் கடந்த சிவம் 'சிவனுரு அருவுமல்லன்' சித்தனோடு அசித்துமல்லன். 'பலமுதல் தொழில்கள் ஒன்றும் செய்பவனும் அல்லன்' என்ற நிலையினின்றும், கலந்த நிலையைக் கருதுகின்றபோது சந்தியாகிய இயற்கையோடு கூடுபவர். அப்போதும் அறிவால் அறியப்பெறும் மந்திரவடிவை

முதன் முதலில் தாங்குகிறார். மந்திரங்களின் ஒலி சத்தி, அதன் பொருள் சிவம். ஒளியும் பொருளும் கூடிய சொல் வடிவை முதன்முதலில் தாங்குகிறார். மந்திரங்களின் ஒலி சத்தி: அதன் பொருள் சிவம். ஒளியும் பொருளும் கூடிய சொல்வடிவமே சிவத்திருமேனி. ஒலியலைகள் வளைவுகாகப் பரவுந்தன்மை உடையன. ஒலி வடிவமான சிவகாமிச் சத்தி மூன்று வளைவுகளுடனும், அவ்வளைவு களில் இடைவளைவு மிகுந்த கழுத்து வளைவு முக்கால் வளைவு சிறிதாக இருப்பது ஊன்றியறியத் தக்கது. இவ்வொலி விரைந்து சென்று ஆகாயத்தில் பரவும் தன்மையுடையது.

ஒலி பரவும்போது பொருளும் பரவும் என்பதால் ஒலியும் பொருளும் பிரிக்கமுடியாதது போன்று சொல்லும் பொருளும் போலச் சிவசக்திகள் பிரிக்க முடியாதவை என்று காளிதாசர் கூறுகின்றார். அத்தகைய கணித நிலையிலுள்ள சிவன், கலையால் வளைந்து இருபத்தைந்து வடிவங்கள், அறுபத்து நான்கு வடிவங்கள், ஆயிரமாயிரம் வடிவங்களாகக் காட்சியளிக்கின்றார். அவற்றுள் ஒன்றே கூத்தன் திருவுருவாகும்.

சிவன் ஆடுமிடம் எட்டும் இரண்டும் பத்து. பத்தில் தமிழ் வடிவம் 'ய' என்பது உயிரைக் குறிக்கும் எழுத்தாகும். ஆகவே உயிரினிடமாகவே இறைவன் மந்திர வடிவமாக இருந்து அதாவது 'சிவாயநம' என்னும் திருவைந்தெழுத்தாய் அபாயமற நின்று ஆடுகிறான். ஆகவே அவன் ஆடுமிடம் உன்னில் உருவம் உணர்வுருவம், உணர்வு மந்திரம் என்பதாகும்.

ஐந்தெழுத்து வடிவப் பொருள்

அம்பலக் கூத்தனுடைய திருவடி நகரம்; வயிறு மகரம், தோள் சிகரம், முடி யகரம், மல மாயா கன்மங்

களோடு கூடி அதுவே அதுவாக மயங்கிக் கிடக்கின்ற உயிர்களுக்கு இறைவன் திருவடி நகரமாகிய திரோதான சத்தியாக இருந்து உயிர்ளைத் தன்னிடத்தே கூட்டி, என்னையும் உன்னையும் அறியாமல் இதுவரை மறைந்திருந்த மாயத்தைப் பார்த்தாயா என்று உதிரத்திலே மகரத்தைக் காட்டி எங்கும் பரவியிருப்பதே சிவமாகிய பரம்பொருள் என்பதை உணர்ந்து வீசி நின்றாடும் தோள்களாகிய சிகரத்தால் உணர்த்தி சொல்வதைப் போன்று வழங்குமுகமாக லகரத்தைக் காட்டி, அவ்வண்ணம் அனுபவம் முதிர்ந்த ஆன்மா முடியாக விளங்கும் என்பதையே இறைவன் திருநடனம் உணர்த்துகிறது. இந்த நடனம் மல மாயைகளோடு தொடர்ந்துள்ள ஆன்மாக்களை எல்லாம் வல்ல இறைவன் வெளிவந்த கருணையால் இறங்கி வந்து காட்டையும் வீட்டையும் அருள்வதால் 'ஊன நடனம்' என்று அழைக்கப்டும். இதனையே திருவருட்பயன் எனும் நூலில்,

ஊன நடனம் ஒருபால் ஒருபாலா
ஞானநடந் தான்நடுவே நாடு

என்று உணர்த்துகிறது. உயிர்கள் கூத்தனைக் கும்பிடப் போகின்றபோது இத்தகைய அருள் அனுபவக் குறிப்பில் நின்று கும்பிட்டால் அடுத்த ஞான நடனம் அனுபவம் சித்திக்கும். இதுவே மலச்சேற்றில் அழுந்திய ஆன்மா கரையேறி உயர்ந்த நிலைக்கு உயர்த்தும் சாதனம்.

ஞான நடனம்

கூத்தப்பெருமானின் கையில் ஏந்திய உடுக்கையில் சிகரமும், தோள் கரமாகிய வீசிய கரத்தில் லகரமும், அபயகரத்தில் யகரமும், அகலில் நகரமும், ஊன்றிய

திருவடியின் கீழ் மகரமும் ஆகக்கொண்டு ஓங்காரத் திருவாசியின் நடுவில் நின்ற சுடராகப் பெருமான் நடனம் செய்கின்றார். இங்ஙனம் உணர்ந்து நிற்கும் உயிரே மல மாயைகள் கெட்டு, சிவசக்திகளின் இடையில் இடையூறு யின்றி மீண்டும் மல மாயைகள் தாக்காதபடி நிலைத்த இன்பத்தில் வாழும்.

இத்திருவுருவத்தை,

சேர்க்கும் துடிசிகரம் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம் - பார்க்கில் இறைக்(கு)
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரமது தான்

எனவும்,

ஓங்கார மேதல் திருவாசி உற்றதனில்
நீங்கா எழுத்தே நிறைசுடராம் - ஆங்காரம்
அற்றார் அறிவரணி அம்பலத்தான் ஆடலிது
பெற்றார் பிறப்பற்றார் பின்

எனவும் மேற்கண்ட கருத்தை இப்பாடல்கள் வழி விளக்குகிறது.

இவ்வாறு ஆன்மாக்களுடைய பரிபாக நிலைக்கு ஏற்ப ஆடுகின்ற பெருமான் ஐந்தொழில்களையும் தனித்தனியே நின்றும் இயக்குகின்றார். ஒருசேர நின்றும் ஆடுகின்றார்.

இதுமுதல் தொழிலாகிய ஆக்கல் தொழிலைக் குறிக்கும் தாண்டவம் காளித்தாண்டவம் எனப்படும்.

இறைவனுடைய இரண்டாவது தொழிலாகிய காத்தலைக் குறிப்பது கௌரி தாண்டவம.

மூன்றாவது செயலாகிய சங்காரத்தைக் குறிப்பது சங்கார தாண்டவம்.

நான்காவது மறைத்தல் செயலைக் குறிப்பது திரிபுர தாண்டவம்.

ஐந்தாவது செயலாகிய அருளும் தன்மையைக் குறிப்பது ஊர்த்துவ தாண்டவம். இது காளியின் அகங்காரத்தை அடக்க ஆடியதால் காளி தாண்டவம் எனவும் வழங்குவர்.

இந்த ஐந்து தாண்டவங்களும் தனித்தனியே ஒவ்வொரு தொழிலைக் குறிப்பன. ஐந்து தொழிலையும் ஒருங்கே செய்கின்ற தாண்டவமே ஆனந்தத் தாண்டவம். அதில் துடியில் தோற்றமும், அமைப்பில் திதியும், அங்கியில் சங்காரமும், ஊன்றிய காலில் திரோதனமும், தூக்கிய காலில் அருளாலும் அமைந்திருப்பதை உண்மை விளக்கம் எனும் நூலில்,

> **தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்**
> **சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் – ஊற்றமா**
> **ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி**
> **நான்ற மலர்ப்பதத்தே நாடு.**

என விளக்குகிறது. இவ்வண்ணம் ஆனந்தத் தாண்டவத்தின் அமைப்பு ஐந்தொழிலும் கூத்தாக அமைந்துள்ளது.

விராட்சொரூபன்

இறைவனுக்கு உலகமே வடிவாக அமையும் பொழுது எட்டுத் திசைகளும் அவன் கைகளாகின்றன. அதனால் நான்கு கரங்கள், எட்டுக்கரங்கள், பதினாறு

கரங்கள் என நடராசத் திருவுருவம் அமைந்துள்ளது. எட்டுத் திசைகளோடு விண்ணும் மண்ணுமாகிய மேற்றிசை, கீழ்த்திசை இவைகளையும் சேர்த்துப் பத்துத் திசைகளும் பத்துக் கரங்களாக அமையும் என்று காமிகாகமம் கூறுகிறது.

அவருடைய திருவடிகள் நம்மைப்போல் வழி நடக்கவும், தீயபுலன் நற்பலன் முதலியவைகளை மதிக்கவும் ஏற்பட்டன அன்று, இரண்டும் இரணடு ஆற்றல்களைக் கொண்டுள்ளன. ஒன்று மறைப்பு ஆற்றல், மற்றொன்று அருளாற்றல், மறைப்பாற்றல் இல்லை யானால் உயிர்கள் வினைகளை அழுந்தி, அனுபவிக்காது. ஆதலால், அவையும் வினைப் போகங்களை அழுந்தி அனுபவிக்கச் செய்யவும், மலபரிபாகம் இருவினையும் சமமாக வருவிக்கவும் மறைப்பாற்றல் இன்றியமையா தாகிறது. இதனைத் திருமூலர்,

> அரனுற் றணைப்பில் அமருந் திரோதாயி
> அரனடி என்றும் அனுக்கிரகம் என்னே

என வரும் திருமந்திர பாடலால் அறியமுடிகிறது.

இருவினைக்குச் சமமாக மலபாரிகம் வந்த உயிர்கள் இறைவன் அருளை முழுவதும் ஏற்கத் தகுதியுடையன ஆகின்றன. அத்தகுதியை வருவிப்பது தகுதிபெற்ற உயிர்களைத் தன்னிழல் தந்து காப்பதும் குஞ்சிதபாத மாகிய தூக்கிய திருவடியே ஆகும். இந்தத் திருவடிகளில் திரோதானத் திருவடி, யான் எனது என்னும் இருவகைப் பற்றையும் ஒழிப்பது. தூக்கிய திருவடியோ பற்றுவிட்டுப் பற்றற்றான் திருவருளைப் பற்றிய உயிர்களைப் பேரின்ப நிலையில் நிறுத்தச் செய்வதாகும்.

முக்கண்

கண் ஒளிப்பொருள், ஒளியின்றிப் பொருள் உணர்ச்சி இல்லை. அறிவுணர்ச்சி இல்லை. உணர்ச்சியை ஊட்டவல்ல புறச்சோதியாகிய சூரியன், சந்திரன், தீயாகிய முச்சுடர்களை மூன்று கணகளாகக் கொண்டு இறைவன் விசுவரூபனாக விளங்குகிறான். அன்றியும், இச்சாஞானக் கிரியைகளாக இறைவன் திருக்கண்கள் விளங்குகின்றன என்று காமிகாகமம் கூறுகிறது.

இதனையொற்றியே அகோர சிவாசாரியார் போன்ற சமய சித்தாந்த செயல்முறைகளை விளக்கி யவர்கள் இறைவன் கண்கள் இச்சாஞானக் கிரியைகள் என்றும், சோம சூரிய அக்கினிகள் என்றும் விளக்கு கின்றனர். இதனைப் பட்டினத்தடியார்.

முக்கணன் என்பது முத்தி வேள்வியில்
தொக்கது என்னிடை என்பது ஓர் சுருக்கே

எனும் பாடலில் விளக்குகிறார்.

குமிண் சிரிப்பு

ஆனந்தக் கூத்தனுடைய திருமேனி அமைப்பில் அவர் முகத்தோற்றமே தனிச் சிறப்புடையது. அதிலும் புன்முறுவலுக்குள்ள அழகு மிகவும் உயர்ந்து. திருநாவுக் கரசரின் மனத்தைக் கவர்ந்த ஆற்றலுடையது என்பதை தேவாரத்தில், "கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்" என்ற பாடலால் அறியப்படுகிறது. அந்தச் சிரிப்பு வெறும் நகைச் சிரிப்பன்று. "உள்ளதன் மலம் வாட்டி வினை கெடுத்து நிலையளிக்கும் புன்முறுவல்" என்கிறார். ஆதலால் புன்முறுவல் உயிர்களுடைய இருவினைகளைக் கெடுப்பது. இருவினைகளோ ஆகாமியம் சஞ்சிதம்

பிராரத்தம் என்ற மூன்று புரங்களை அழித்து வழிகண்டது. ஆதலால் இந்த மூன்று வினைகளையும் அழிப்பது. "இடர் மூன்றும் இழித்தருளும் இளமுறுவல் முகமலரிலங்க என்னும் சிவதருமோத்திரத்தாலும் வலியுறுத்துகிறது.

சடைமுடி

ஞானியர் அடையாளம் 'சடைமுடி'. எல்லா வற்றையும் முற்ற உணரும் பெருஞானியாக விளங்குபவர் இறைவன். ஆதலால், ஆன்மாக்களுக்கு ஞானம் அருள வேண்டிச் சடையைத் தரித்திருக்கிறார். பனித்தசடை, செஞ்சடை என்பன திருமுறைகளில் சடையைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இவற்றால் சடையின் நிறமும், தன்மையும் அறியப்படுகின்றன. "நுண்சிகை ஞானமாம்" என்பது திருமந்திரம். இச்சடையில் முடிச் சடையும் பரந்த சடையும் உண்டு. முடிச்சடை ஒன்றுபட்டுக் குவிந்த ஞானத்தையும், பரந்த சடை விரிந்து உலகுயிர்களுக்கு ஞானமூட்டும் பரந்த நிலையையும் உணர்த்துகின்றன.

பிறை

இறைவன் திருமுடிக்கண் உள்ள பொருள்கள் பிறைமதி, ஊமத்தம்பூ, கங்கை முதலியன. இவற்றுள் பிறைமதி இறைவனுடைய அளவிலா ஞானத்தை அறிவிப்பது என்று காமிகாகமம் கூறுகிறது. பட்டினத் தாரும் தம் பாடலில்,

> **தூமதி சடைமிசைச் சூடுதல் நூநெறி**
> **யாமதி யானென அமைந்த வாறே**

என்று குறிப்பிடுகிறார். இறைவனுடைய அருளாற்றல் முழுவதும், ஆன்மாக்களுக்கு வினைகொடுத்து மேலான

பதவி அளிப்பதற்கே பயன்படுத்தப்படுகிறது. அதுபோல பிறைமதியும் முழுமதியாய், செருக்குற்றுத் திரிந்து, தக்கன் முதலியோர் சாபமேற்றுத் தேய்மதியாகித் திருவடி அடைந்த பொழுது இறைவன் அதன் சாபத்தை நீக்கித் திருமுடிமேல் வைத்த நிகழ்ச்சியாதலால் வினைகொடுத்து உயர்வு அளிக்கும் குறிப்பை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

கங்கை

வணங்கிய கரங்களோடு கங்கை சடைக்கண் சிக்கி விளங்குகிறாள். இது இறைவனுடைய எண் குணங்களுள் அளவில்லாத ஆற்றலை உணர்த்துகிறது. காலந்தோறும் பெருகிக் கொண்டே இருக்கும் கங்கையும் ஓர் மயிர்க் காலில் கட்டவல்ல கணக்கற்ற ஆற்றலை உணர்த்துவதாகும்.

ஊமத்தமலர்

இறைவன், திருமுடியில் அறுகு, எருக்கு, ஊமத்தம்பூ, கபாலம் இவற்றை அணிந்திருக்கின்றார். அறுகு அறிவின் நுணுக்கத்தையும், எருக்கு விளக்கத்தையும், ஊமத்தம்பூ விருப்பு வெறுப்பற்ற தன்மையையும், கபாலம் என்றும் மங்களத்தையும் குறிப்பதாகும்.

திருவெண்ணீறு

இறைவனது பவளம் போன்ற மேனியில் பால் வெண்ணீறு விளங்குவதாகத் திருநாவுக்கரசர் தெரிவிக்கிறார். இச்சிறப்பை திருஞான சம்பந்தரும், "பராவண மாவது நீறு" என்று பாடுவதால் திருநீறு பராசக்தியின் வடிவாய் இறைவன் மேனி முழுவதும் பிரிப்பின்றிக் கூடியிருப்பதைக் காட்டுகிறது. அகத்தியத் தேவாரத் திரட்டில் பதிகக் கருத்தாக வரும் இடத்தில் "மலவாத.......நீற்றுக் கொடியை நேர்பட எடுத்தும்"

எனவரும் சான்றானது உயிர்களுடைய பாசவல் வினையைப் போக்க விசுவரூபியாகிய இறைவன் மேனி முழுவதும் திருநீறு அணிந்திருக்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

இதனையே உமாபதி சிவாசாரியாரும் பாசமும் அங்கது கழியப் பண்ணும் திருவெண்ணீறும் என்று அருளுகின்றார் மற்றும் திருநீறு முடிந்த முடிபு. திருநீறு சாணத்திலிருந்து ஆக்கப்படுவது. சாணம் கரிதாய் கெடுக்கும் தன்மையதாய் இருப்பது. அதனைத் தீயால் கடின் குற்றங்கள் அனைத்தும் நீங்கித் தூய வெண்ணிறு ஆகிறது. அதுபோல் குற்றங்கள் அனைத்தும் நீங்கித் தூய வெண்ணீறு ஆகிறது. அதுபோல் ஆன்மாக்களுக்கும் தம் தன்மை கெட்டால் தூய பொருளாக விளங்கும் நிலையை உணர்த்துகிறது. சுட்ட திருநீற்றைக்கடினும் நிறம் கூட்டப்படினும் தன் வெண்மைத் தன்மையை இழந்து போவதில்லை. மாற்றமுமில்லாத தனிப்பொருளாய் விளங்குகிறது. அதனை இறைவன் திருமேனியில் தரித்திருப்பது தானும் தன்னைச் சாரும் பொருளும் அநாதி நித்தியமானவை என்பதை உணர்த்துகிறது. இவற்றைக் கொண்டு திருநீறு பராசக்தியின் வடிவாய், மலங்கெடுப்பதாகவும், அநாதி நித்தியப் பொருளாக விளங்குவதாகவும் இருப்பதை உணர்த்துகிறது.

திருச்செவி

இறைவனுடைய திருச்செவியில் பரநாதம்பரவும் பராகாச வடிவானவை. பராகாசம் எங்கும் பரவிய பிரணவ வடிவு என்பதால் உடுக்கையை ஒலித்து, அப்பரநாத ஒலியை வலச்செவியில் ஏற்று, ஒலியுலகை உண்டாக்கிக் கொண்டே இருக்கிறார். ஆகவே, இறைவன் திருச்செவியில் பராகாச வடிவாக ஒலிக்கிறது. இடச் செவியில் மானொலியை ஏற்கிறது.

மான் அகங்கார வடிவான உயிர் உலகத்தை அழிக்கும் ஒலியை உண்டாக்கியது. அதனை அடக்கித் திருச்செவியில் ஏற்று நிற்பது, தீய ஒலிகளையும் பரா காசத்தில் ஏற்று அடக்கியாளும் அருளாற்றலை அறிவிப்பதாக விளங்குகிறது.

தோடும் குழையும்

வலக்காதில் குழையும். இடக்காதில் தோடும் கூத்தப்பெருமானின் அணிகலன்களாகும். அதன் குறிப்பு ஆணொடு பெண்ணாய் அமைந்த இவ்வுலகம் தன்னுரு என்பதையும், வையகம் முழுவதும் தன் வடிவு எனப்படுமே என்பதையும் உணர்த்தும் திருக்குறிப்பாகும். வலக்காது துடியோசையாகிய ஒலியுலகப் படைப்புககு இடம தந்து நிற்பதையும், இடக்காது அழிவாற்றலையும் அடக்கி ஆளுவதாகிய அருளாற்றலையும் அறிவிப்பதே சிவசக்திகளின் தனித்தன்மை என்பதை விளக்குகிறது.

நீல கண்டம்

இறைவனுடைய அருளாற்றலை விளக்கும் முகமாக மாணிக்கவாசகர் குறிப்பிடுகையில்,

கோலால மாகிக் குரைகடல்வாய் அன்றெழுந்த
ஆலாலம் உண்டான் அவனசதுர்தான் என்னேடீ
ஆலாலம் உண்டிலனேல் அன்றயன்மால் உள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் விடுவர்காண் சாழலோ

எனத் திருசாழல் பதிகத்தில் குறிப்பிடுகிறார். அதாவது அமரர் சாகும் நஞ்சை உண்டு தான் சாவாமையால் அவருடைய நித்தியத் தன்மையை விளக்குவதாகவும் அமைந்துள்ளது.

துடி

ஆனந்தக் கூத்தன் திருக்கரங்கள் நான்கினுள் பின்னதாகிய வலக்கரத்தில் துடி இருக்கிறது. இத்துடி யிலிருந்து எழுத்தோசை பிறக்கிறது. இந்த இசையோசயி

லிருந்து 'சரிகமபதநி' என்ற சுரங்கள் ஏழும் தோன்றின. இது அவனுடைய படைத்தல் தொழிலை அறிவிப்பதென உண்மை விளக்கம் எனும் நூலில் குறிப்பிடுகிறது.

சிதம்பர ரகசியத்தில் நாதமுனிவர் நடராசப் பெருமானை வணங்கி, 'ச ப' என்னும் இரண்டு சுரங்களையும், அதிலிருந்து இரட்டிப்பாக இருக்கும் 'ரிகமபதநி' என்கின்ற சுரங்களையும் தெரிந்து கொண்டு பன்னிரண்டு சுரங்களால் சங்கீத சாத்திரத்தைச் செய்தார். இதனால் உடுக்கையிலிருந்து 'ச ப' என்னும் இரண்டு பிரகதி சுரங்கள் உண்டாகின. இவை இரண்டிலிருந்து 'ரிகதமநி' என்னும் விக்ர சுரங்கள் உண்டாயின. இதனை மணிவாசகர் 'நாதப்பறையினர் அன்னே என்னும்' எனக் கூறுவதாலும் அறியமுடிகிறது.

தீயகல்

இறைவன் இடது கையில் தீயகல்லை ஏந்தி இருக்கிறார். இது அழிக்கும் செயலை அறிவிப்பதாகும். "அரண் அங்கதனில் அறையில் சங்காரம்" என்னும் திருமந்திரமும், "சாற்றிடும் அங்கியிலே சங்காரம்" என்னும் உண்மை விளக்கமும் இக்கருத்தை விளக்கு கின்றன. தீயகல் மாயா காரியமான தத்துவங்களைக் காட்டி உயிராகிய நீ அவற்றின் வேறானவன் என்ற உண்மை ஞானத்தை உணரச்செய்து பாசங்களை நீக்குவதால் காமிகாகமம் தீச்சுடரைச் சங்காரசத்தி என்று குறிப்பிடுகிறது.

அபயம்

பிறவிச் சுழலில் அகப்பட்டு வருந்தி ஓடிவந்த உயிர்களுக்கு அபயம் அளிக்கின்ற கை. இது வலக்கை களுள் ஒன்று. இதனைத் 'தோயிம் திதி அமைப்பில்' என்று உண்மை விளக்கம் காத்தல் தொழில் உடையதாகக் குறிப்பிடுகிறது.

கஜகசுதம்

இறைவனுடைய இடக்கையில் ஒன்று குறுக்காகத் திரிபதாகை முத்திரையோடு தூக்கிய திருவடியைக் குறித்து நிற்கிறது. இதுவே ஆனந்த நடனத்தில் வரதக சுதகமாகும். இது பரிபாகமுற்ற ஆன்மாக்களை நோக்கி 'இதுதான் நீ அடையக்கூடிய இன்பமயமான இடம் என்று சுட்டிக் காட்டுவதாக அமைந்துள்ளது.

பூணூல்

இறைவனுடைய திருமார்பில் குறுக்காக உந்தி வரை தொங்குவது. மூலதாரத்திலிருந்து நாபிக்கு மேலாகக் கிளர்ந்து எழும் குண்டலினியைக் குறிப்பது. இதனை, நூலது வேதாந்தம் எனத் திருமந்திரத்தில் குறிப்பிடுகிறது. வேதத்தின் முடியாகிய பிரணவ காயத்திரியைக் குறிக்கும்.

கோவணம்

உலகிலுள்ள அறுபத்து நான்கு என்று அறிவிக்கப்படு கின்ற எல்லாவகைக் கலைகளாலும் அறியப்படும் பரஞானக் கலையை நான்கு வேதங்களாகின்ற அரைஞாணிற்கோத்து அணிந்து இருக்கின்றார் என்று மணிவாசகப்பெருமான் கூறுகின்றார். ஆகவே கோவணமும் வேதமும் பரஞானமுமாம்.

சிலம்பும் கழலும்

இறைவன் திருவடிகளை அலங்கரிப்பன இவை இரண்டும் 'மறைச் சிலம்பு ஆர்ப்ப' எனச் சேக்கிழார் கூறுவதால் வேதங்களே சிலம்பாக விளங்குகின்றது. அங்ஙனமே 'கள்ள விளைவென்று பிறப்பறுக்கச் சாத்திய வீரக்கழலும்' எனக் கழலைப் பற்றிக் கூறும் போற்றிப் பஃறொடை, நம்முடைய வினைப்படலத்தை வென்று பிறப்பு அறுப்பது கழல் என்ற தத்துவத்தை விளக்குகின்றது.

தூக்கிய திருவடி

இது உள் வளைந்து, அடிக்கீழிருக்கும் உயிர்களுக்கு ஏற்ற முடிபோல விளங்கி முத்தி இன்பத்தை அளிப்பதாகும். 'திருவடி நெடுங்கரை சேர்த்துமா செய்யே' என்று திருவடியையே நெடுங்கரையாகச் சொல்லுகின்றார் பட்டினத்தார்.

ஊன்றிய திருவடி

ஒளி இருளில் தோயாமல், அதன் வியாபாகத்தை அடக்கி நிற்பது போல மாயாதீதமாகிய ஊன்றிய திருவடி முயலகனைத் தீண்டியும், தீண்டாத நிலையில், ஒளியும் இருளும் ஒன்றினால் இப்படித்தான் இருக்கும் என்பதைச் சுட்டுகின்றது.

முயலகன்

முயலகனை 'அபகமாரம்' என்று ஆகமங்கள் கூறுகின்றன. அவன் ஆணவமலத்தின் அடையாளம். ஆணவமலம் தலை எடுப்பதனாலேயே உயிர்கள் அணு என்னும் பெயரைத் தாங்கி, வினைக்கீடாக அவதிப்படுகின்றன.

அதனை வலியொடுக்க இறைவனால் அன்றி ஆன்மாக்களால் முடியவே முடியாது. அதனை அடக்கினால் உயிர்கள் வீடுபெறும் என்ற தத்துவத்தை உணர்த்துகின்றன. ஊன்றிய திருவடியும் அதன்கீழ் விழி பிதுங்க உடல் நெரியக் கிடக்கும் முயலகனையும் எடுத்துக் காட்டுகின்றன.

திருவாசி

'ஓங்காரமே நல்திருவாசி' என்பது உண்மை விளக்கம் எனும் நூல் விளக்குகிறது. கூத்தப்பெருமான் திருவுருவம் திருவைந்தெழுந்து வடிவு. எனவே பிரணவ மாகிய வித்தெழுத்தின்றி திருவைத்தெழுந்தை ஒலிப்பது

கூடாது. அம்மரபினை அறிவிக்க ஓங்காரத்தின் இடையில் திருவைந்தெழுந்து வடிவமாகக் கூத்தப்பெருமான் திருவுருவத்தை விளக்குகிறார். ஆகவே, திருவாசி இல்லாத கூத்தப்பெருமான் திருவுருவத்தை தரிசித்தலும், வணங்குதலும், வாழ்த்துதலும் கூடாது என்பது மரபு. திருவாசியின் மேல் விளங்கும் சுடர்கள் இருபத்தொன்று. அவைகள் அனைத்தையும் ஒளியின் உருவங்கள் என்பர். ஒளிக்கும் ஒலிக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. இரண்டும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாதன. ஆதலால் ஒளியிடையில் காணப்படும் ஒலியிடையில் ஐந்தெழுத்து வடிவமாகிய ஆனந்தக் கூத்தப்பெருமான் விளங்குகின்றார் என்பதை உணர வேண்டும்.

கபால மாலை

இருபத்தொன்று பிரம கபாலங்கள் இறைவனுடைய கழுத்தில் விளங்குகின்றன. ஆதிவராகத்தின் கொம்பும், அதனோடு கலந்து விளங்குகிறது. இவை இறைவன், எத்தனையோ பிரம கற்பங்களையும் ஆதிவராக கற்பகங் களையும் கடந்து என்றும் நித்தியனாக விளங்குபவன் என்பதை உணர்த்துகிறது. பிரமதேவனின் முகங்கள் முப்பத்திரண்டானதால், கர்த்துருராகங்கள் முப்பத்திரண்டுக்கும் இறைவனே மூல காரணமானவன் என்பதையும் அறிவுறுத்துகின்றன.

பாம்பணி

சடை, மார்பு, வயிறு, மணிக்கட்டுகள், அரை, கால் இவற்றில் பாம்புகள் அணியாக அமைநதிருக்கின்றன. பாம்பு நோன்பிகளுக்கு எடுத்துக்காட்டு. காற்றையே உணவாக உட்கொண்டு வேறொன்றையும் உண்ணாமல் ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள இருக்கின்ற நிலையில் பாம்பு மிகச் சிறந்தது. அதனால் அதனை அணியாக ஏற்றுள்ளார். அன்பர்க்கு அளியன், எளியன் என்பதை உணர்த்துகிறார். மூலாதாரத்திலுள்ள

குண்டலினி சக்தியை நாகமாகக் காண்பது யோக, ஆகம நூல்களின் மரபாகும். அவற்றை ஒட்டி காமிகாகமம் எனும் நூலில் இறைவன் அணிந்துள்ள நாகசத்தி அனைத்து உலகையும் நியமிக்கிறது என உணர்த்துகின்றது.

பிறபொருள்கள்

பலவகையான கூத்தப்பெருமான் திருக்கரங்களில் பரசு, பாசம், வாள், அங்குசம், மழு, மணி, கபாலம், சூலம் முதலிய படைக்கலங்கள் அமைந்து விளங்குகின்றன. அவற்றுள்:

பரசு: கோடாரி வடிவமாக இறைவன் பாசங்களைச் சோதிப்பவன் என்பதை உணர்த்துகின்றது.

பாசம்: ஆன்மாக்களுக்கு வினைப்போகத்தில் ஆசையை விளைவித்து உயிர்கள் அதிலேயே அழுந்தி அழியாதபடிக் கரையேற்ற உதவுவது. ஆகவே இது திருவருட்சக்தி போலிருந்து உயிர்களுக்குப் போக வீடுபேறு பெற உதவுவதாகும்.

வாள். இறைவனுடைய அளவாற்றலை விளக்குவ தாகும். 'ஞானவாள் ஏந்தும் ஐயர்' என மாணிக்கவாசகர் கூறுவதால் உயிர்களுடைய அறியாமையை ஒழிப்பது இதன் செயலாகும்.

அங்குசம்: வயப்படாத பொருளை வளைத்து வசப்படுத்தப் பயன்படும் ஆயுதம். இது பாச கன்மங் களிலேயே கிடந்து உழலும் உயிர்களை வலித்திழுத்து. அவற்றின் ஆணவக் களிற்றை அடக்கியாள்பவர் என்பதை உணர்த்துவதாகும்.

மழு: பறையின் வடிவமாக பாசச்சேதம் பண்ணுவது என்னும் காரண ஆகமம்.

மணி: ஓங்கார ஒலியுடையது. அதனைத் தாங்கி அங்கோசையை எழுப்பி உயிர்களுக்கு எப்போதும்

பிரணவநாத ஒலியைக் கேட்க வைத்து அருளாற்றலை விளக்குவதாகும்.

கபாலம்: இறைவன் விருப்பு வெறுப்பு அற்றவன் என்பதை விளக்குகிறது.

சூலம்: மூன்று கிளைகளை உடையது. அந்த மூன்று கிளைகளும் முக்குணங்களை உணர்த்துவன என்று காமிகாகமம் கூறுகிறது. இது ஆரணி, செனனி, ரோதயித்ரி என்ற முச்சத்திகளின் வடிவாக இருந்து முத்தொழில் களைச் செய்து மும்மலங்களை நீக்கி முத்தியை அளிப்பதாகும்.

மூவிலை ஒருநாட் சூலம் ஏந்துதல்
மூவருங் யானென மொழிந்த வாறே

என்று அருளியுள்ளார் பட்டினத்தார்.

கோற்றேன் மொழிக்கின்னாய் கோதில் பெருந்துறைக்கோன்
மாற்றாரை வெல்லும் படைபகராய் - ஏற்றார்
அழுக்கடையா நெஞ்சுருக மும்மலங்கள் பாயும்
கழுக்கடைகாண் கைக்கொள் படை

என்னும் திருவாசகத்தில் திருத்தசாங்கம் பதிகத்தால் அன்பர்களை மும்மல அழுக்கு அடையாதவாறு பாதுகாப்பதே இதன் குறிப்பாகும். அன்றியும் நடராசப் பெருமானின் தலங்களில் மக்கள் இறந்தால் அவர்கள் செய்த தீவினைக்கேற்ற நரக வேதனை இல்லை என்றும், இறைவன் வைரவக் கோலத்தில் தாங்கிய சூலப்படையின் நுனியில் ஒரு கணப்பொழுது வருந்துதலே தண்டனை என்பதுமான தலவரலாற்றுக் குறிப்புகளும் அழுக்கு நெருங்காதவாறு ஆளுவதையே வலியுறுத்துகிறது. மந்திர சாத்திரங்களுக்குச் சூலம் உயிர் வடிவானது. உயிர்களுக்குத் தீங்கு வராதவாறு எப்போதும் இறைவன் கரத்திலேந்திக் காத்துக்கொண்டே இருக்கின்றார்.

இவ்வாறு இறைவனின் திருவுருவ அமைப்பும் படைகளும் தத்துவக் கருத்தை உணர்த்துவனவாகவும் மந்திரமே வடிவாகவும் அமைவதால் கலைக்கண்ணோடு காணாமல் ஞானக் கண்களோடு காண்பதே வழியாகும் என்பது உணரக்கூடிய உண்மையாகும் எனத் திருநாவுக்கரசர் தான் கண்ட நிலையை தேவாரத்தில்,

குனித்த புருவமும் கொவ்வைச்
செவ்வாயும் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால்வெண் ணீறும்
இனித்த முடைய வெடுத்த பொற்
பாதமுங் காணப் பெற்றால்
மனித்த பிறவியும் வேண்டுவ
தேயிந்த மாநிலத்தே.

என வரும் பதிகத்தால் விளக்குகிறார்.

கூத்தபெருமானும் இலக்கண சூத்திரங்களும்

கூத்தப்பெருமான் முதன்முதலில் உயிர்களுக்கு இன்பந்தரும் உலகத்தைப் படைக்கவேண்டும் என்ற திருவுளத்தோடு பரமானந்த தாண்டவத்தைத் தொடங்கினார். அவருடைய உடுக்கையிலிருந்து பதினான்கு வகையான ஒலிகள் உண்டாயின. அவ்வொலிகளே எழுத்துக்கெல்லாம் பிறப்பிடமாகும். எழுத்துக்களை முதலாகக் கொண்டு இயங்கும் மொழி களுக்கு எல்லாம் முதலாகும். அதினின்று மொழிக்கு வரையறையாகிய இலக்கணமும் விளைந்தது என்பர். இவ்வுடுக்கை ஒலியை அடிப்படையாக வைத்து பாணினி முனிவர் வடமொழிக்கு இலக்கணம் வகுத்தார். இவ்வரலாறு ஒலியுலகப் படைப்பிற்கு இறைவனே முதற்காரணம் என்பதும், ஒலியும், ஒளியும் இணைந்து இயங்குவன ஆதலால், ஒளியான திருமேனியுடைய இறைவன் ஒலி உலகை முதற்கண படைத்தார் என்பதும், அவ்வொலி உலகே பொருள் உலகிற்கு அடி என்பதும் அறியப்படுகிறது. அகத்தியர்

கூத்தப்பெருமானிடமிருந்து ஒலி அமைப்பாகிய இலக்கணங்களைக் கற்றார். செய்தார் என்பதும் இக்கருத்தையே விளக்குகின்றன.

ஒலி ஆகாயத்தின் காரியம். கூத்தப்பெருமானுடைய திருக்கரத்திலுள்ள துடி பாரகாச வடிவமானது. எனவே அதிலிருந்து முதன்முதலில் ஒலியும், அதன் வழியே மொழி களும் படைக்கப்பட்டன என்னும் சாத்திர உண்மை யறிந்தால், 'மொழி முதல் காரணமாக நாதகாரிய ஒலி எழுந்தது' என்ற இலக்கண விளக்கச் சூத்திரமும், 'நாதப்பறையினர்', 'பருமிக்க நாதப்பறை' என்ற திருவாசகப் பதிகத்தாலும் அறியப்படுகிறது.

விரதங்கள்

விரதம் என்பது ஒன்றையே எண்ணி அதில் மனம் நிலைத்திருக்கச் செய்வதாகும். இதனை வரிப்பது என்றும கூறுவர். அலையும் மனம் ஒடுங்கிச் சிவன் திருவடி யிலேயே தோய்ந்து இருப்பதாகும். மனம் ஒடுங்கா விட்டால் காரியம் கை கூடாது. பொறி ஒடுக்கம் உணவொழுக்கத்தில் இருக்கிறது. 'அன்னம் அடங்க அஞ்சும் அடங்கும்' என்பது பழமொழி. ஆதலால் உணவு நியமத்தை முதலாகக் கொண்டு உள்ளம ஒடுங்குதலே விரதம் என்பதாகும். அவ்விரதங்களில் நடராசப் பெருமானுக்குரிய விரதம் சோமவார விரதமும், திருவாதிரை விரதமும் ஆகும்.

சோமவார விரதம்

கார்த்திகை மாதத்தில் முதல் சோமவாரத்தில் விரதம் இருத்தல் நல்லது. முதல்நாள் ஞாயிற்றுக்கிழமை இரவிலேயே உணவு ஒழித்து தூய சிந்தையாக ஒழுக்கத் தோடு சிவபுராணம் மற்றும் பஞ்சாக்கர மந்திரத்தை உச்சரித்துக் கொண்டே இருந்து சிவத்தியானத்துடன் உறங்கித் திங்கட்கிழமை பிரம்ம முகூர்த்தமாகிய நான்கு மணியளவில் நித்திரைவிட்டு எழுந்து நாட்கடன்களை முடித்துக் கொண்டு புண்ணிய நதியில் அல்லது சிவ தீர்த்தங்களில் முறைப்படி நீராடிச் சிவபூசை முதலிய வற்றையும் முடித்துவிட வேண்டும்.

பின் சிவாலயத்திற்குச் சென்று அங்கு நடராச மூர்த்தியையும் சிவகாமசுந்தரியையும் வணங்க வேண்டும். பின் வீட்டிற்கு வந்து உணவின்றித் திருமுறைப் பாடி, சில புராண படலங்களையும் படித்து தீமையானவற்றை சிந்திக்காமல் சிவனை மறவாமல் இருத்தல் வேண்டும். மறுநாட்காலை எழுந்து விதிப்படி நீராடிப் பூசை, சிவாலய வழிபாடு முதலியன முடித்துக்கொண்டு காலை ஐந்து மணிக்குள் திருமுறை பாடி முடித்தல் வேண்டும். இவ்வாறு செய்தால் எல்லா நன்மைகளையும் இருமையிலும் எய்தமுடியும்.

இவ்விரதத்தை உச்சிக் காலத்திலும், இரவிலும் உணவை உட்கொள்ளாமலும், உச்சியில் நித்திரை கொள்ளாமலும், இரவு முழுவதும் உறங்காமல் இருத்தலும், இரவில் நான்கு சாமத்திலும் சிவபூசை செய்தும் அவரவர் தகுதிக்கேற்ப வழிபாடு செய்யலாம். சிவனடியார் ஒருவரை அவர் மனைவியுடன் அழைத்து வந்து அவர்களுக்கு அன்னம், ஆடை அளித்து பலகையில் அமரவைத்து அவர்களை பார்வதி பரமசிவனாகப் பாவித்து வழிபடுதல் வேண்டும். அவர்களை அப்படி வழிபட்ட பிறகே உண்ணுதல் மத்திமம். அன்று நடராசப் பெருமானை வணங்கிப் பஞ்சாக்கரத்தை ஆயிரத்தெட்டு முறை செய்தல் அவசியமாகும்.

சீமந்தினி என்பவள் இவ்விரதத்தைக் கடைபிடித்து சிறந்த கற்பரசியாக விளங்கினாள். வசிட்டர், சோமசன்மன், தன்மவீரியன், கற்கன் முதலியோர் வழிபட்டுள்ளனர். முறையே அருந்ததி, பெருநிதி, நற்கதி போன்றோர் விரதமிருந்து நற்கணவரையும், நல்ல புதல்வரைப் பெற்றுள்ளனர்.

சத்யசந்தன் என்னும் அந்தணன் மகனாகிய விராடன் பஞ்சமா பாதகங்களைநச் செய்துவந்தான். அவன் ஒருநாள் அரச ஆணைக்குப் பயந்து நடுக்காட்டில் ஊணும் உறக்கமுமின்றி ஒளிந்திருந்தான். அன்று திங்கட்கிழமை சிந்தையோடு படாத செயலாக அன்று அவன் விரதம் இருந்ததால் நற்பேறு பெற்றான். ஆகையால்

நடராசப்பெருமானின் திருவருளை முழுவதும் பெற்று நல்வாழ்வு வாழ விரும்புபவர்கள் சோமவார விரதம் இருத்தல் அவசியமாகும்.

திருவாதிரை விரதம்

மார்கழி மாதம் திருவாதிரைத் திருநாள் தொடங்கி மாதந்தோறும் வரும் திருவாதிரையில் முன்னால் கூறியவாறு வைகறையில் நீராடித் திருக்கோயிலுக்குள் சென்று வணங்கி மந்திரத்தை உச்சரித்து மறுநாள் விடியலில் பெருமானுக்குக் கனியமுது படைத்து அதனை உண்ணவேண்டும். அன்று நண்பகல் சிவனடியார்களுக்கு அமுதளித்து பின் தாமுமுண்டு மகிழ்தல் வேணடும். இவ்விரதத்தைச் சிதம்பரம் சென்று செய்தல் சிறந்தது என்பதை,

செவ்வழிச் சின்மயச் சிதம்ப ரத்தலத்
தில்வழி யிந்தநோன் பியந்து வாரவர்
வெல்வழித் தன்மைய வினையி னீங்கிமற்
றுய்வழி யருங்கதி ஒடுங்கு வார்களே

என்று வரும் பாடலால் அறியமுடிகிறது.

இவ்விரதத்தை முருகப்பெருமான் மேற்கொண்டு திருக்கயிலையை நீங்காத வரம்பெற்றார். வியாக்கிரபாதர் மேற்கொண்டு உபமன்யுவைப் பிள்ளையாகப் பெற்றார். விபுலன் என்னும் அந்தணன் குஞ்சிதபாத நீழலை நீங்காத வரம் பெற்றான். இவ்விரதம் கொண்டு பேறுபெற்றோர் பலராவர்.

அட்டம், பிரதோசம், பௌர்ணமி, அமாவாசை, திருவாதிரை, உத்தராயணம், தட்சிணாயணம், சித்திரை, ஐப்பசி, மாதப்பிறப்பு, சூரியகிரகணம், சந்திர கிரகணம், சிவராத்திரி முதலிய புண்ணிய காலங்களில் சிவனைக் கண்டு விரதமிருந்து வணங்கினால் மிக மேலான புண்ணியங்கள் உண்டாகும். ஆகவே இவ்விரதங்களை மேற்கொண்டு ஆனந்தக் கூத்தப்பெருமானைக் கும்பத்திலும், பிம்பத்திலும், யந்திரத்திலும் அனுசரித்து வணங்கிப் பஞ்சாக்கரத்தைச் சொல்லி வருபவர்கள் எல்லா நன்மைகளையும் என்றும் எய்தலாம் என்பது துணிபு.

எந்திர வழிபாடு

எந்திரத்தைத் தங்கம், வெள்ளி, செம்பு போன்ற உலோகத்திலும், அத்தி, வில்வம், அரசு போன்ற பலகைகளிலும் வரைந்து வழிபடலாம்.

அத்திப்பலகை ஆசனத்தில் வடக்கு நோக்கி அமர்ந்து ஓம் கம் கணபதியே நம: என்று சொல்லிக் குட்டிக் கொண்டு விநாயகரை வழிபடவேண்டும்.

ஓம் சிவகுருவே நம: என்று கும்பிடவேண்டும்.

மூலமந்திரத்தால் மூச்சுக்பயிற்சி எனும் பிராணா யாமம் செய்து ஓம் பதஞ்சலி வியாக்ரபாத மகரிசிப்யோம் நம: என்று தலையிலும்,

அனுஷ்டுப் சந்தஸே நம: என்று முகத்திலும்,

ஓம் சிவகாமசுந்தரி சமேத சித்சபேசாய நம: என்று புருவ மத்தியிலும்,

ஓம் ஆனந்த தாண்டவவேச்வராய நம: என்று மார்பிலும்,

ஓம் ஸௌ: பிந்தவே நம: என்று புருவ மத்தியிலும்,

ஓம் வம் சக்தயே நம: என்று கால்களிலும்,

ஓம் ஆனந்த ஸ்வரூபாய நம: என்று உடல் முழுவதிலும் நாம் தியானித்து மந்திரத்திற்குரிய முனிவர் முதலானவர்களை நினைத்துக் கொள்ள வேண்டும்.

பிறகு பஞ்சப் பிரம-சடங்கு மந்திரங்களால் கரநியாசம் அங்க நியாசங்களை முறையே செய்தல் வேண்டும். நடராசப்பெருமானை ஐந்தெழுத்தின் வடிவாகத் தியானிக்க வேண்டும். பின் எந்திரத்தை ஆதாரசத்தி முதலாகச் சிவ வழிபாடு விதியில் உள்ளவாறு வணங்குதல் வேண்டும். பெருமானே! ‘என்னுடைய வழிபாடு முடியும்வரை எந்திரத்தில் மந்திரமூர்த்தியாக எழுந்தருளி அடியேற்கும் கருணை வழங்குக’ என்று வணங்கிக் கொண்டு பின் அந்த

எந்திரத்தை ஒரு வேதிகையில் எடுத்து வைத்து, புனித நீராட்டுத் திரவியங்களைக் கொண்டு முறையே பதமந்திரம், ருத்ரம், சமகங்களைச் சொல்லி புனித நீராட்ட வேண்டும்.

மீண்டும் எந்திரத்தை வேதிகையில் எழுந்தருளச் செய்து ஆசனமூர்த்தி மந்திரங்களால், செஞ்சந்தனம் புனுகு, சவ்வாது, கஸ்தூரி மஞ்சள், பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, கோரோசனை, தாம்பூலம் ஆகிய இவைகளை எந்திரத்தின் நடுவில் சாத்தி, சிவ மூலமந்திரத்தால் பதினொருமுறை கூறி, பஞ்சாவரணப்படி வணங்கி பால், பாயாசம், சர்க்கரைப் பொங்கல் முதலியவற்றை நிவேதனம் செய்து, தூப தீப முறையில் வணங்குதல் வேண்டும்.

கற்பூர ஆலத்தி எடுக்கும்போது அதனை மும்முறை பிரணவாகாரமாகச் சுற்றி, ஊன்றிய திருவடியிலிருந்து திருமுடிவரை கூத்தப்பெருமானுடைய திருவுருவம் அமையும்படிச் சுற்றி, மறுமுறையும் பிரணவாகாரமாக இடப்பக்கமாகக் கொண்டு வந்து பீடத்திலிருந்து சிவகாமசுந்தரி எழுந்தருளுவதாக எண்ணி திரிபங்கியாகச் சுடரை மேலெழுப்பி இருவரையும் வளையப் பிரண வாகாரமாக மூன்றுமுறை சுற்ற வேண்டும்.

பின் கற்பூர சோதியிலிருந்து சிவபெருமானை எந்திரத்தில் ஒடுக்கியதாக விதிப்படி சிவ மூலமந்திரத்தால் ஓதி, மந்திரப் பூக்களை சாத்தவேண்டும். பின்னர் மந்திர வடிவான நடராசரை மனத்தில் எண்ணி குரு வாயிலாகப் பெற்ற திருவைந்தெழுத்தை குறைந்தது நூற்றெட்டு முறையாவது தியானிக்கவேண்டும். பின் கையில் மலர்களை எடுத்து அருக்கிய நீரைத் தெளித்து, தியானித்துச் சாத்தி தியான பலனையும் அப்பெருமானுக்கே அர்ப்பணித்து வணங்க வேண்டும்.

ஜெ. ஜெயவாணிஸ்ரீ
பதிப்பாசிரியர்

சிவயோக தீபிகை

ஓம் மகா கணபதியே நம

ஓம் சரசுவதி லெட்சுமி தேவியே நம

ஓம் சிவாய குருவே நம

திருச்சிற்றம்பலம்

மூல கிரந்தமாகிய பராபவ வருடம் புரட்டாசி மாதம் பதினாறாம் தேதி விஜயதசமி திருவோண நட்சத்திரம் பூர்வபட்சம் மீன லக்னத்தில் இந்தச் சுபதினத்தில் எழுத்துத் துவக்கப்படுகிறது.

சிவ கிருபையினால் சிவ மயம்

சிவசகாயம் இவை நல்லண்ணா கொண்டு வந்ததைப் பார்த்து எழுதியது. அண்ணாசாமி நாயக்கரிடமாக ஒத்துப் பார்த்துக்கொள்ளப்பட்டது.

பரமயோகி மனோம்பு சடபதம் திரிவித காரண காரணம் அவ்வியம், சகுண, நிற்குண, தத்துவ, மனோமய குரு சதாசிவ லிங்கம் ஸ்ரீ ஜேடிகை பரமயோகி சுரோல் உடைய மனதாகின்ற தாமரைப் புட்பத்துக்கு வண்டு போலவும், காரணத் திரையங் களுக்குக் காரணமாகவும், அவ்வியமாகவும் சற்குண நிற்குணத் தத்துவ சொரூபமாகியும் சென்ன(பிறப்பு) மரணங்களில்லாமல் சதாசிவ லிங்க சொரூபமான குருவைத் தன் மனத்திலே எண்ணிப் பசனை பண்ணுகிறேன் என்று குருவை வணங்கி சதாசிவ யோகீசுரரானவர் சிவயோக தீபிகை என்கிற மூலக் கிரந்தத்தை ரசனை பண்ணுகிறார்.

சுகத்தியானம்

ஸ்ரீ குரு பிரசாதத்தினாலே சிவயோகப் பிரபாவத்தை நன்றாக அறிந்து அஞ்ஞானிகளாக இருக்கின்ற போகிகளுக்கு சுகத்தியானம் போதிக்கும் பொருட்டாகச் சிவயோகத் தீபிகை என்கின்ற எழுத்தை எழுதுகிறோம்.

சிவ யோக வகை

சிவதத்துவ சொரூபம் அறிந்த போகிகளிலே உத்தமனான சீடனே, சிவயோகம் பரமரகசியமாய் இருப்பதைக் குரு பக்தி விசேடத்தினால் தோன்றிய வரை உனக்குச் சொல்லுகிறோம்.

1. மந்திரயோகி

அதில் மந்திரயோகமாவது, ஓம் என்ற ஓரெழுத்தினாலும், ஓம் ஓம் சிவா என்ற மூன்று எழுத்தினாலும் ஓம் நமசிவாய என்ற பட்சாத்திர மானாலும், ஓம் சரவணபவ எனும் சடாட்சர மானாலும், ஓம் நமோ நாராயண நம என்ற அட்டசட்சாரமானாலும் இதில் ஒரு மந்திரம் மோட்சம் அடைவதற்காகத் தியானிக்க வேண்டும். இதுவே மந்திரயோகம் எனப்படும்.

2. லய யோகி

யாரொருவன் தியான விசயத்தில் சித்தமும் மனமும் காற்றை விட பலவீனமடைபவனும் அல்லது நாதத்திலே யாகிலும் பலவீனமடைந்தால் அவன் லயயோகியாவான்.

3. அடையோகி

யாரொருத்தன் அட்டாங்க யோகத்தினாலே தெச முத்திரைகளாலேயும், அந்தக் கரணங்களாலேயும் மூல ஒட்டியான இரண சாலந்திரங்களாகின்ற பந்தத் திரையங்க

ளாலேயும் வசமான வாயுவைக் கொண்டவனும் இல்லை யென்றால் கேவலக் கும்பகத்தில் உடைத்தவன் ஆனால் அவனே அடையோகி என்று சொல்லப்படுவான்.

4.ரச யோகி

யாரொருத்தன் அந்தரம், பாங்கியம், மத்தியங்களா கின்ற மூன்று இலட்சியங்களிலேயும் சாட்சாகாரத்தை அடைவானோ அல்லது ஞானத்திலே ஆனாலும் யாதொருவன் மனத்துக்கு விரத்திகள் இல்லாமலிருக் கிறானோ அவனே இராசயோகி என்று சொல்லப்படுவான்.

அத்தியந்தம்

இந்த நான்கு யோகமும் ஒன்றைப் பார்க்க ஒன்று விசேடமாக இருக்கும். இவற்றிலே இராசயோகமென்பது அத்தியந்தம் உத்தமமானது.

சாங்கிய யோகம்

அந்தராசயோகம் சாங்கியமென்றும், தாரக மென்றும், அமசக்கம் என்றும் மூன்றுவித மாயிருக்கும். சாங்கியமாவது பூத பஞ்ச கிராதமான இருபத்தி நான்கு தத்துவங்களுடைய குறிப்பை அறிவதாகும். அதுவே சாங்கிய யோகம்.

அமண சக்கம்

பாங்கிய முத்திரா லட்சணத்தை அறிவது தாரக யோகம் எனப்படும். அந்த முத்திரா லட்சணத்தை அறியவேண்டினால் அது அமண சக்கம் எனப்படும்.

இராச யோகம்

சாங்கிய யோகத்தைப் பார்க்கத் தாரகயோகம் அதிகமாகும். தாரக யோகத்தைப் பார்க்க இராசயோகம் அதிகமாகும். சகல யோகங்களுக்கும் இராசாவான படியால் அதுவே இராச யோகம் எனப்படும்.

சிவ யோகம்

இராச யோகத்துக்கும், சிவயோத்துக்.கும் நாம பேதமே அல்லாமல் அனுபவ பேதமில்லை. இராசயோகமே சிவயோகம் ஆகும். மகரிசிகளாலே சிவயோகமே முக்கியம் என்று கூறுவர்.

புத்திகள் விருத்தி

சுகத்தை விரும்புகிறவர்களுடைய புத்திகள் விருத்தி அடையும் பொருட்டு சொல்லப்பட்ட சிவயோகம் சிவபக்தி நிஷ்டமான உன்னிடத்தில் இதன்படிச் சொல்லப்படுகிறது.

சிவயோக அப்பியாசம்

இந்த சிவயோக அப்பியாசமானது ஐந்து விதமாக இருக்கும் அதாவது

1. சிவக்கியானம்
2. சிவ பக்தி
3. சிவத்தியானம்
4. சிவ விரதம்
5. சிவ அர்ச்சனை

என ஐந்து விதமாக இருக்கும்.

சம்சாரக் கடல்

சிவ அர்ச்சனை பண்ணாதவன் மிருகங்களுக்குச் சமமானவன் ஆவான். சந்தேகமில்லை. அப்படிப் பட்டவன் எப்பொழுதும் சம்சாரக் கடலில் சுழன்று திரிவான்.

சத்திய சொரூபம்

முன்பு அறிவாளிகளாலே நிச்சயிக்கப்பட்ட சத்திய சொரூபமான தத்துவத்தை உனக்குச் சொல்லுகிறோம்.

சிவ தத்துவம்

அந்தத் தத்துவமானது சகல தெய்வ மயமாக, சகல பூத மயமாக, சருவத்தியான மயமாக, சகலத் தத்துவங்களுக்கு முதன்மையாக, சகல ஒளிக்கும் ஒளியானதாக, உலகுக்கு ஆனந்த சொரூபமான மாய்கையோடு கூடி சகலமும் மாய மாய்கைத் தவிர நிஷ்களமுமாக, மாயகேவலம் என்றும், பரம் என்றும், பரமாத்மா என்றும், பரபிரம்மம் என்றும் வெகுமித்த தர்மங்களுடன் கூடி சருவாந்திரியாமியான சிற்பிரகாச மான சிவம் ஒன்று உண்டு.

சிவ சொரூபம்

அந்தச் சிற்சொரூபமானது உண்டு, இல்லை என்கின்ற இரண்டுக்கும் அதீத வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாதது.

ஒரு வர்ணமுமில்லாமல் வெகு வர்ணமானது ஒரு ரூபமில்லாமல் வெகு ரூபங்களாயிருக்கும்.

சிவமுடைய ஆணை

அப்படிப்பட்ட சிவனிடத்திலிருந்து சக்தி பிறந்தது இதுவாகும். அந்தச் சக்தியானது சாந்தி என்றும், அதிதை என்றும், பார்த்திமிசை என்றும் பல பேர்களுடனும் கூடி இவையென்றும், அவையென்றும் அளவிடப்படாத குணங்களுடனே கூடிக்கொண்டு சிவமுடைய ஆணையினால் பிரகாசித்துக்கொண்டிருக்கும்.

பஞ்சப் பிரம ரூபம்

அந்தச் சக்தியானது பஞ்சப் பிரம ரூபமாகத் தோன்றும். ஐந்துவித பேதங்களாய் இந்தப் பஞ்ச பூத சக்தியில் இந்தச் சகலப் பிரபஞ்சமும் பிறந்து சர்வ காலமும் விளங்குவதாகும்.

சதாசிவம்

அந்தச் சக்தியானது சதாசிவனுடனே கூடிக் கொண்டு ஆகாசத்திலிருந்து விளங்கும் சதாசிவனிடத்தி லிருந்து ஈஸ்வரன் பிறந்து வாயுவிலே பிரகாசிப்பான்.

ருத்திரன்

அந்த ஈஸ்வரனிடத்திலிருந்து ருத்திரன் பிறந்து அக்கினியிலே பிரகாசிப்பான்.

விஷ்ணு

அந்த ருத்திரனிடத்திருந்து மகாதேயுவான விஷ்ணு பிறந்து உலகத்திலே பிரகாசிப்பார்.

பிரமதேவன்

அந்த விஷ்ணுவினிடத்திருந்து பிரமதேவன் பிறந்து பூமியிலே பிரகாசிப்பான். இந்தப் பிரகாரமாக அந்தப்

பராசக்தியிலே இருந்து தன் சொரூபத்துக்குத் தக்கவாறு பஞ்சமூர்த்திகளும் தோன்றினார்கள்.

பஞ்ச மூர்த்தி

இதில் நிவர்த்தியான பிரதிஷ்டர்களை விவரிப் பார்கள். சாந்தி, அத்தர் என ஐந்து பேருடன் தான பஞ்ச சதுர்த்தர்களும் பிரமதேவன் முதற்கொண்டு கிரமமாகப் பஞ்ச மூர்த்திகளும் கூடியிருப்பார்கள்.

சக்திகளும் பேதங்களும்

ஐந்து சக்திகளும் சிவனுடைய ஆக்கினையினாலே மகாப் பிரகாசமாக விளங்குவார்கள். இவர்களுடைய பிரகாசத்துக்கு உட்பட்ட பிரமதேவனாலே தேவதைகள் இராட்சதர்கள், மூனீசுரர்கள், அஷ்டவசுக்களுமே உற்பீசம், அண்டகம், சுபேதசம், சராகயம் இந்த நான்கு வகை பேர் தங்களுடனே கூடிய உலகத்திலுள்ள சகலமும் தோன்றும்.

சுவேத சரங்கள்

அதில் தோன்றுவது புல், மரம், செடி, கொடிகள், மலைகள், நதிகள், கடல்கள், குளம், குட்டைகள் ஆகிய சகல தாவரங்களும் பூமியில் தோன்றுமெனச் சொல்லப் படும். அண்ட சராசரங்களாவது முட்டைகளாகப் பிறந்து விருத்தியான பட்சிகள் முதலாவது, சுவேத சதங்களாகும்.

சிவமயம்

தண்ணீரில் பிறக்கின்ற மச்சம் முதலானதாகும். சராயுசங்களாவது கர்ப்பத்திலே பிறக்கின்ற மனிதர்கள், மிருகங்கள் முதலானதாகும்.

அனேக பேதங்களான உயிரினங்கள் சகலமும் அந்தச் சிவனாலே உற்பத்தியானதால் உலகமே சிவமயம் என்று சொல்லப்படுகின்றது.

மோட்ச சுகம்

யாரொருவன் இப்படிப்பட்ட இலட்சணங்களுடனே கூடி இருக்கின்ற சகல உலகத்துக்கும் தானாக விளங்கிக் கொண்டு சிற்சொரூபமாய் சூரிய மண்டலம், சந்திரமண்டலம், அக்கினி மண்டலமாகிய இந்த மண்டலங்களில் விளங்குகின்ற சிவனுக்குக் குருப் பிரசாதத்தினாலே நன்றாக அறிந்து மனத்திலுள்ள அழுக்குகளைப் போக்கி யாதொருவன் பூசித்துத் தியானம் செய்கின்றானோ அவன் மோட்ச சுகத்தை அடைவான்.

சிவக்கியானம்

அந்தச் சிவக்கியானம் சகுணம் என்றும், நிற்குணம் என்றும் இரண்டு விதமாக இருக்கும். முன்னே சகுணத்தைக் கைக்கொண்டு பிறகு நிற்குணத்தைப் பூசிக்க வேணும்.

சகுனம்

அதில் சகுனமாவது, உள்ளும் புறமும் பிரகாசித்துக் கொண்டு வெகுவித பேதங்களாக இருக்கும். நிற்குணமாவது ஆகாசத்தைப் போல மனம் முதலான இந்திரியங்களால் அறியப்படாமல் இருக்கும்.

பேதங்கள்

இந்தச் சகுன, நிற்குணப் பேதங்கள் இரண்டும் குரு முகத்தில் பிரகாசிக்கும். குருமுகத்தைத் தவிர அறியப்படாது. ஆகவே மோட்சத்தை விரும்புகிறவர்கள் சர்வ காலமும் குருவைப் பூசிக்க வேண்டியது.

குருப் பிரசாதம்

மனிதனை எப்போதும் ஆயுசும், ஆரோக்கியமும், ஐஸ்வரியமும், வித்தையும், கீர்த்தியும், சொர்க்க சுகமும், மோட்சப் பதமும் இவைகளெல்லாம் குரு பிரசாத மல்லாமல் அடையமாட்டான்.

சடாட்சர சிவம்

ஆதலால் உத்தம லட்சணங்களுடனே கூடிக் கொண்டு சர்வ ஐக்கியமான குருவை மனம், வாக்கு, காயங்களாகின்ற திரிகரணங்களாலேயும் சடாட்சர சிவனாகப் பாவித்துப் பூசிக்க வேண்டும்.

சதுர்விதக் காரியங்கள்

அது காரணமாகக் கொண்டு குரு முகத்திலே போதிக்கப் பட்ட பக்தியாலே கூடிக்கொண்டு சிவனை யாரொருவன் பூசிக்கின்றானோ அவனுக்குத் தர்மார்ந்த காம, மோட்சங்களா கின்ற சதுர்வித காரியங்களும் உள்ளங்கையில் இருக்கும்.

குரு சொன்ன மார்க்கம்

குரு சொன்ன மார்க்கமாக ஒரு காலமானாலும், இரு காலமானாலும், மூன்று காலமானாலும் நித்தமும் தன் சக்திக்குத் தக்கதாகச் சிவப்பிரகாசமான சிவனைப் பூசிக்க வேண்டும்.

ஆத்ம சொரூபம்

அந்தப் பூசையாவது அந்தரங்கப் பூசை என்றும், வாங்கிய பூசை என்றும் இரண்டு விதமாக இருக்கும்.

அதில் சற்புருசர்களான பெரியோர்கள் ஆதியந்தப் பிரகாசமாய் சாந்த சொரூபமான பரமேஸ்வரனைத் தங்கள் மனத்திலே ஆத்ம சொரூபமாகப் பாவித்துச் சதா காலமும் தியானம் செய்து பூசிப்பார்கள்.

பிரதிமா ரூபம்

அப்படிப்பட்ட பரமேஸ்வரனைக் கேவலப் புத்தி உடையவர்கள். விவேகிகள் வாங்கியத்தினாலே தாம், பிறதாரு, மிருத்திகை இவைகளால் நியமிக்கப்பட்ட பிரதிமா ரூபங்களாக பாவித்து, வாங்கியத் திரவியங்களான கெந்த புட்பம், அட்சதைகளாலே பூசிப்பார்கள்.

அந்தரங்கப் பூசை

அந்தரங்கப் பூசையாவது, முன்னே தன் இருதயத்திலே ஒரு தாமரைப் புட்பமாகப் பாவித்து அந்தப் பத்மத்துக்குச் சர்வ காலமும் சக தர்மமாக இருப்பதனால் கந்தம் சுகியான மெய்ஞானம், நித்திய ஐஸ்வர்யங்கள் எட்டும், இதழ்கள் வயிராக்கிய மேக கன்னிகை சந்திரவானம் ஸ்ரீ ருத்திரனே கேசரங்கள் அந்த லட்சணங்களுடனே கூடிய கமலத்தின் மத்தியில் சூரியர், சந்திரர், அக்கினி இந்த மூன்று மண்டலங் களுடைய மத்தியிலே விளங்குகின்ற சின்மயனான சிவனைத் தியானம் செய்ய வேண்டும்.

திவ்விய மூர்த்தி

சிவனைப் பந்த ரூபமாகத் தியானம் செய்ய வேண்டுமானால் பிரசன்ன முகமும் சாந்த சுபாவமும் பதினாறு வயசும் மிகுந்த பிரகாசமும், கோடி மன்மத

ரூபமுமாய் இப்படிப்பட்ட அலங்காரங்களுடன் கூடியிருக்கின்ற திவ்விய மூர்த்தியைத் தியானம் செய்யவேண்டும்.

சதுர்ப் புயம்

பின்பும் சதுர்ப் புயங்களிலேயும் மானும்,
மழுட்கையும்,
வாத அசுத்தமும்
அபய அஸ்தமும்

அர்த்த சந்திரனைச் சிரசிலே தரித்துக்கொண்டு குளிர்காலத்தில் பதினாயிரம் பூரணச் சந்திரன் பிரகாசித்தால் எந்தப் பிரகாசமோ அப்படிப் பாவிக்கவும்.

தரித்தல்

பின்னையும் அந்தச் சிவனைத் திவ்விய வஸ்திரமும், திவ்விய ஆபரணங்களும், திவ்விய கந்தமும், திவ்விய புட்பங் களும் தரித்திருக்கும்படி பாவிக்கவும்.

மன அழுக்கு

திரிநேத்திரங்களும், திரிகுணங்களுக்கு ஆதார னாகவும், மன அழுக்குகளைப் போக்குபவராகவும், இடது துடையில் பார்வதி தேவியை வைத்திருக்கின்றவராகவும் பாவிக்கவும்.

தலைவன்

கற்பக விருட்சத்தின் கீழே வேதிகையின் மேலே நவரத்தின சிம்மாசனத்தில் எழுந்தருளி இருப்பதாகப் பாவிக்கவும். பின்னையும் அந்தச் சிவன் எப்படிப்பட்டவ ரானால் தனக்குச் சமமானவரும், அஞ்ஞானமும் இல்லாதவராய் ஏக வஸ்துவை அழிப்பவராகவும், சருவ வியாபியாய், விஷ்ணு என்ற பெயருடையவராக

நாராயண மோட்ச பதத்துக்கு அதிகாரியாய் சிந்தனைக்கு எட்டாதவராய் செனன மரணமில்லாதவராய் இப்படிப் பட்டவர் என்று நிர்ணயிக்கப்படாதவராய் ஆதி மத்தியாந்த ரகிதராகவும், உலக மக்களுக்குத் தலைவ னாகவும் பாவிக்கவும்.

சர்வ தானம்

இப்படிப்பட்ட சிவனை மனத்திலே தியானம் செய்து உறுதியான மனத்தோடு கூடியவராய் கொண்டு அந்தரங்கத் திரவியங்களாலே சர்வ தானமாகப் பூசிக்க வேண்டும்.

பத்தி

அப்படிப்பட்ட சிவனைப் பூசிக்கின்ற கிரமமாவது சிவமாக இருக்கின்ற நீரிலே அபிசேகம் செய்து சர்வ வஸ்து பரிபூரண பாவமான வத்திரத்தை உடுத்திப் பார்த்து இச்சா, கிரி, ஞான சக்தியான மூன்று சக்தியையும் கூட்டி யாகம் செய்வதைப்போல் மனப்பூர்வமாக அளித்துச் சுத்த வித்தை யாகின்ற வாசனைத் திரவியங்களை அனுபவித்துப் பூ, அச்சதையைச் சமர்ப்பித்துப் பிரகாசமான பத்தியாகியப் புட்பத்தையும் சமர்ப்பிக்கவும்.

தீபம்

மனம், புத்தி, சித்தம் ஆங்காரங்களாகின்ற அந்தக் கரணங்கள் நான்கையும் தூபமாகக் கொடுத்து தோத்திர முதலான தியானம் செய்யும் இந்திரியங்கள் ஐந்தும் தீபம் விலக்கி சுக துக்கவர்சிதமான சீவனை நெய்வேத்தியமாகச் சமர்ப்பிக்கவும்.

குணங்கள்

குணங்கள் மூன்றும் தாம்பூலமாய் சமர்ப்பித்துப் பிராணங்களை நமஸ்காரமாகச் சமர்ப்பிக்கவும். இந்தப்

பிரகாசமான பரமேஸ்வரனுக்கு அந்தரங்கத் திரவியங் களைச் சமர்ப்பித்துப் பூசிக்கவும்.

பூசாவிதானம்

அகத்திலே பரமாறம் சொரூபமாயின் சிவனைப் பக்தியோடு பூசிக்க வேண்டுமென்று குருமூர்த்தியானவர் அந்தரங்கப் பூசாவிதானம் உபதேசித்தார்.

யோகம், தியானம்

இந்தப் பிரகாரம் அந்தரங்கத் திரவியங்களாலே பூசிக்கின்ற மகிமை எப்படிப்பட் தேவர்கள முதலான எழுபத்தி இரண்டு ராஜ உபசாரங்களாலே அந்தரங்களால் சமஸ்த பாபங்களையும் போக்கிச் சமஸ்த்த துக்கங்களையும் நீக்கி சிவபக்தி விருத்தியடையச் செய்வதாக மனத்தைப் பவுத்திரம் செய்வதாகவும் சர்வ ஐஸ்வர்யங்களைக் கொடுப்பதாகவும் யோகத்தையும், தியானத்தையும் பிரகாசிக்கும்.

கரண பூசை

இந்த அந்தக் கரணபூசை செய்து சீவனுக்குக் குருமூர்த்தியானவர் அனுக்கிரகம் செய்வார்.

ஸ்ரீ சதாசிவ யோகீசுரானால் இரட்சிக்கப்பட்ட சிவயோகத் தீபிகை என்கின்ற சாஸ்த்திரத்தில் அந்தரங்கப் பூசை பாடலில் முதல் படலம் முற்றும்.

முதல் படலம் முற்றும்

திருச்சிற்றபலம்.

இரண்டாவது படலம்

அத தே ஸம்பரவக்ஷ் யாமி
சிவபூஜாவிதிம் புதை :|
புன:ப்ரகார மாக்யாதம்
யோக மார்க்கைக கோசரம் ||

அத்தேசம பிறவச்சியோடு
சிவபூசா விதிரன் புதையிசி
புனப்பிரகார மாக்கியதம்
யோகமாக்கை கைபிரசாம் மடிகை

பூசா விதானம்

ஸ்ரீ குருமூர்த்தியானவர் அந்தரங்கப் பூசாவிதானம் சொல்லிச் சீடனைப் பார்த்து வாரும் பிள்ளாய் இந்தச் சிவபூசா விதானமாவது பெரியோர்களாலே வேறே ஒரு மார்க்கமாக நிர்ணயிக்கப்பட்டது.

யோக மார்க்கம்

யோக மார்க்கம் கோசரமாகச் சொல்லப்படும். அந்தப் பிரகாரம் இப்போ உனக்குச் சொல்லுகிறோம்.

தேகம்

ஓ சீடனே! யோகத்திலே தியானமும், தியானத்திலே யோகமும் பிறக்கும். யோகம், ஞானம் இந்த இரண்டும் சாதிப்பதற்குத் தேகம் வேண்டும். ஆகையால் பூமியிலேயும் தான் சரீரங்களைக் காப்பாற்றுவார்கள்.

சிலேட்டும நாசம்

தேகத்தைக் காப்பாற்றுபவர்க்குச் சிலேட்டும நாசம் பண்ண வேண்டும். அந்தச் சிலேட்டுமமும், வாயுவும் கும்பமானால் நாசமாகும்.

வாயுவைக் கட்டுதல்

வாயுவைக் கட்டாமல் சிலேட்டுமத்தைச் செயிக்கக் கூடாது. ஆகையால் வாய்வு தாரணையினாலே சிலேட்டும நாசம் செய்து தேகத்தை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

அடை யோகம்

இந்தச் சிவயோகத்துக்குச் சாதகமானது. அடை யோகமாகும். முதலில் அடையோகம் சாதிக்க வேண்டும். அந்த அடையோகம் என்ன எனச் சொல்லுகிறோம். அமைதியாகக் கேள்.

அஷ்டாங்க அங்கம்

அடை யோகத்துக்கு அஷ்டாங்களுண்டு. அந்தச் சதுரங்கம் எனும் வாங்கிய சதுரங்கனும் அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த வார்த்தைகளாலே சிவபூசை செய்ய வேண்டும்.

சதுரங்க விதானம்

பூசையாவது நியமாதி குணங்களாலே ஆத்ம சுத்தி பண்ணித் தன் வசமாகி விதர்சனங்களிலே ஆசனத்திலே சித்திரமாயிருந்து கொண்டு பிராணாயாமம் என்கின்ற தண்ணீரால் அபிசேகம் பண்ணவும். இந்த நாலும் பிரகாசமான வாங்கிய சதுரங்க விதானம் எனப்படும்.

அந்த சதுரங்க விதானம்

அந்தப் பரமேசுவரனுக்கு இந்திரிய நிற்கிரகமே கெந்தமாகவும், தியானமே புட்பங்களாகவும், திடமான தாரணையே தூபமாகவும், சுத்த சமாதியே நெய் வேத்தியத்திய மாகவும் இந்த நாலும் அந்தர சதுரங்க விதானம் எனப்படும்.

அஷ்டாங்க யோகம்

இந்த அஷ்டாங்க யோக மார்க்கத்திலே சதாகாலமும் அந்தரங்கத்திலே பரமேசுரனை நன்றாகப் பூசை செய்ய வேண்டும். வாங்கிய உபசாரங்களாலே ஏதுண்டோ அந்தரங்க உபசாரமே செய்யவேண்டும்.

யோகி

இதன்படி அந்தரங்கத்திலே அஷ்டாங்க யோக மார்க்கத்தினாலே இவ்வியனான சிவனை யார் ஒருவன் பூசிப்பானோ அவனே வித்துவான். அவனே யோகி. அவனே உத்தம சிரேட்டன்.

ஏமம்

இதிலே ஏமமாவது முனீஈசுவரனாலே பத்துவிதமாய்ச் சொல்லப்படும். எப்படியெனில்

1. மிக்க ஆசாரமும்
2. யோகத்துக்குத் தக்க ஆசனமும்
3. தாரணை நிறுத்துவதும்
4. பூத தயவும்
5. பொய் சொல்லாமல் இருப்பதும்
6. ருதுவான புத்தியாக இருப்பதும்
7. சுசியாய் இருப்பதும்
8. சகிப்பும்
9. களவில்லாமல் இருப்பதும்
10. ஈகிசைப் பண்ணாமல் இருப்பதும்

இந்த பத்தும் நியமமென்று சொல்லப்படும்.

இயமம்

இமயமாவது,

1. சருவதா சந்தோசமாக இருப்பதும்
2. தவசு பண்ணுவதும்
3. சம்பூரண பாவனையும்
4. நல்ல புத்தி உடையவனாக இருப்பதும்
5. தவசு பண்ணுவதும்
6. விரதம் இருப்பதும்
7. சிவபூசை பண்ணுவதும்
8. தவம் செய்வதும்
9. இலட்சியம் இருப்பதும் யோக சாஸ்திரம் கேட்பதும்
10. சற்பாத்திரத்திலே கானம் பண்ணுவதும்

இந்தப் பத்தும் இயமம் என்று சொல்லப்படும்.

ஆத்ம சுத்தி

இந்தப் பிரகாரம் ஏமங்கள் பத்தும், நியமங்கள் பத்தும் ஆக இருபதும் இலட்சணங்களிலே திடமான புத்தியோடு கூட்டிக்கொண்டு ஆத்ம சுத்தி பண்ண வேண்டும்.

ஆசனங்கள்

ஆசனங்களாவது அநேகங்களுண்டு. அதில்

1. சித்தாசனம்
2. பத்மாசனம்
3. சொஸ்திகாசனம்
4. முத்தாசனம்
5. வீராசனம்
6. பத்ராசனம்
7. கருடாசனம்
8. சிங்காசனம்
9. கோமுகாசனம்
10. சுகாசனம்

சிரேஷ்டம்

இந்தப் பத்து ஆசனங்களிலே முக்கிய ஆசனமானது பத்மாசனமே. மற்ற பேர்களுக்குச் சித்தாசனமே. சிரேஷ்டம் கிரேஸ்தாள், யோகிகள் சகலமான பேர்களுக்கும் சுதாசனமே சிரேஷ்டம். இந்தப் பிரகார மாவது மூன்றுவிதமாகச் சொல்லப்படுகிறது.

ஏகாந்த ஸ்தானம்

பிரசித்தமான ஆசனங்கள் இன்னுமுண்டு. அவற்றில் இஷ்டமான ஆசனத்திலேயிருந்து கொண்டு ஏகாந்த ஸ்தானத்தை ஆதரிக்க வேண்டும்.

யேகாந்த ஸ்தானம்

அந்த யேகாந்த ஸ்தானத்திலே மகா மனோகரமான ஒரு மடத்தைக் கற்பிக்கவும். அந்த மடம் எப்படி இருக்க வேண்டுமென்றால் ஓர் இடத்திலேயும் வெளியில்லா மலும், கொஞ்சம் வாசல்விட்டுச் சுற்றுப் பிரகாரமுடன் வெளியிலே கூடம் இருக்கலாம். மகா பரிசுத்தமாக இருக்க வேண்டும்.

ஆசனம்

பின்னும் அந்த மடத்திலே நல்ல வாசனைகளுடனே கூடின புட்பங்களும், மேல் கட்டியும் மகா மிருதுவான மெத்தையும் இஷ்டமான ஆசனத்தோடு கூடியும் இருக்க வேண்டும்.

தூப தூபம்

பின்னும் அந்த மடத்தினில் சாம்பிராணி தூப தீப வாசனைகளோடு கூடினவை.

சமித்துகள்

பசுவின் சாணங்கொண்டு மெழுகிச் சமித்துகளும் புட்பங்களும் கந்த மூல பலங்களும் விபூதி உருத்திராட்சமும் தர்ப்பையும் கிருஷ்ணாசலமும் சுத்தமான அன்னமும் தண்ணீரும் சமஸ்தான மூலிகை திரவியங்களும் ஆகிய இவற்றால் சம்பூரணமாய் மனோகரமாய் இருக்கவேண்டும்.

மனோகர மடம்

இவ்வாறு இருக்கின்ற மனோகர மடத்திலே சதா சர்வ காலமும் இருந்துகொண்டு நியாயமான மனத்துடன் கூடிக் கொண்டு தன் இருதயத்தில் இருக்கின்ற சதாசிவ மூர்த்தியைப் பூசிக்க வேண்டும்.

பூசா விதானம்

அந்தப் பூசா விதானமானது எப்படியெனில் ஓ வித்துவானே கேள்! ஆதியிலே கேவல கும்பகத்தினாலே வாய்வு நிரோதனம் செய்து அதில் பிராணாயமம் என்கின்ற தண்ணீரால் சிவமூர்த்தியை அபிசேகிக்க வேண்டும்.

பிராணாயாமம்

பிராணாயாமம் என்பது பிராகிருதம் என்றும், வைகிருதம் என்றும் இரண்டுவிதமாக இருக்கும். இவ்விரண்டு விதத்தையும் கேவல கும்பகம் பிராணாயாமம் என்று சொல்லப்படும்.

பிராகிருதம்

அதில் பிராகிருதமாவது பிராணவாய்வு சுபாவமாகத் தன்படியே போக்குவரத்ததாய் இருப்பது. இதுவே சகல குணங்களிலும் நடக்கிறது.

வைகிருதம்

வைகிருதமாவது சாத்திர மார்க்கத்தினாலே பிராண வாயுவை ரேசக பூரக கும்பகங்களாகின்ற கிரமம் அறிந்து வாய்வை நிறுத்துகிறது.

கேவல கும்பக பிராணாயாமம்

இந்தப் பிராகிருதம், வைகிருதம் இரண்டும் எந்த மகாத்மாவுக்குச் சணநேரத்திலே சித்திக்குமோ அதுவே கேவல கும்பக பிராணாயாமம் என்று சொல்லப்படும்.

பிராண வாயு

அடுத்தது என்றால் நினைத்த மாத்திரத்திலே பிராண வாயுவை மனத்தோடு நின்று போக்குவரத்து இல்லாமல் நிற்கின்றது என்று அறிவதாகும்.

மந்திர யோகம்

முன்னே சொல்லப்பட்ட பிராகிருதமாவது அஜபா ரூபமான மந்திரயோகமென்று சொல்லப்படும்.

லய யோகம்

இரண்டாவதாக, வைகிருதமாவது எத்தனத்தினாலே வாயுவை நிறுத்தினபடியினால் லயயோகம் என்று சொல்லப்படும். கேவல கும்பகமானது என்றும் சொல்லப்படும்.

அடை யோகம்

மூன்றாவது வாய்வு மனத்தோடு கூடித் திறமாய் நின்றபடியால் அடையோகம் என்று சொல்லப்படும்.

ராச யோகம்

அவற்றை அதிக்கிரமிச்ச அமனஷுக்கம். அவையே ராசயோகம் என்று சொல்லப்படும்.

யோக நிலை

முந்திய மந்திர ரூபமாவது அஜபா யோகம், இரண்டாவது வாய்வு நாதத்தில் இனமாவது லயயோகம். மூன்றாவது மனத்தோடு வாய்வும் ஏகமாய் ஸ்திரமானது அடையோகம் ஆகும்.

இவற்றுக்கு மிஞ்சின நான்காவதான ராசயோகமும் விர்த்திகளில்லாமல் இருப்பதாகும்.

யோகங்கள்

பிராணாயாம விதானத்தினாலே இந்த நான்குவித யோகங்களும் சித்திக்கும் ஆகச்சே அப்பியாச சூரனான நீயும் பிராணாயாமத்தையே அனுசரிக்கவேண்டும்.

நிசுவாச ரூபம்

அதில் அஜபா ரூபமானது விந்துவோடு கூடின ஸ்க்கராந்தமான பீசாட்சரமானது உசுவாச ரூபமாக வெளியேப் புறப்படும். இரண்டு விந்துக்களுடனே ஸக்கராந்தமான பீசாட்சரம் நிசுவாச ரூபமாக உள்ளே பிரகாசிக்கிறது.

அஜபா காயத்திரி மந்திரம்

பிராணவாய்வு சகலமான பேர்களுக்கும் இந்தப்படி போக்குவரத்தாய் இருக்கும். இப்படி ஒத்தப் பிராண ரூபமான அஜபா காயத்திரி மந்திரத்தைச் சீவன் பிரதி தினமும் தானே செபிக்கிறான்.

அஜபா மந்திர பலம்

யாரொருவன் அருண உதய காலத்திலே குரு உபதேசத்தின்படி இந்த மந்திரத்தை அகோ ராத்திரமும், 2160முறை செபிக்கின்றானோ அவன் அஜபா மந்திர பலத்தை அடைவான்.

யோகச் சித்தி

யாரொருவனாகிலும் இந்தப்படி அஜபா மந்திரத்தைச் சங்கல்ப்பம் செய்கின்றானோ அவன் சகல பாவங்களிலிருந்தும் விடப்படுவான். சீக்கிரமாகச் சிவயோகச் சித்தியடைவான். சந்தேகமில்லை.

சங்கல்பம்

இந்த அஜபா காயத்திரி மந்திரத்தை அருண உதயத்திலே நீயுமாக இருந்து கொண்டு இதன் சாத்திரத்தின்படி சங்கல்பம் செய்து உசுவாச நிசுவாசாரமாக 2160ஆகவும் ஆதாரமாகக் கொண்டு சகத்திரப் பரியந்தமான சத்த மண்டல தேவதைகளான கிணேவர், பிரம்மா, விஷ்ணு, உருத்திரர், சிவபரமாத்ம ஸ்ரீசற்குரு என்கின்ற தேவதைகளுக்கும் அவரவர்களுக்குச் சொன்ன சங்கல்பம் படி சமர்ப்பனம் செய்யவும்.

பிரணவ நாதம்

அஜபா மந்திரத்தை மனோ திருஷ்டியினால் பார்க்க வேண்டும். அந்த மந்திரத்தைப் பீசாட்சரங்கள் இரண்டிலும் திரிவேணி தலத்திலே லீனமானால் சத்தப் பிரமரூபமான பிரணவநாதம் பிரகாசிக்கும்.

வாமகெதி

வாமகெதியான இடைநாசி சந்திரன் என்றும் சொல்லப்படும் அதுவே யமுனாநதி.

பிங்களாநாடி

தட்சிண கெதியான பிங்களாநாடி சூரியன் என்றும் சொல்லப்படும். அதுவே கங்காநதி.

மத்திம கெதி

மத்திமகெதியான சுழிமுனைநாடி அக்கினி என்றும் சொல்லப்படும். அதுவே சரசுவதி நதி.

இந்த மூன்றும் கூடிய சங்கமமே திரிவேணி சங்கமம் என்றும், திரிகூடம் என்றும் சொல்லப்படும்.

சதுட பீடம்

அதற்கு ஒத்த ஸ்தானம் எதுவென்றால் கரணீகர இந்திரியங்கள் இரண்டும், நாசிகர இந்திரங்கள் இரண்டும் எங்கெங்கு கூடி இருக்கின்றதோ அதுவே சதுட பீடமென்றும் சிறுகாடகம் என்றும் சொல்லப்படுகிறது.

ஸ்தானம்

ஆகையால் ஒரு ஸ்தானத்துக்குத் திரிகூடம் என்றும், திரிவேணி சங்கம் என்றும், சதுட பீடமென்றும், சிறுகாடகம் என்றும் நான்குவிதமாகச் சொல்லப்படுகிறது.

சுழிமுனை நாடி

உசுவாச, நிசவாச, ரூபவாயுவும் மனத்தோடு கூடி திரிகூட தேசத்திலே செரிந்து திடப்படுத்தி அதன்மேல் திரிகோண வழியாகின்ற சுழிமுனை நாடி மார்க்கத்திலே பிரவேசிக்க வேண்டும்.

பிராண வாய்வு

இப்படிப் பிராணவாய்வு சேர்க்கின்ற, நடக்கின்ற கதி நிருத்தத்தினால் ஊர்த்தம சக்தி, சூட்சும சத்தி, நிபாதமாம், அநதப் பிராணவாய்வு பிரத்தியாகேதமாம்.

மத்திய சத்திப் பிரபந்தனம்

திரும்பிக் கீழே நடத்தினால் மத்திய சத்திப் பிரபந்தனம் ஆகும்.

ஆகுஞ்சனம்

பின்னாலும் கீழே நடத்தினால் அபானத்திலே மூட்டி மூல சத்தினி ஆகுஞ்சனமாகும்.

பரமகெதி

இப்படி ஊத்தம சத்தி, மத்திம சத்தி, அதோ சத்தி இந்த மூன்றையும், கிரகமாக நிபாதனமும், பிரபோதனமும், ஆகுஞ்சனமும் செய்து யோகீசுராள் பரமகெதி அடைவார்கள்.

ப்ரணவத்தோணி

ஆகையால் நீயும் ஆச்சரியமாக சந்திர சூரிய அக்கினி மண்டலங்களிலே இந்த மூன்று சத்தி இலட்சணங் களையும் அறிந்து ப்ரணவத்தோணியோடு கூட வாயுவைக் கூட்டுவிக்க வேண்டும்.

பிரணவ மந்திரம்

மூன்று வேதங்களும், மூன்று மூர்த்திகளும், மூன்று லோகங்களும், மூன்று குணங்களும் மிக்கச் சகலமும், சாட்சாப் பரப்பிரம்ம ரூபமான பிரணவ மந்திரத்திலே இருப்பது நிச்சயம்.

சகல சுத்த புருஷர்கள்

இந்தக் கேவலக் கும்பகப் பிரகாரமும் சகல சுத்த புருஷர்கள் அறிவார்கள். இந்தக் கேவல கும்பகமானது சர்வ தந்திரங்களிலேயும் சிரேட்டமானது. மகா ரகசியமாக ஆச்சரியமாக இருக்கும்.

தாரணா சித்தி

யாரொருவன் தேகத்துக்கு எப்படிப் பிராண வாயுடைய போக்குவரத்துகள் நடக்கின்றதோ அதை யறிந்து அதுக்குத் தக்க விதானத்தினாலே எத்தினமும் செய்பவனுக்கு வாய்வு தாரணாசித்தி பலிக்கும்.

கேவல கும்பக இலட்சணம்

சித்த புருஷர்களுக்குச் சம்பந்தமான சாத்திரங் களிலே கேவல கும்பக இலட்சணம் சொல்லியிருக்கும்.

விவேகியற்றவர்கள்

ஆனாலும் அதிக ரகசியமாய் இருக்கின்றபடியால் விவேகியற்றவர்களுக்குத் தெரியப்படுத்துவதில்லை.

முத்திரா கர்ண பந்தனம்

குரு கடாட்சத்தினாலே கேவல கும்பக அப்பியாசம் சித்திச்சால் மட்டுமே முத்திரா கர்ண பந்தனங்களாலே ஒன்றுமில்லை.

அய்க்கியம்

கேவல கும்பகத்திலே பிராணவாயு விஷ்ணு பதத்திலே சத்தமாகாமல் நின்றால் அப்போது சிவ பரமாத்மாக்களுக்கு அயிக்கியம் உண்டாகும்.

பரம பதம்

சத்தமாகாமல் நிற்பதே தத்துவம் என்றும், அனுர்வசனம் என்றும், பரமபதம் என்றும் சொல்லப்படுகிறது.

லயஸ்தானம்

அதுவே பூத இந்திரிய வார்தகமான பிரகிரிதிக்கும், சகலத் தத்துவங்களுக்கும் லயஸ்தானம் என்றும் அறியவேண்டும்.

விருத்திர கீதமான சவுக்கியம்

மூல பந்தனம், ஒட்டியான பந்தனம், சாலாந்திர பந்தனம் ஆகிய பந்தனங்களை அப்பியாசம் செய்த யோகீசுரனுக்கு அந்த அப்பியாசத்தினாலே ஆர்த்துவமான பிராணவாயு சுத்த ஆகாசத்திலே நின்றால் அதனாலே பூரத்தமங்களும், இந்திரியங்களும், விசயங்களும், இந்திரிய விசயங்களும் மனம் புத்தி சித்தமாங்காரங்களும் இது முதலாகிய அனைத்தும் பெறுவர். அப்போது விருத்திர கீதமான சவுக்கியம் வருமென்று சொல்லப்படுகிறது.

யோகீசுரர்

அந்தப் பந்தத் திரயங்கள் ஏதெனில் யாதொன்றும் வாயு விரோதனத்தினாலே அபானன் என்கின்ற சூரியனைப் பிராணன் என்கின்ற சந்திரனுடனே சேர்த்து உர்த்தமம் செய்து சமஸ்த்த யோக சித்திகள் அடையச் செய்யுமோ அதனாலே மூலப்பந்தனம் என்று யோகீசுரரால் சொல்லப்படுகிறது.

ஒட்டியானப் பந்தனம்

நாபிக்குக் கீழ் அபானம், நாபிக்கு மேல் பிராணனுமாக நிறுத்திப் பலத்தினாலே பந்தனம் செய்யவேண்டும். ஒட்டியானப் பந்தனம் என்றும் இதனைக் கூறுவர்.

மகா உத்தமமான பந்தனம்

இந்தப் பந்தனமானது, சகல ரோகங்களையும், சார மரணங்களையும் போக்கிவிடும். மகா உத்தமமான பந்தனம் என்றும் சொல்லப்படுகிறது.

சாலாந்திர பந்தனம்

கழுத்தை வளைத்துக்கொண்டு இதயத்திலே மூட்டுவாய், திடமாகச் செய்கின்றபோது சாலாந்திர பந்தனம் என்றும் சொல்லப்படுகிறது. இது பூரகத்திலே இருக்கின்ற அமிர்தத்தை இறங்கச் செய்யும்.

சகல வாய்வு

இப்படிப்பட்ட பந்தனங்கள் மூன்றையும் அற்பிசித்து பூரத்த, மத்திய பந்தனங்களாலேயும் அபான வாயுவினோடு ஆகும் சனத்தினாலேயும் ஒருநாள் சிகாரந்திரத்திலே சகல வாய்வும் பிரவேசிக்கும்.

கேவல கும்ப சித்தி

அதனாலே சீக்கிரமாகக் கேவல கும்பக சித்தியாகும்.

கேவல கும்பகம்

இந்தக் கேவல கும்பகமானது சர்வ காலமும் யாரொரு வனுக்கு அப்பியாசமானவனே மகா பிரசித்தரான யோகீசுவரன் என்று சொல்லப்படுகிறது.

பிராணாயம நிதானம்

இதன்படி பிராணாயாம நிதானத்தை மூன்று மாசம் நேரம் தவறாமல் அப்பியாசம் செய்து யோகீசுவரனுக்குத் தேகம் லெகுத்துவமும், அக்கினி தீபனமும், சமஸ்த்த நாடி சுத்தியும் நாதச் சிரவணமும் உண்டாகும்.

கேவல கும்பக அப்பியாசம்

ஆகாசத்திலே பிராணவாயு அடைந்தது என்றால் அந்த கணமே உன்மணியாகும். அந்த உன்மணியடை என்கினற வரைக்கும் பிராக்கியனானவன் இந்தக் கேவல கும்பக அற்பியாசத்தை விடாமல் அனுசரிக்க வேண்டும்.

மத்தியப் பரப்பிரம்மம்

அனுசரிக்கின்றபடி முன்பே பிரம்மாக்கினியான குருவை வணங்கி அந்தரங்கத்திலே இருக்கின்ற காமக் குரோதங்களாகிய சத்துருக்கள் ஆறு பேரையும் நினைத்து யோகாந்தமாய் சுத்தமான தலத்தில் இருந்து கொண்டு புருவ மத்தியப் பரப்பிரம்மத்திலே சிவனைத் தியானம் செய்யவேண்டும்.

விந்து இரத்தினம்

அப்படித் தியானிக்கும்போது சர்வகாலமும் அனாகத் திவ்விய நாதத்தைக் கேட்கவேண்டும். விபின்னமாய் நிர்மலமான விந்து இரத்தினத்தையும் தரிசிக்க வேண்டும்.

அமிர்த பாணம்

சந்திர மண்டலத்திலே இருந்து வருகின்ற அமிர்தத்தைப் பாணம் செய்து சங்கல்ப்ப விகற்பங்களுடைய கூட்டத்தைச் சோதிக்க வேண்டும்.

திரிகூடத் தானம்

திரிகூடத் தானத்திலே வாயுவைத் திடமாக நிறுத்தி, அந்த வாயுவை மனத்துடனே கூடத் திரிகோண பூரமான சுழிமுனை நாடி மார்க்கத்திலே பிரவேசிக்க வேண்டும்.

விஷ்ணு பதம்

அப்போது ஊர்த்தம, சூட்சும, குண்டலியை எழுப்பி விஷ்ணு பதத்திலே நிறுத்தி சுகத்தை அனுபவிக்க வேண்டும்.

சித்தியான பிராணாயாமம்

இந்த விஷ்ணுப் பதமானது ஆகாச சொரூபமும், சர்வ வியாபகமும் சதாகாலமும் பாவிக்கப்பட்ட விஷ்ணு ரூபமான சிவனைக் கேவல கும்பக அப்பியாசத்தினால் சித்தியான பிராணாயாம தண்ணீரால் அபிசேகித்துப் பூசிக்க வேண்டும்.

அது சதாசிவ யோகீசுரனாலே இரசிக்கப்பட்ட சிவயோக தீபிகையாகின்ற கிரந்தத்திலே வாங்கிய சதுரங்க விதானம் என்கின்ற இரண்டாம் படலம் முற்றும்.

இரண்டாம் படலம் முற்றும்

திருச்சிற்றபலம்.

மூன்றாவது படலம்

இதியமாதி சதுராங்க விதானம்
பாஷ்யமுக்தமபிரஞ்ஜித வாக்யை : |
அத சிவார்ப்பித மனார்ச்ச்ருணு
வக்ஷ்யே சாந்தராங்க சதுராங்க விதானம் : ||

இதிய மாதி சதுராங்க
விதான வாங்கிய முத்தம்
பிரசிதயாக் கிரியை சசிவார
பித்தம் மனாசுருனு வச்சியே சாந்தராங்க.

சதுரங்கத்தினால் எழுதியது.

சதுரங்க விதானம்

இப்படி நியமாதி வாங்கி சதுரங்க விதானத்தை உத்தமமான வாக்கியங்களாலே சொல்லப்பட்டது. இனிமேல் ஓ சீடனே! அந்தரங்க, சதுரங்க விதானத்தைச் சொல்கிறேன். சிவாற்பிதமான மனத்தோடு கூடியவனே கேள்.

நின்மல கெந்தம்

எவ்வாறெனில் சுத்த மனசாகின்ற சாணையிலே தோத்திராதி முதலான விந்திரிய வர்க்கங்களாலே அரைக்கப் பட்டுப் பிறந்த விசயங்களை நின்மல கெந்தத்தைச் சிவலிங்கத்துக்குச் சமர்ப்பிக்கவேண்டும்.

பரமத்த பவக்கியானி

கூர்மமானது தன்னுடைய அங்கங்களைத் தன்னுடைய தேகத்தில் அடக்கிக் கொள்ளும் விதமாகச் சகல இந்திரங் களையும் தனக்குள்ளே அடக்கிக் கொண்டு யோகீசுர னானவன் நேரம் தப்பாமல் சிவ தியானம் செய்ய வேண்டும். இதனால் யோகீசுரன் பரமத்த எனக் கூறுவர்.

வண்ணங்கள்

இவ்வித வண்ணங்களான ஆதாராதி வர்மங்களில் பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற நிர்மல புட்பங்களிலே, ஓ சீடனே! நானாவிதங்களான சகுண, நிற்குண பாவ ஸ்ரீலிங்க மூர்த்தியை அகோரத்திரமும் பூசை செய்யவேண்டும்.

தியான ஸ்தலங்கள்

ஆதார கமலங்களாவன:- 1. ஆதாரம் என்றும், 2. லிங்க ஸ்தானம் என்றும், 3. மணப்பூரகம் என்றும், 4. நாபி ஸ்தானம் என்றும், 5. அனாகதம் இருதய ஸ்தானம் என்றும், 6. விசத்திட்ட ஸ்தானம் ஆக்கினை - புருவமத்திய, 7. சகஸ்த்திர ராமன பேர் பிலஸ்தானம். இந்த ஏழும் யோகீசுனுக்குச் சுகப்பிரதாபமாய் மகா விசித்திரமான தியான ஸ்தலங்கள் என்று அறிய வேண்டும்.

நித்திய முத்தன்

ஓ சீடனே! அந்தர் முகம் செய்து திருஷ்டி வாக்கியத்திலே சிதறாமல் நிறுத்தித் தனக்கு இஷ்டமான ஆசனத்திலே தேகம் இளைக்காமல் அமைதியாக இருந்து கொண்டு இருதயத்திலே பரமமாய், சுத்தமாய் ஆனந்த ரூபமாய் அசலாய் ஆத்ம ரூபமான சிவனைத் சதா காலமும் தியானம் செய்ய வேண்டும். அப்போது நீயும் நித்திய முத்தனவாய்.

நவ சக்கர தானங்கள்

சகலமான தியான ஸ்தலங்களிலேயும் நவ சக்கரங்கள் சிரேஷ்டங்கள் என்று யோகீசுரர்களால் சொல்லுகின்றபடி பட்ட நவ சக்கர தானங்களை இப்போது உனக்குச் சொல்லுகிறேன்.

அதோ சக்தி

மூலாதாரத்திலே மூன்று வளையமாகக் கமலம்போல் சக்கரமுண்டு. அதனுடைய காந்தி தத்திலே அக்கினிப் பிரகாசமாய் சருவா பீசங்களைக் கொடுப்பதான அதோ சக்தியைத் தியானம் பண்ணவேண்டும்.

கமலம்

அதுக்குமேல் சுவாதிட்டான சக்கரம் நான்கு இதழ் களுடன் கூடிய கமலம். அதுவே ஒட்டியான பந்தத்தலம். அதிலே மேற்கு முகமாக இருக்கின்ற சிவனைத் தியானம் பண்ண வேண்டும்.

நாபி

அதுக்குமேல் நாபி ஸ்தானத்திலே ஐந்து வளைய மான மணிப்பூரக சக்கரமுண்டு. அதிலே மின்னல் கொடி போல் சற்பகரமாய் முத்திப் பிரதையான மத்திம குண்டலினி சத்தியைத் தியானம் பண்ண வேண்டும்.

இதயம்

அதுக்குமேல் இதய ஸ்தானத்திலே அனாகத சக்கரமுண்டு. எட்டு இதழ்களுடன் கூடிய கமலம்.

அதிலே கரணிகர சோதிலிங்கரமான ஸ்த்தாயினி யான சத்தியைத் தியானம் பண்ணவேண்டும்.

விசித்தி

அதுக்குமேல் மேற்கண்ட ஸ்தானத்திலே பஞ்சவர்ண மான விசித்தி சக்கரமுண்டு. அதிலே நான்கு அங்குலமான ஸ்தானத்திலே இடைபின் கலைகளுடைய மத்தியத்திலே சுழிமுனையான சத்தியை வணங்கித் தியானிக்க வேண்டும்.

இரச கந்தகம்

அதுக்குமேல் ஆறாம் விதானமான கண்டிகா மூலச் சக்கரமுண்டு. இதை இரச கந்தகம் என்று சொல்வர்.

அதுவே சமத்துவாரம் என்றும், சூனிய தத்துவம் என்றும் சொல்லப்படும். அதிலே சித்திக்கும் பொருட்டுத் தியானம் செய்யவேண்டும்.

ஏகநாத கந்தம்

அதுக்குமேல் ஏழாவதாகப் பூசச் சக்கரமுண்டு. அது ஏகநாத கந்தம் என்றும், வாக்கு சித்திகரமென்றும் சொல்லப் படும். அதுக்கு நடுவிலே தியான லாஞ்சனம் ஈன தீபச்சிதா காசத்தைத் தியானம் செய்யவேண்டும்.

பூரணச் சந்திர பீடம்

அதுக்குமேல் பிரமந்திரத்திலே நடுவில் சூட்சுமமான அஷ்ம சக்கரமுண்டு. அதுவே சாலாந்திரமான மோட்சப் பிரதமானது. பிரகாச ரூபமாய் தியானம் பண்ணவேண்டும். அதுக்குமேல் ஒன்பதாவது தான் ஆகாசச் சக்கரம் பிரகாசமா யிருக்கிறது. அது திரிகூடம் என்றும், பூரணச் சந்திரபீடம் என்றும் சொல்லப்படும்.

ஊர்த்த சத்தி

அது பதினாறு இதழ்களுடன் கூடிய கமலம். அதில் சுப்பிரதமான ஆனிய ஊர்த்த சத்தியைத் தியானம் பண்ண வேண்டும். இப்படி ஒன்பது சக்கரம் சொல்லப்பட்டுள்ளது.

நவச்சக்கரம்

ஸ்ரீ குருமூர்த்தியானவர் சீடனைப் பார்த்து இதன்படிச் செய்தால் மோட்ச தியான யோகீசுரனாவான். இந்த நவச் சக்கரத்தானங்களை அறிந்து தியானம் செய்யவேண்டும் என்று சொல்லி, பின்பும் சீடனைப் பார்த்து வாரும் பிள்ளாய், விசேசமாகப் பதினாறு ஆதாரங்கள் உண்டு. அவை

பதினாறு ஆதாரங்கள்

பாதாங்குல ஸ்தானம், பாதமூல ஸ்தானம், குத ஸ்தானம், லிங்க ஸ்தானம், பந்தன ஸ்தானம், நாபி ஸ்தானம், இதய ஸ்தானம், கண்ட ஸ்தானம், கெண்டிகா ஸ்தானம், தாது மூல ஸ்தானம், ரசனா ஸ்தானம், கெந்த ஸ்தானம், ஆக்கிராண மூலஸ்தானம், இலாட ஸ்தானம், பூதவுதானம், நேத்திர ஆதார ஸ்தானம் எனப் பதினாறு ஸ்தானங்களாகும்.

பாதாங்குல ஸ்தானம்

அதில் மூலாதாரமாவது, பாதாங்குல ஸ்தானம். அதிலே தியானிக்கும்போது பார்வை ஸ்திரப்படும்.

பாத மூல ஸ்தானம்

இரண்டாம் முறையாவது, பாதமூல ஸ்தானத்திலே குதியங்காலைக் கையினாலே பிடித்துத் திடப்படுத்தினால் அந்தக் கனமே அக்கினித் தீபம் உண்டாகும்.

குத ஸ்தானம்

அதுக்குமேல் மூன்றாவதாக, குத ஸ்தானம். அது சர்வ காலமும் சங்கோ கனத்தினாலே ஆகுமசனம் செய்தால் அபானவாய்வு ஸ்திரப்படும்.

லிங்க ஸ்தானம்

நான்காவது, லிங்க ஸ்தானம். அதில் தண்டசங் கோசனம் செய்தால் மனோவாய்வுகள் மூன்றின் முடிச்சு பேதலித்துப் பின்பு வச்சிர நாடியான சுழிமுனையிலே பிரவேசிக்கும். அதனால் விந்து ஸ்தம்பனமாகும்.

பந்தன ஸ்தானம்

ஐந்தாவது, மூல ஒட்டியான பந்தன ஸ்தானம். அது விசைக்கு விசை முத்திரையிலே நிறுத்தினால் மல மூத்திரக் கிருமி நாசமாகும்.

நாபி ஸ்தானம்

ஆறாவது, நாபி ஸ்தானம். இதில் ஒருவன் புத்திமான் ஆவான். ஏகாகிரச் சித்தத்தோடு கூடிய சமாதியினாலே பிரணவத்தைத் தியானத்தால் அவனுக்கு நாதம் கேட்கப்படும்.

இதய ஸ்தானம்

ஏழாவது, இதய ஸ்தான மத்தியில் பிராணவாயுவை நிறுத்தினால் உடனே மத்திய கமலம் விகளட்சிக்கும்.

கண்ட ஸ்தானம்

எட்டாவதாகக் கண்ட ஸ்தானம். அதில் கண்ட மூலத்தை நாடியினாலே அமுக்கினால் அப்போது இடை பிங்கலை இவற்றில் சஞ்சரிக்கும் வாய்வு ஸ்திரப்படும்.

கெண்டிகா ஸ்தானம்

ஒன்பதாவதாக, கெண்டிகா ஸ்தானம். அதிலே நாக்கு நுனியை நிறுத்தினால் திரதி காரணியான அமிர்தகலை இறங்கும்.

தாது மூல ஸ்தானம்

பத்தாவதாக, தாது மூல ஸ்தானம். அதனுடைய கர்ப்பக் கோளகத்திலே சாலந்த கனங்களாலே நின்ற நாக்கு நுனியை விபரீதமாகப் பிரவேசிக்கச் செய்து வன உன்மணி ப்ரபத்தை அடைவான்.

ரசனா ஸ்தானம்

பதினொன்றாவதாக, ரசனா ஸ்தானம். அதிலே நாக்கு நுனியை உறையச் செய்பவனுக்கு அமிர்த பானமும், கவித்துவம் சொல்கின்ற சித்தியும் உண்டாகும்.

கெந்த ஸ்தானம்

பனிரெண்டாவது கெந்த ஸ்தானம். அதுக்குமேல் நாக்கு நுனியை உறையவிட்டால் ஆறு மாதத்தில் இந்தச் சரச் சோதிக் காணப்படும்.

ஆக்கிராண மூல ஸ்தானம்

பதிமூன்றாவதாக ஆக்கிராண மூலஸ்தானம். அதிலே யாராவது ஒருவன் நித்தியமும் மனத்தில் திஷ்டியைத் திடப்படுத்தினவனுக்கு வாய்வு திறப்படும்.

இலாட ஸ்தானம்

பதினான்காவதாக, இலாட ஸ்தானம். அதிலே யோகீசுரனானவன் மனத்தில் வாயுவை நிறுத்தினால் சர்வ சித்திகளையும் அடைவான்.

பூதவுதானம்

பதினைந்தாவதாக, பூதவுதானம். அதுக்கு மேலாக நிச்சிய திஷ்ட்டியினால் பார்த்தால் சீக்கிரமாகக் கிராணாக் காரமாகக் காணப்படும்.

நேத்திர ஆதார ஸ்தானம்

பதினாறாவதாக, நேத்திர ஆதார ஸ்தானம். அதுக்கு மேற்பார்த்தவனுக்குக் கடைக் கண்ணால் மனோகரமான சோதி உண்மை சீக்கிரமாகக் காணப்படும். இந்தப்படிக்குச் சோடச ஆதாரங்களுடைய கிரகம் சொல்லப்படும்.

அஷ்டாவதானி

இப்போது சொன்னதாக வந்த திரயங்கள் மூன்று ஆசன, வந்தன, மந்திரம், நாதச்சிரவணம், கேவலம், கும்பகத் தியானமாகிய எட்டுவிதங்களும் அற்பரசிக்க யோகீசுரன் ஆவான். அஷ்டாவதானி என்றும் சொல்லப்படுவான்.

லிங்க பூசை

தேகம் என்கின்ற பாத்திரத்தில் விளங்கிக் கொண்டிருக் கின்ற தியானம் என்ற அக்கினியினாலே பூத குணங்களாகின்ற தெசங்கத் தூபத்தைப் போட்டு மனோதாரணையாக லிங்க பூசை செய்யவேண்டும்.

தாரணா இலட்சணங்கள்

முக்கியமாகத் தியான கோசரத்தினாலே மனம் திடமானால் அதே தாரணை என்று சிவயோகிகள் சொல்லுவார்கள். அதனுடைய கிரமம் முன் சொல்லாத காரணத்தால் இப்போது தாரணா இலட்சணங்களை வெவ்வேறாகச் சொல்லப்படுகிறார்கள்.

தாரணை

தாரணையாவது, தாருணி என்றும், வாருணி என்றும், ஆக்கினை என்றும், வாயு என்றும், நபேரமை

என்றும் இந்த ஐந்தும் ஐந்துவிதமாக வித்துவான்களாலே சொல்லப்படுகிறது.

தாரணா பஞ்சகம்

ஆகையால் எப்போதும், அப்பியாச சூராளாக இருக்கின்ற பேர்களுக்குச் சர்வ சித்திகளையும் கொடுப்பதால் யோகீசுரா ளாலே பிரதி வியாதி தாரணா பஞ்சகம் சொல்லப்படுகிறது.

பூச்சக்கர ஸ்தானம்

அகில தாருணி என்கின்ற பேருடைய தாரணைக்குப் பாதாதியாக முழங்கால் வரைக்கும் பூச்சக்கர ஸ்தானம். அதிலே வகார பீஜத்தோடு கூட வாயுவை நிறுத்திச் சதுர்ப்புயங்களும் நான்கு முகங்களோடு கூடிச் சொர்ண சாயையாய் இருக்கின்ற பிரமதேவனை வணங்கி தாரணைச் செய்தால் பூமிக்கு வெற்றி உண்டாகும்.

வாருணி என்கின்ற தாரணை

இரண்டாவதான வாருணி என்கின்ற தாரணைக்கு முழங்கால் முதல் கொண்டு நாபி பரியந்தமான செலச் சக்கர ஸ்தானத்தில் பீஜத்தோடு கூடிய வாயுவை நிறுத்திப் பீதாம் பரதராய் பிரசன்னமும், சங்கும், சக்கரங்களும் தரித்துச் சுத்தப் படிக வர்ணமாக மன்மத குருவான ஸ்ரீ மகா விஷ்ணுவை வணங்கி தாரணை செய்தால் சீக்கிரமாக வெற்றி கிட்டும்.

ஆக்கிணை

மூன்றாவதாக ஆக்கிணை என்கின்ற தாரணைக்கு நாபி முதற்கொண்டு சண்ட பரியந்தமான அக்கினி சக்கர ஸ்தானத்தில் அரகரா பீசத்தோடு வாயுவை நிறுத்தி மூன்று கண்களும் பிரசன்ன வதனமும் அபய வரதமும் பரமோ துரிதமான உடலும், சாந்த சொரூபமும், வால சூரியப்

பிரகாசராகிய உருத்திரமூர்த்தியை வணங்கித் தாரணைச் செய்தால் அக்கினி செயமுண்டாகும்.

மனவாய்

நான்காவதாக, மனவாய் என்கின்ற தாரணைக்குக் கண்டம் முதல் கொண்டு புருவமத்திய பரியந்தமான வாயுவு சக்கர ஸ்தானத்தில் அகார பீசத்தோடு கூடிய வாய்வை நிறுத்திப் பிரகாச சொரூபமாக நிச்சளம் திவ்விய தேய்சு உடையதாகிய மயேசுபரனைத் தியானம் செய்து தாரணை செய்தால் வாய்வு செயமாகும். வாயுவைப்போல் சஞ்சரிக்கலாம்.

நபோமை

ஐந்தாவதான, நபோமை என்கின்ற தாரணைக்குப் புருவமத்தியை முதலாகக் கொண்டு இலாடாந்தமான ஆகாசச் சக்கர ஸ்தானம், அதிலே சகார பீசத்தோடு கூடிய வாயுவைத் திடப்படுத்திப் பஞ்சவதனமும் பத்துக் கைகளும், மூன்று கண்களும், சந்திர கிரீடமும் தரித்துச் சகல ஆயுதங்களும் தரித்து சருவத் தத்துவங்களை ஆதரித்து விந்து, ஆகாச ரூபமான சதாசிவனை வணங்கித் தாரணை செய்தால் முத்தியை அடைவான்.

காய சித்தி

இதன்படி ஐந்து தாரணைகளையும் ஒவ்வொன்றுக்கு ஒரு நாழிகை நிறுத்திக் கொண்டவன் காயசித்தி அடைவான்.

பிராணன்

இந்தப் பூமியில் இருக்கின்ற ஐந்து தாரணைகளில் பிராணனை நிறுத்திக்கொண்ட மனிதனுக்குப் பூர்வ சென்ம கன்மங்களாலே பிறந்த சகல ரோகங்களும் அடிபடும் சந்தேகமில்லை.

தியானம், கருமம்

தியானத்தினாலும், கருமத்தினாலும் இந்த ஐந்து தாரணைகளும் எந்த யோகீசுரரால் தரிக்கப்படுமோ அவர்கள் சமுசாரமாகின்ற சமுத்திரத்தைக் கடப்பார்கள்.

நிர்மல புத்தி

சுக்கியான தீபத்தை நிர்மல புத்தி என்கின்ற கையினாலே பிடித்து இருதயம் என்கின்ற கிரகத்தில் பிரவேசித்து அக்கினியாய் இருக்கின்ற அந்தகாரத்தைப் போக்கி அங்கே இருக்கின்ற ஆத்மலிங்க மூர்த்தியை மனோதிடத்தினாலே பார்த்துத் திடமான சமாதியிலே வணங்குவான்.

நெய்வேத்தியம்

ஓ சீடனே! நீ உன்னுடைய ஜீவாத்மாவை அந்த ஆத்மலிங்க மூர்த்தியை நெய்வேத்தியம் செய்யவேண்டும்.

சமாதி

உப்பும், தண்ணீரும் ஒன்றானது போல் மனம் ஆத்மாவோடு கூடினால் அதுவே சமாதி என்று யோகீசுரனால் சொல்லப்படுகிறது.

சுத்த சமாதி

எப்போதும் ஜீவ ஆத்மாவும், பரமாத்மாவும் ஐக்கிய மாகும். அப்போது சமஸ்த்த வஸ்த்துகளுக்கு மிஞ்சி சுத்த சமாதி அடைபவர்கள் யோகீசுரன் ஆவார்கள்.

பிரம சமாதி

இந்தச் சமாதியினாலே பிரமத்தில் அடைந்து மனதுடைய யோகீசுரனுக்குத் தோத்திராதி விசயங்களும், சத்தாதி விசயங்களும், அகங்காரமும், மனசும் விருத்திகளும், அவமானங்களும், சுக துக்கங்களும், சீத உஷ்ணங்களும், புண்ணிய பாவங்களும், சங்கல்ப

சாலங்களும் இவற்றால் லேச மாத்திரமானாலுமில்லை என்று அறிவது இது ஆச்சரியம்.

யோகீசுரன் நிலை

சமாதி ஈனமான மனசுடைய யோகீசுரன் உத்தம ஆகாரம் புசித்தாலும் புசிப்பர். நிராகரிப்பாகவும் இருப்பர். மிதமாய் நித்திரைக் கொள்வர், இல்லாமல் இருந்தாலும் இருப்பர், சகல பூமியிலே சஞ்சரித்தாலும் சஞ்சரிப்பர், குகையில் இருந்தாலும் இருப்பர்.

அபேட்சை இல்லாமல் சகல கரும கிரியைகள் பண்ணினாலும் பண்ணுவர். பண்ணாமல் இருந்தாலும் இருப்பர்.

இப்படி நாளும் சேட்டைகள் செய்து கொண்டிருந்தும் சமாதி லீனமான மனம் சலியாதிருப்பார்கள்.

இஷ்டாங்க யோகம்

இப்படிப்பட்ட இஷ்டாங்க யோகத்தோடு கூடிய அடையோகத்தை ஈடுபாடு இல்லாமல் அப்பியாசம் செய்து நிஷ்டா ஆபரனான யோகீசுவரனுக்குச் சகல சித்திகளும் உண்டாகும். அந்த சித்திகள் என்னவென்று சொல்லுகிறோம்.

யோகம்

அப்படிப்பட்ட யோகீசுரனுக்கு அப்பியாசக் காலத்தில் கிரமமாக முதல் வருடத்தில் சகல ரோகங்களும் போக்குவிக்கும். சர்வசனப் பிரியனாவான்.

தேவ வாக்கு

இரண்டாம் வருடத்தில் தேவ வாக்கினால் சகல வித்தைகளும் சொல்லுவான். மூன்றாம் வருடத்தில் சற்பாதிகளால் வாதையில்லை.

சீதோஷ்ணங்கள்

நான்காம் வருடத்தில் பசி, தாகம், நித்திரை, சீதோஷ்ணங் களும் இல்லாமல் இருப்பர்.

வாக்குச் சிதத்தி

ஐந்தாம் வருடத்தில் தூரச் சிரவணமும் வாக்குச் சித்தியும் பரகாயப் பிரவேசமும் உண்டாகும்.

வாதை

ஆறாம் வருடத்தில் வச்சிராயுத ஆயுதத்தால் வாதையில்லை. மிகுந்த வேதங்களும், தூர தரிசனமும் உண்டாகும்.

தேவ தத்துவம்

ஏழாம் வருடத்தில் பூமியிலே இருக்காமல் தேவ தத்துவம் அடைவான்.

ஐசுவரியம்

எட்டாம் வருடத்தில் அஷ்ட்டா ஐசுவரியங்களும் உண்டாகும்.

வச்சிர தேகம்

ஒன்பதாம் வருடத்தில் தேகம் வச்சிர தேகமாக ஆகாச கவனமும், சகல திக்குகளின் சஞ்சாரமும் உண்டாகும்.

மனோ வேகம்

பத்தாம் வருடத்தில் மனோ வேகமாக நினைத்தால் அங்கே அந்தச் சமயத்திலே போகலாம்.

சகல சித்தி

பதினோராம் வருடத்தில் சகல பிணிகளும், ஆச்சரியம் அடையக்கூடிய சராசங்கள் தன் வசமாகச் சருவக்கியத் தத்துவமும் சகல சித்திகளும் உண்டாகும்.

சமத்தவன்

பனிரெண்டாம் வருடத்தில் சாட்சாத் பரமேசுவரனுக்குச் சடமான மாயப் பிரபஞ்சத்தையும் ஆதரிக்கவும் வெறுக்கவும் தானே சமத்தவனாகத் திகழ்வான்.

திட ஆத்மா

இந்த வகையாக சற்குரு பாத பத்தியினால் பனிரெண்டு வருடமும் கவலையில்லாமல் அப்பியாசம் செய்து யோகீசுரத் திட ஆத்மாவாக இருப்பர். சகல சித்திகளையும் அடைந்து சீவன் முத்தனாய் தமக்குச் சம்மதித்தபடி சஞ்சரித்துக் கொண்டிருப்பர்.

அப்பியாசம்

ஆகையால் மகா ஆச்சரியமாகச் சிவ பூசாங்கமான இந்த அட்டாங்க யோகத்தை மகா ஆதரவினால் நீயும் அப்பியாசம் செய்யவேண்டும்.

விதேக முத்தி

இந்த யோகமானது சதா காலமும் அப்பியாசம் செய்யும் போது செனன மரணங்களில்லாமல் இருந்த நாட்களை எல்லாம் லோகத்திலே விசையனாகக் கொண்டு அதன்மேல் விதேக முத்தியடைவான்.

மயோசுபரம்

யேமம் நியதித்த இரண்டும் ஆதரித்தபடியால் தானே சிவபக்தன் என்று சொல்லப்படும். சித்தரசன் அப்பியாசம் செய்தவன் மயோசுபரத்தை அடைவான்.

பிராண லிங்கி

சராசரலஸ்தானமும் லிங்க சொரூபமான ஆகாசத்தி னாலே பிராணவாயுவைக் கேவல கும்பகத்தினாலே இரசிக்கச் செய்தவன் பிராண லிங்கி என்று சொல்லப் படுவான்.

பிரசாதி

பிரம்மா பிரத்தியா காரத்தோடு கூடியவன் பிரசாதி யென்று சொல்லப்படுவான்.

நிச்சள சமாதி

நிச்சள சமாதியினால் லிங்க அயிக்கியம் அடைந்தவன் அத்தொய்த பாவமான ஆத்மாவானவன். இப்படி அட்டாங்க யோக சிஷ்ட்டனாவான். யோகீசுர வீர சைவன் என்று சொல்லப்படும்.

சிவயோக அப்பியாசம்

ஆகையால் தோசரகிதனான ஓ சீடனே! நீயும் கர்மங்களி னாலும், ஞானங்களினாலும் சர்வ எந்தத்தினங் களாலும், இந்த அஷ்ட்டாங்க யோக மார்க்கத்தினாலே சிவயோக அப்பியாசம் செய்யவேண்டும்.

இவ்வாறு சதாசிவயோகீசுரனால் இரட்சிக்கப்பட்ட சிவயோகத் தீபிகை என்கின்ற கிரகத்தில் அஷ்டாங்க சதுரங்க விதானமானது மூன்றாம் படலம் முற்றும்.

மூன்றாம் படலம் முற்றும்

திருச்சிற்றம்பலம்.

நான்காம் படலம்

யத் ஸர்வகம் ச்ருதிசிர: பரமைகமாத்யம்
ஜ்யோதிர்மயம் த்ருடவிரக்த ஜனாபிகம்யம்|
கோ ஸம்ஸ்திதம் குருஸதாசிவ யோகிநாதம்
லிங்க ஸ்வரூபமஹமன்வஹமாச்ரயாமி||

எச்சருவகம், சுருதி சிரகம், பரமேக மாத்தியம், சோதிர்மயம், திருடவிர்த்த சேனாதிம்மியம், பிரசமஸ்த்தம, பிருசவுர சிவயொளி நாபர் சொரூபமகம், நமகம், நாயர் மகபீகை.

குருப் பிரார்த்தனை

சர்வ வியாபாகமாக வேத சிரசுகளிலே இருப்பதால் அத்தோயதத்துக்கும் ஆதியாய் சோதிர் மயமானத் தைரியத்தோடு கூடிய யோகீசுரனை அடையத் தக்கதான இலட்சியத்திலே பிரகாசிப்பதாய் இருக்கின்ற யாதொரு வஸ்து உண்டோ அதற்குத் தக்க பிரம்ம சொரூபமான சதாசிவ யோகீசுரன் என்கின்ற லிங்க சொரூபியான பரம குருவை நான் பிரதி தினமும் சேவிக்கின்றேன் என்று குருப் பிரார்த்தனை செய்யவேண்டும்.

சிரேட்டம்

சகல யோகங்களிலேயும் இராச யோகம் சிரேட்டம் என்று பெரியவர்களால் சொல்லப்படுகின்றன.

அஷ்ட்டாங்க அடையோகம்

ஆகையினால் ஓ சீடனே ! உனக்கு இப்போது இராசயோகத்துக்குச் சாதகமான அஷ்ட்டாங்க அடை யோகத்தைச் சொல்கிறேன். ஸ்ரீ குருமூர்த்தியானவர் சீடனைப் பார்த்துச் சொல்கிறார்.

லேமாதி அட்சரங்கள்

ஓ சீடனே ! முன் சொல்லப்பட்ட அடையோக அஷ்ட்டாங்கங்களுடன் இப்போது இராசயோக மார்க்கமாக ஒவ்வொரு கிரந்தத்தில் லேமாதி அட்சரங்கள் சொல்கிறேன். அதில் முதலில் ஏமம் பற்றிக் கூறுகிறேன்.

ஏமம்

ஏமமாவது, ஆகாரம், நித்திரை, இந்திரியங்கள், தேகம் சர்வ வியாபாரமும் சீதோஷ்ணங்களும் செய்வது சாந்தியடைவது ஏமம் என்று சொல்லப்படுவது.

அஷ்ட்டாங்கத்துக்கு முந்திய அங்கமான இந்த ஏமத்தை மெல்ல மெல்ல அப்பியாசம் செய்யவேண்டும்.

நியமம்

நியமமாவது, குரு பத்தியும், பரம தத்துவத்திலே அபேட்சையும் சங்கத் திரயங்களில் இல்லாமல் இருப்பதும் அதன்படி ஏல பித்த பதார்த்தங்களில் திருப்தி அடைவதும், ஏகாந்த ஸ்தலத்தில் வாசம் செய்வதும் மனோ நிவர்த்தியும் வைராக்கிய பாவமும் நியமங்கள் என்று சொல்லப்படுகின்றன.

ஆசனம்

ஆசனமானது சுகாசனத்திலே இருந்து கொண்டு சுய சொரூபத்தில் சதாகாலமும் அப்பியாசம் செய்வதும் சர்வ வஸ்துக்களாலும் பூர்வ பாவமடைகிறது. இவையே ஆசனம் என்று சொல்லப்படுகிறது.

பிராணாயாமம்

பிராணாயாமம் என்பது ரேசக, பூரக, கும்பகங்களாக இருப்பதால் பிராணனைத் திடப்படுத்துகிறது. செகத்துமித்தை என்கின்ற பாவமடைகிறது. இதுவே பிராணாயாமம் என்று சொல்லப்படுகிறது.

பிரத்தியாகாரம்

பிரத்தியாகாரம் என்பது, அந்தர்முகியானால் சித்தமும் நிர்மலமாகும்.

நிர்மலம்

அந்த நிர்மலத்தினால் வெகுமதி சைதன்னிய சாலத்தோடு கூடிய பிரபஞ்சத்தை மறந்து மனத்தினாலே உற்பத்தியாகின்ற நானாவிகாரங்களை நீக்கும். இதுவே பிரத்தியாகாரம் என்று சொல்லப்படுகிறது.

சலனம்

இந்தப் பிரத்தியாகாரத்தில் சலனமில்லாத மனத்தில் உண்டான யோகீசுரனுக்ச் சதாகாலமும் தியானம் செய்ய வேண்டும்.

தியானம்

தியானமானது, சோகம பாவத்திலே திடமான முக்கிய அத்தோவித பாவமடைவதும், லோகத்தில் விளங்க வேண்டி இருப்பதும் எந்தப் பரமசிவ சொரூபம் உண்டோ அதைப் பார்க்கின்ற நினைவாய் இருப்பதும், குருவின் அருளால் சர்வ பூதங்களையும் சமமாகப் பார்ப்பதும், சுய ஆத்மா அனுபவத்தினால் ஆனந்தம் அடைவதும் தியான நிஷ்டை என்று சொல்லப்படும்.

தாரணை

தாரணையாவது உள்ளும், புறமும் ஏகமாக விளங்குகின்ற பரம தத்துவ சொரூபத்தில் அதனை நிர்மல புத்தியினால் சலனமில்லாமல் நிறுத்திக்கொள்ளும்போது தாரணை என்று கூறுவர்.

கேவல தாரணை

அதில் சலனமில்லாத சித்தம் உண்டாவதே கேவல தாரணை என்று கூறுவர்.

நிற்விகற்ப சமாதி

இனி நிற்விகற்ப சமாதிப் பற்றிக் காண்போம். நிசானுபவ சீவ தத்துவம், சமஸ்த்த தத்துவ வசமான பாவமும் தாரணை சலனப்படாமலிருப்பதாகும். மந்திர பாவத்தினால் அனாயச கரமாகச் சதாக்காலமும் ஐக்கிய பாவனைச் சகசமாக நிற்கும். நிற்விகற்ப சமாதி என்று சொல்லப்படுகிறது.

இராசயோக அஷ்டாங்கம்

மிக ஆச்சரியப்படத்தக்க இந்த இராசயோக அஷ்டாங் கத்தைச் சற்புருசாளன் குருவின் ஆசீர்வாதத்தினால் அடைவான். இதர கர்மங்களை அடையமாட்டான்.

மகா ஆகாயகரம்

மகா ஆகாயகரமானது துலப்பமான அப்பியாச யோகம் இல்லாமல் ஒரு பலனுமில்லை. சற்குரு கடாட்சத்தினாலே ஒரு நிமிடத்தில் பிரம்ம அனுபவம் அடையமுடியும்.

பரப்பிரம்மா

உள்ளும் புறமும் சர்வ ஜீவராசிகளிலும் பரப்பிரம்மா சொரூபம் இருந்து கொண்டே இருக்கும். இருப்பினும் சற்குருவை வணங்காதவர்கள் பரமபதம் அடைய மாட்டார்கள்.

குருமுகம்

கண்டார்க் கியானிகளுக்கும், நம்மதக்காரர்களுக்கும் நான்குவித சாத்திரம் பாராயண அதிசாய விசுவாசங்கள்

இருப்பவர்களுக்கும், நான்காம் சிரமத்தின் நேமத்தில் தருகின்ற போகருக்கும் குருமுகம் இல்லாத அபரோட்சமான இந்த யோகத்தியானமானது அடங்காது.

சேத்திரத் தனம்

சேத்திரத் தனமாம் இயம்பிய கிரகம் ஸ்ரீ புத்திரனின் பந்துக்கள் அபிமானம், இரசவாதம் முதலான தாதுவாதங்கள், காமியங்கள், மந்திராலய இடங்களில் யோகங்கள் முதலாகிய பிரதிபந்தங்களால் கட்டுப்பட்டவர்களுக்கு, குருவின் அருள் கிடைக்காது.

சற்குரு

ஆதலால் முன் கூறிய வர்ணாச்சிரம், ஆசாரமுகம், பிரமத்தியானம் உண்டான சற்குருவை ஆதரிக்க வேண்டும். இந்த இலட்சணங்கள் இல்லாமல் போனால் அவரைவிட்டு வேறொரு சற்குருவை ஆதரிக்கவேண்டும்.

ஆத்மத் தத்துவம்

அத்வைதமும், ஆனந்தமும், ஆத்தியமும், நிரஞ்சனமும், நித்தியமும், நிற்சலமும் சச்சிதானந்த சொரூபமான ஆத்மத் தத்துவத்தைச் சுலபமாய் அறிபவர் சற்குருவை என்று அறிய வேண்டும்.

ஆகாசப் பஞ்சகரணம்

தியான வைராக்கியத்தால் மூன்று லோகங்களையும் ஆதரித்த சற்குருவை முன்னே ஆதரித்து அதன்படி தத்துவத் தியானம் அனுசரிக்க வேண்டும். மகத்துவமாக விளங்குவதைச் சொல்லுகிறோம். அமைதியாகக் கேள். ஆகாயத்தில் ஆகாசம் அங்கிசத் தியானம் என்பதை,

ஆகாச அங்கிசம்

ஆகாசத்தில் வாய்வு அங்கிசம் -சமான வாய்வு
ஆகாசத்தில் அக்கினி - அங்கிசம்
ஆகாசத்தில் தோத்திரம் - இந்திரியம்
ஆகாசத்தில் சிவாஅங்கிசம் - சத்தம்
ஆகாசத்தில் பூமி அங்கிசம் - வாக்கு

இந்த ஐந்தும் ஆகாசப் பஞ்சகரணம் எனப்படும்.

வாயு அங்கிசம்

ஆகாச அங்கிசம் - ஆகாச வாயு
வாய்வு அங்கிசம் - தியான வாயு
அக்கினி அங்கிசம் - தொக்கு வாயு
சிலா அங்கிசம் - பரிசம வாயு
பூமி அங்கிசம் - பாணி

இந்த ஐந்தும் வாய்வு பஞ்சகரணம்.

அக்கினி அங்கிசம்

அக்கினியிலே ஆகாச அங்கிசம் - புத்தி
அக்கினியிலே வாயு அங்கிசம் - விதான வாயு
அக்கினியிலே அக்கினி அங்கிசம் - நேத்திரம்
அக்கினியிலே சிலா அங்கிசம் - ரூபம்
அக்கினியிலே பூமி அங்கிசம் - பாதம்

இந்த ஐந்தும் அக்கினி பஞ்சகரணம்.

சல அங்கிசம்

சலத்தில் ஆகாச அங்கிசம் - சித்தம்
சலத்தில் வாய்வு அங்கிசம் - அபான வாயு
சலத்தில் அக்கினி அங்கிசம் - நாக்கு
சலத்தில் சல அங்கிசம் - ருசி
சலத்தில் பூமி அங்கிசம் - உபஸ்தம்

இந்த ஐந்தும் சலபஞ்சகரணமாகும்.

பிரதிவி அங்கிசம்

பிரதிவியால் ஆகாச அங்குசம்	-	ஆங்காரம்
பிரதிவியால் வாய்வு அங்கிசம்	-	பிராணவாயு
பிரதிவியால் அக்கினி அங்கிசம்	-	ஆக்கிரணம்
பிரதிவியில் சிலா அங்கிசம்	-	கந்தம்
பிரதிவியில் பிரதிவி அங்கிசம்	-	குதம்

இந்த ஐந்தும் பிரதிவி பஞ்சகரணமாகும்.

மோட்சகாரியவான்

பஞ்ச பூதங்களால் பிறந்த இந்த உருவத்தை ஐந்து தத்துவங்களாக யாரொருவன் அறிகின்றானோ அவனே தத்துவத்தியானி. அவனே மோட்சகாரியவான்.

திசை இந்திரியங்கள்

இந்தப் பஞ்சபூத சம்பந்தமான தத்துவங்களில் அத்தி, ஆன்மீக, ஆதிபூத, ஆதி தெய்வங்கள் மூன்றும் கிரகமாக இந்திரங்களிலும் மித்திராதி தேவதைகளிலும் அந்தக் கரணங்களிலும் உண்டாகி இருக்கும்.

இதில் தோத்திரம், அத்தி, ஆத்தும சத்தம், ஆதி பூதத் திசைகள், ஆதி தெய்வம் என்ற கிரமமாகத் திசை இந்திரியங் களுக்கும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

முக்தியடையாதவன்

ஞானபூதமும் அல்லாமல், குணங்களும் அல்லாமல், இந்திரியங்களும் அல்லாமல் தேகமும் அல்லாமல் பிராணனும் இல்லாமல், ஆச்சிரம, தர்ம, கர்மங்களுடன் கூடிய இந்தப் பிரபஞ்சமாவது நானல்ல வேறொன்று என்றால் நித்தியமும் ஏகமும், நிச்சலமும், எசகமும், நாத இரகசியமும் பிறப்பில் இல்லாததும், சாந்தமும்

சுகசொரூபமும், நிற்குணமும், சுத்த போத சொரூபமான எந்த வஸ்துவில் உண்டோ அதுவே நானென்று நிச்சயித்து நின்றவன் முத்தியடைவான் என்று சொல்லமுடியும்.

தூல சூட்சமக் காரணங்கள்

தூல சூட்சம காரணங்களால் விளங்குகின்ற தேகத் திரயங்களும் தேகத்துக்குட்பட்ட தோத்தாதி இந்திரியங் களும், வாக்காதியளான கர்ம இந்திரியங்களும், சத்தாதி விசயங்களான விடையங்களும், மனமும் ஆக 16 விகாரங்களும், மனோ, புத்திகளாகின்ற 17லிங்கங்களும் கர்த்தா, கர்மம், கிரியை, கியாதா, தியானம், கேயம், போதாபோகம், போக்கியம் இந்த ஒன்பது பதார்த் தங்களும் வகை கர்த்தா, கர்மம் செய்வர்.

அஷ்ட்ட பிரகருதிகள்

கர்மம் என்பது நடப்பது, கிரியை என்பது செய்ய வேண்டிய தொழில், கியாதா என்பது அறியத்தக்க புருடன், கியானம் என்பது அறிவு, கேமயம் என்பது அறியவேண்டிய பொருள், போரதா என்பது அனுபவிக்கத் தக்க புருடன், போகம் என்பது அனுபவம், போக்கியம் என்பது அனுபவிக்க வேண்டிய பதார்த்தம். இந்த ஒன்பது வகை பதார்த்தங்களும் பஞ்சபூத மாயாமோக அங்கமாக விளங்கும்.

அஷ்ட்ட பிரகருதிகளும் இவையென அறிந்து இவற்றினை அறிந்து மிஞ்சி நிற்பவன் தானென்று நிற்க வேண்டும்.

பாவனை

இடையில் நானல்ல, இவற்றுக்கு மிஞ்சின வஸ்து எது இருக்கின்றதோ அதுவே நானென்று பாவனை செய்ய வேண்டும்.

சத்திய, தியான சொரூபம்

சத்தியமும் தியான சொரூபமும் ஆனந்தம் என்று எந்த வஸ்துவானது வேதங்களிலே சொல்லப் பட்டுள்ளதோ அதுவே நித்தியானந்த சொரூபமான ஆத்மா. அதுவே நீயாவாய் நிச்சயம்.

சாங்கியத் தியானம்

தியானத்திலே மோட்சம் என்கின்ற வாக்கியத்தை ஆதரவாய்க் கேட்டு இந்தத் தியான யோகத்தில் மனத்தைத் திடப்படுத்து என்று குருமூர்த்தியானவர் கூறினார். இதுவே சாங்கியத் தியானம் என்றும், சாங்கிய யோகத்தைச் சொல்லி இனி, தாரக யோகத்தைச் சொல்லுகிறார்.

தாரக யோகம்

பிராண சினேகிதனான ஓ சீடனே! இனிமேல் இதுக்குமேல் சிரேஷ்ட்டமும், மகாரகசியமும், பிரத்திட்சப் பிரமாணமும் நமக்கு அனுபவ சித்தமுமான தாரக யோகத்தைச் சொல்லுகிறோம்.

தியான கிலேசம்

மந்திராலய அடயோகங்களினாலே பிரம அனுபவம் அடைகின்ற வரைக்கும் வித்து வாங்கித்திலான பேர்கள் விருதாப் பிரயாசங்களைத் தியானக் கிலேசங்களை அடைவார்கள்.

யோகீசுரன்

கண்களை மூடியானாலும் அரைக்கண் பார்வையி னாலே ஆனாலும், மனோபலத்தினாலும் சொரூபத்திற்குக் காரணமானவன் எவனோ அவனே யோகீசுரன்.

பிரமதாரகம்

சந்திர சூரியனுடைய நடுவிலே திடமான ஒளியுடைய தாரகங்களையும், அதே சொரூபமான விந்து இயக்கங்களையும் ஒன்றுபடுத்திப் பிரமதாரகம், அற்பாசிக்க வேண்டும்.

பிரம தரிசனம்

இந்த தாரக யோகத்தில் பிரம தரிசனம் செய்ய நினைப்பவன் வாங்கிய இலட்சியம், அந்தர லட்சியம், மத்திய லட்சியம் ஆகிய மூன்றிலும் காண்கின்ற, காணப்படாதது முண்டு. அவற்றை அப்பியாசம் செய்யவேண்டும்.

வெகுவித ரூபங்கள்

இதேபோன்று வெகுவித ரூபங்களான மூன்று இலட்சியங் களிலும் கூறுகிறோம் கேள்.

மூலக்கந்தத்திலிருந்து தென் இலக்கியமாய்ச் சந்திரப் பிரபையோடு கூடிய பிரம நாடியுமுண்டு.

அதனுடைய மத்தியப் பிரதேசத்திலே கோடி மின்னல் பிரபைப் போல் ஊர்தகாமியான ஒரு திவ்விய ஆற்றல் காணப்படும்.

தேய்சோமூர்த்தி

அந்த ஆற்றலானது தாமரை நூலுக்குச் சமமாகப் பிரம்ம இந்திரப் பிரயந்தத்தில் வியாபித்துச் சர்வசித்திகளையும் கொடுக்கும். அப்படிக் கொடுக்கும் தேய்சோமூர்த்தியை மனத்தில் இலட்சியமாக நிறுத்தி வணங்கவேண்டும்.

தேயிசு

வேறாக ஒரு பிரகாரமாக லாடத்துக்கு மேலாகக் கொல்லாண்ட மண்டபத்தில் இலட்சியம் செய்து

யோகீசுரனான நட்சத்திரத்தின்படி தேயிசுவை மனத்தில் நிறுத்திப் பார்க்கவேண்டும்.

பிராண நாதம்

இன்னொரு முறையின்படி தெற்சணி என்கின்ற விரல்களால் செவிகள் இரண்டையும் மூடினால் சிரசில் இருக்கின்ற பிராணநாதத்தைக் கேட்கமுடியும்.

நீலசோதி

இன்னுமொரு முறையில் மத்தியில் நீலசோதி ரூபத்தை இலட்சியமாக வைத்துப் பார்க்க வேண்டியவை இலட்சியம் எனக் கூறப்படும். இனிமேல் வாக்கிய இலட்சியம் பற்றிச் சொல்லுகிறோம்.

வாக்கிய இலட்சியம்

நாசாகித முதல் கொண்டு வெளியில் *4, 6, 8, 10, 12* இதன்படி அங்குலப் பிரமாணங்கள் பிரமாணமாக வைத்துக் கொண்டு கிரகமாக ஆகாசாதி பஞ்சத்துவப் பிரகாரமாக நீல வர்ணமும், தாம்பிர வர்ணமும், தங்க வர்ணமும், பீத வர்ணமும் மற்றும் மற்ற வர்ணங்களையும் வணங்கித் தியானிக்க வேண்டும்.

சமோத ஆகாசம்

மற்றுமொரு முறையில் சமோத ஆகாசத்தைக் கட்டிப் பார்த்தால் யோகீசுரரின் எதிர்க் கிரணங்களோடு கூடிச் சோதியானது காணப்படும்.

திருஷ்டி

பிறிதொரு முறையில் திருஷ்டிக்கு முன்னாலும், கடைக் கண்களினாலும் நன்றாகக் காய்ச்சியும்

பொன்னிறம்போல் இருக்கின்ற பூமியை இலட்சியமாக எண்ணிப் பார்த்து யோகீசுரனுக்குத் திருஷ்டியில் திறக்கப்படும்.

முத்தி

மேலும் தலைக்குமேல் வாசாங்குலம் மிதமான இடத்தில் நிராகாரமான சோதியை இலட்சியத்தோடு செய்தாலும் முத்தி அடையமுடியும்.

சித்தம்

எங்கெங்கு இலட்சியம் வைத்தாலும் அங்கங்கே ஆகாசம் போல் இலட்சியத்துடன் சித்தமானது ஆகாசத்திற்குச் சமமாகக் கருதப்படும்.

புருவ வித்து

அநேக விதங்களில் வாங்கிய இலட்சியங்களை இடம் பெற்றாலும் புருவ வித்து வாங்கினால் மட்டுமே மத்திய இலட்சியம் வாங்கமுடியும் என்பதைச் சொல்கிறோம் கேள்.

மத்திய இலட்சியம்

எவ்வாறெனில், வெள்ளை முதலான வர்ணங்களைக் கிரகமாக அர்த்த சந்திர இன்பமாகவும், மின்னல்கொடி போலவும், அக்கினிச் சுவாலைப் போலவும், பிரகதி யாகவும், சல ஆகாயத்தைப் போலவும் ஆத்மாவை இலட்சியம் செய்து பார்ப்பதை மத்திய இலட்சியம் என்று கூறுவர்.

ஆகாசப் பஞ்சகம்

நிராகாரமான குணரகித ஆகாசத்தைப் போலவும், ஆதியந்தம் அந்தகார ரூபமான பர ஆகாசத்தைப் போலவும், காலாக்கிச ரூபமான மகா ஆகாசத்தைப்

போலவும், சதாவிசமான பரன் சூரிய ஆகாசத்தைப் போலவும் என்ற ஐந்தும் ஆகாசப் பஞ்சகமாகும்.

ஆகாசமானவன்

இந்த ஆகாசக்களஞ்சும் உள்ளும் புறமும் பூரணமாக இருக்கும். இவற்றை யாரொருவன் இலட்சியமாக பார்க்கின் றானோ அவனே ஆகாசமானவன் ஆவான்.

தாரக யோகம்

தாரக யோகமாவது ஒரு சீடன் இரண்டு பேரையும் ஆகாசத்தைக் கடக்கச் செய்தமையால் தாரக யோகம் என்கின்ற பேராகியது.

இந்தப் பரகாசத்தைச் செய்யும் தாரகத்தை முன்பே அப்பியாசம் செய்யவேண்டும்.

சாங்கிய தாரக யோகங்கள்

சாங்கிய தாரக யோகங்கள் இரண்டும் வேறு வேறாக இருந்தாலும் பலன் ஒன்றாக அமையும். சாங்கிய யோகமானது உபாதி இல்லாத தாரக யோகமானால் உபாதியோடு கூடிப் பிரகாசமாக இருக்குமென்று ஸ்ரீ குரு மூர்த்தியானவர் சாங்கிய தாரக யோகங்கள் இரண்டையும் சீடனுக்குக் கிடைக்கும். இனி இராசயோக இலட்சணம் அனுக்கிரகம் பண்ணுகிறார்.

இந்தப்படி சதாசிவ யோகீசுரானால் இரசிக்கப் பட்ட சாங்கிய தாரக யோகங்கள் முற்றும்.

நான்காம் படலம் முற்றும்

திருச்சிற்றம்பலம்.

■ ■ ■ ■ ■

ஐந்தாம் படலம்

புளச்சாதிரஹஸ்யம் யஜ்
ஜ்யோதிஷாம்நிலயம்மஹத் |
திவ்யலிங்கஸ்தலம் த்ருஷ்டம்
அந்தர்லக்ஷ்யாத்மகம் ச்ருணு ||

உபுந்து மாத்திரத் திபமயப
சோதிட ரசம் நிலையும்
ஒவ்விய லிங்க ஸ்தலம (ஷ உ டு ம)
மந்திர இலட்சாகும்.

மகம் சுகுணம் எழுதியது.

திவ்விய இலிங்கம்

ஓ சீடனே! இன்னும் அதிக இரசியமான சகல சோதிகளுக்கும் இருப்பிடமாகவும், மகத்தாகிய திவ்விய இலிங்கத்தைப் பார்க்க அந்தர இலட்சியம் ஏதுண்டோ அதைச் சொல்லுகிறேன்.

அந்தர இலட்சியம்

அந்திர இலட்சியமாவது, உள்ளும் புறமும் இல்லாததான அபரோட்ச சொரூபமாக ஆகாசத்துக்கும், அந்தர் ஆகாசமும் ஏதுண்டோ அதுவே அந்தர லட்சியமாகும்.

சாம்பவி முத்திரை

அந்தர இலட்சியத்தில் மனமும், வாய்வும் ஈடுபடுத்திக் கொண்டு சலனமில்லாமல் தாரகங்களை நிறுத்திய யோகீசுரன் உலகத்தின் குருவென்று சொல்லப் படுகிறது. இந்த இலட்சியம் திடப்படுவதே சாம்பவி முத்திரையாகும். இதனைக் கேசரி என்றும், யோகி என்றும் கூறுவர்.

கேசரி முத்திரை

லோகத்தில் சில பேர் அந்தக் கேசரி முத்திரையை அறியாமல் வாங்கிய கேசரியைப் பிடித்து வயிராக்கியத் தினால் நாக்குகளை அறுத்துக் கொள்வார்கள். அதனால் எந்தப் பயனும் அடையமாட்டார்கள்.

ஓமம்

தாலுவ மூலத்துக்கும, துவாத சாந்தத்துக்கும் மத்தியில் பரம கலையான விருப்பத்தையுடையவர்கள் இருக்கிறார்கள். அதில் மனத்தை நிறுத்தித் தத்துவங்களைச் சிரமமாக எண்ணி ஓமம் செய்யவேண்டும்.

நிர்மல சோதிலிங்கம்

இந்தக் கிரமமாவது, முதல் திட்டம் பிரதமை, இரண்டாவது திட்டம் அமாவாசை, மூன்றாவது திட்டம் பௌர்ணமி, இந்தத் திட்டத்தினால் நிர்மல சோதிலிங்கத்தைப் பார்க்க வேண்டும்.

பரம தரிசனம்

எவ்வாறாயின், நாசி நுனியில் நிறுத்தி மூடுவதும் திறப்பதும் இல்லாமல் திருஷ்டியினால் இலட்சியம் வைத்துப் பார்க்கின்றபோது மூலத்துக்கு வாத சாந்தத்திலே உள்ளும் புறமும் நிறைந்த இருள் காணப்படும். அதில் சிறிதும் சலனப்படாமல் சதாசிவனைத் தேடும் மனத்திடத்தினால் கவனமாகப் பார்த்தால் அப்போது அகண்ட மண்டலகார மாகவும், பரமாமாகவும், சோதி மயமான பிரம தரிசன் தெரியும். இந்தப் பரமதரிசனம் செய்த மகாத்துமாக்கள் இந்த லோகத்தில் கிருதாரத்தால் ஆன யோகீசுரன் என்று அறியமுடியும்.

ஆத்ம லிங்கம்

ஓ சீடனே! மேற்கு முகமாக அபின்ன வளையாகாரமாக ஆத்மலிங்கத்தை நீ கிழக்கு முகமாகப் பார்த்தால் ஆச்சரியப்படும்படி இருக்கும்.

லட்சிய தரிசனம்

யாதொன்றும் ஆபச் சோதியாய் சத்தப் பிரம மாகவும், மோட்ச சுபரூபமாகவும், யோகீசுரனுக்கு லட்சய் தரிசனக் காலத்தில் பூரணச் சந்திரன் போன்றும், மாணிக்கத் தீபம் போலவும், தியானக் காலத்து சூரியனைப் போலவும், மின்னல் கொடிப் போலவும், இப்படி யோகீசுரனால் எந்நேரமும் தேடக்கூடிய ஆயிரம் பேதங்களுண்டு.

பரமபதம்

எவ்வாறெனின் அதுவே விஷ்ணு பரமபதம். வெகு விஸ்தாரங்களான லிங்க சொரூபமானது கண்ணுக்கு முன்பே லாட்சாந்திரத்திலே பிரகாசிக்கும் என்பது மகா ஆச்சரியமாகும்.

ஆத்மத் தரிசனம்

இதன்படி ஆத்மலிங்கத் தரிசனம் செய்துகொண்டு, இருக்கின்ற யோகீசுரனுக்கு அன்னிய கர்மங்களாகலே ஒன்றும் பயனில்லை.

ஆகையால் ஓ சீடனே! நீயும் இந்த ஆத்மத்தரிசனம் செய்து கொண்டு அயிங்கிசை முதலான அஷ்டட புஷ்ப வேளையில் ஆத்மலிங்கமான பூசையைச் செய்யவேண்டும்.

சித்தலிங்கம்

இந்த புட்பங்கள் ஏதென்றால், 1. அயிங்கிசை, 2. இந்திரியம், 3. நிற்கிரயம், 4. பூத்தவாய்வுசம், 5. கியானம்,

6.தியானம், 7. தபசு, 8. சத்தியம் ஆக எட்டுவகை புட்பங்களால் சித்தலிங்கத்தைப் பூசிக்கவேண்டும்.

இராச யோக இலட்சணங்கள்

இராச யோக இலட்சணங்களை மூடி மூடாத திஷ்ட்டியும், போக்குவரத்து இல்லாத வாய்வும், சர்வ சமுசியங்கள் இல்லாத மனமும் யாருக்குண்டோ அவரே இராசயோகம் சித்திப்பெற்றவராவார்.

அடர்ரச யோகி

யாரொருவன் சிறு கடத்திலே மனத்தை நிறுத்தி சந்திர, சூரியர்களுடன் திரிகோண மார்க்கத்தில் பிரவேசித்து அந்த லீனமான வாய்வும் வாங்கிய திஷ்ட்டியும் நிறுத்த அறிந்தவனே அஷ்ட்டபாபத்துடன் கூடிய அடர்ரச யோகியாகக் கருதப்படுவான்.

சிவயோகம்

ஓ சீடனே! யாதும் காணப்படுவதும், மனம் என்ற இம்மூன்றும் கூட்டுறவினால் சிவன் முத்திகரமாக அதிக இரகசியமாக உன்மணி அந்தமாகச் சிவயோகத்தை நீ அப்பியாசம் செய்யவேண்டும்.

ஆத்மலிங்க தரிசனம்

இன்னொரு விசேசமும் உண்டு. அதாவது, சூரியப் பிரகாச மின்னல் கொடி, புகை, விந்து, நாதகலைகள், நட்சத்திரம், சூரிய சந்திரன், தீபநேத்திரம், சொர்ண பற்பம், அதனுடைய கேசரங்கள், தண்டம் அநேக பேதகனமும் ஆத்மலிங்க தரிசனத்தில் காணமுடியும்.

ஆத்ம லிங்க விரோதங்கள்

முகத்திலே பிராணவாயுவைப் பூரித்து வன்னி மண்டலத்தில் அபான வாயுவை ஏற்றி இரண்டையும் திடப்படுத்தித் தன்னுடைய இருகை விரல்களால் பெருவிரல் முதற்கொண்டு கைக்கு மூன்று விரலால் சண்முகி கரணம் செய்தால் வெகுவித பேதங்களான பிரணவ நாதத்திலே லீனமான சித்தமுடைய யோகிகள் முன்னர் கூறியதுபோல் ஆத்ம லிங்க விரோதங்கள் காண்பார்கள் என்பது உறுதி.

ஆத்மக் கிராணிகள்

சூரிய சந்திரன் இவற்றுக்கு எதிரேயிருந்து கொண்டு இவற்றில் ஒன்றை இலட்சியமாக வைத்துச் சூரிய சந்திரராகிய இரண்டு நேத்திரமும் ஒன்றுபடுத்திப் பார்த்தால் நயனாக் கிரகத்தில் ஆத்மலிங்கம் பிரகாசமாகத் தோன்றும். அவ்விவேகி களுக்கும் இப்படியென்றால் ஆத்மக் கிராணிகளுக்கு அதன்படியே பிரவேசிக்கும்.

பரப்பிரம்ம சொரூபம்

பிரமாணமும், பிரத்தியட்சம் இல்லாததால் சாந்தமான தோசோன் மயமாய் மகம், வாக்குக்கு எட்டாத எந்த வஸ்து உள்ளதோ அதுவே பரப்பிரம்ம சொரூபம் என்று வித்து வாங்கியத்தால் சொல்லப்படும்.

மணியவத்தை

சங்கல்ப விகற்பமில்லாமல் ஆச்சரியமான பரம யோகத்தை எவன் அடைகின்றானோ அவனுக்கு உன் மணியவத்தை சித்திக்கும்.

பரமபத ஸ்தானம்

இன்னும் ஆதார மத்தியமான இருதயத்தில் வியாபகமும், நாதவித்துகளும் அதீதமான ஏதொரு சொரூபமுண்டோ அதுவே பரமபத ஸ்தானமாகும்.

உபாசினை

பரம பதமானது, நிர வாச்சியமும், நிராபலமும், நிராமயமும், பாவனாரகிதமும், அவ்வியமும், பரம சொரூப மனோதமும், ஆத்துமத் தத்துவத்தை ஆதாரமாகக்கொண்டு ஒருவன் சுத்த மனத்தினால் உபாசினைச் செய்கின்றானோ இவன் தன்மயனாக நித்தியானந்தத்தை அடைய முடியும் என்கிறார்.

பந்தம்

அப்படிப்பட்ட யோகீசுரனுக்கு உண்டானால் அதுவே பந்தம் ஏதுவாகும். பாவம், அபாவம் ஆகிய இரண்டும் தள்ள வேண்டும்.

சீவன் முத்தி

தியான இரகசியங்களும், தியானமும் செய்து முடித்தவுடன் இலட்சியமும், இலட்சியம் இல்லாததும், பாவமும் அபாவமும், யுத்தியும் யுத்தி இல்லாததும், பார்ப்பதும் பார்க்கப்படாததும் இந்தச் சகலமும் சீவன் முத்தியானவன் விட்டுவிடுவான்.

தத்துவ மயம்

தத்துவ மயமான யோகீசுரன் சர்வ அவத்தைகளிலேயும், பிரயாசம் இல்லாமல் நிச்சய பாவமடைந்து அமைதியானவன் போல் காணப்படுவான். அலைகள் இல்லாத சமுத்திரத்தைப் போலவும், காற்றில்லாத தீபம் போலவும் பரமானந்த பரமனாக இருப்பான்.

சிவபூசை விதி

ஓ சீடனே ! சர்வ சாத்திரங்களையுடைய சாரமாக மகா இரகசியமாக உடனே முத்திக் கொடுக்கக் கூடிய சிவபூசை விதியானது சொல்லுகிறோம் கேள்.

சிவத்தியானம்

சகல சிந்தனையும் இல்லாமல் இருப்பதே சிவத்தியானம். சகல கிரிகைகள் இல்லாமல் இருப்பதே சிவபூசை. சலனமில்லாமல் இருப்பதே பிரதட்சணம். சுகம் பாவனைச் செய்வது நமஸ்காரம்.

நிற்குண பூசை

மௌனமாக இருப்பதே கீர்த்தனம், பரிபூரண பாவனையே சிவம், சகிர்த்தியம், அகிர்த்தியம் இல்லாதிருப்பதே சீலம், சருவசம், புத்தி வகிப்பதே மோட்சம் இந்த எட்டும் அஷ்டாங்க நிற்குண பூசையென்று சொல்லப்படுகிறது என்கிறார்.

சகத்திர அவஸ்தை

சகல இந்திரியம், காமித்திரியம் குணங்கள் இல்லாமல் சகல ரூபங்களுக்கும் அதீதமாக நிரஞ்சனமாக சாந்த சொரூபமாக, பாவ அபாவங்களுக்கு எட்டாமல் இருப்பதால் ஓர் அவத்தை உண்டோ, அதுவே சகத்திர அவஸ்தை என்று சொல்லப்படும். அதையே சாதிக்க வேண்டும்.

அவத்தைகள்

சாக்கிர அவத்தை, சொப்பன அவத்தை, சுழுத்திய அவத்தை, துரிய அவத்தை, துரியாதீத அவத்தை, சாந்தர் அவத்தை இந்த ஆறும் அவத்தைகள் என்று சொல்லப்படும். சாக்கிர அவத்தைக்கு மேலே லேச மாத்திரம் ஆனாலுமில்லை என்று அறியத்தக்கதாகும்.

சாக்கிர அவத்தை

சகல துர்க்கங்களை விட்டுவிட்டு சுக கர்மங்களைப் பிடித்து சொர்க்க சுகத்தை அடைந்தவன் விருப்பப்பட்ட புருடனாவான். பிற விரதனென்று சொல்லப்படும். அவன் சாக்கிர அவத்தைக்கு அதிகாரியாகமாட்டான்.

மோட்சம்

இகலோக சுகத்தையும், பரலோக சுகத்தையும் போதுமென அதில் விருப்பமில்லாமல் இருப்பவன் விரதனென்று சொல்லப்படுவான். அவன் சாக்கிர அவத்தையி லிருந்து மோட்ச குசமடைவதற்கு அதிகாரியாவான்.

சற்புருடன்

இந்தச் சவுக்கார சமுத்திரத்தை நானெந்த விதம் கடப்பேன் என்று சிந்தித்து முன்பே சற்குருவை வணங்க வேண்டும். பெரியவர்களுடைய சவகாசமும், அபேட்சை இல்லாமல் இருப்பதும் நல்ல ஆசார நேசமும், மௌனமும், வயிராக்கியமும் இவற்றுடன் கூடிய வேத சாத்திரங்களால் நிச்சயமான புத்தியால் காமக் குரோதங்களாய் இருக்கின்ற சத்துருக்களில் சங்கரித்து உடம்பில்லாமல் இருப்பதும் இந்தக் காரியங்கள் யாரொருவனுக்குச் சாதிக்க முடியுமோ அவன் சாக்கிர அவத்தை சுபாவத்தோடு கூடிய சற்புருடன் என்று சொல்லப்படுவான்.

சத்த மாத்திரம்

சாக்கிர அவத்தையில் மரணமடைந்தவன் மறு சென்மத்தில் பூர்வ அப்பியாச வஸ்துவினால் இந்தப் பூமியில் சொற்பன அவத்தை அடைந்து யோகீசுரன் சமஸ்த்த லோகங்களையும் சொர்க்கம்போல் பார்த்துக்கொண்டு சித்தத்திலே சதாகாலமும் மேகத்தைப் போலச் சத்த மாத்திரத்தில் நின்று சஞ்சரிப்பான்.

சுழுத்திய அவத்தை

சுழுத்திய அவத்தை அடைந்த யோகீசுரன் தோச பாவத்தை நீக்கி, சாந்தத்தை வீச்சுப் பிரகாச சொரூபமாகச் சித்தாரியாகின்ற ஆனந்த சூரியன் பிரகாசித்துக் கொண்டிருக்க வெளியிலே விரத்திகளுடன் கூடி இருந்தாலும் இருதயத்தில் விரத்தி உடையவனாகச் சித்திரப்பதுமை போல் விளங்கிக் கொண்டிருப்பான் என்பது ஆச்சரியமாகும்.

துரிய அவத்தை

துரிய அவத்தை அடைந்த யோகீசுரன் அவன் பிழைத்திருந்தாலும் இறந்தவனைப் போல் மனோ நிவர்த்தி யாகச் சாந்தியடைந்து அகங்காரம் இல்லாமல் கெந்தாதி குணங்கள் இல்லாதவராய் பாவனை இரகிதனாய் முத்தி அடைந்து இருப்பான்.

சித்திர ரூபம்

துரிய அவத்தை அடைந்த யோகீசுரன், சமுத்திர மத்தியில் வைத்து நிறைகுடம் போலவும், ஆகாசத்தில் நிறுத்திய சூரிய கம்பம் போலவும், உள்ளும் புறமும் கிரகமாகப் பூரண பாவமடைந்து சித்திர ரூபத்தைப் போல் விளங்கிக் கொண்டிருப்பான்.

துரியா தீத அவத்தை-1

துரியா தீத அவத்தை அடைந்த யோகீசுரன் வாக்கியத் திலே லோகங்களால் பிரம்மா என்றும், விஷ்ணு என்றும், சிவமென்றும், பிரகிருதி என்றும், மகா புருசன் என்றும், அர்த்த ரூபம் என்றும், நானாவிகார பாவங்களாகச் சொல்லப்பட்டுத் தேகத்தோடும் கூடி இருந்தாலும் நித்திய முத்தனாக எல்லா மகத்துவங்கள் அடைந்து சீவன் முத்தனாய் சுகித்துக் கொண்டிருப்பான்.

துரியா தீத அவத்தை-2

ஆகையால் நீயும் சகல எத்தினத்திலும் கிரகமாக அப்பியாசம் செய்து இந்தத் துரியா தீத அவத்தை அடைந்து சுகத்தை அடைவாய்.

சகல அவத்தை

சகல அவத்தைகளையும் மறந்திருந்தாலும் உள்ளும், புறமும் வியாபகமான சகல கன்மங்களையும் விட்டுவிட வேண்டும்.

அமன சக்கம்

அன்னிய கர்மங்கள் சகலமும் விட்டு இந்தச் சிவயோக அப்பியாசம் செய்து சுகமாகவும் சவ்வின் மயமாகவும் அமனசக்கம் என்கின்ற முத்திரையை அடையவேண்டும்.

அசாட்டிய நித்திரை

ஆத்மாவையும், விந்துவையும் ஆகாசமாகச் சேர்த்து இந்த இரண்டையும் சமரசப்படுத்தினால் அதுவே அமன்சக்கரமான முத்திரையெனச் சொல்லப்படும். ஆகவே சகஸ்த்திர அவத்தை என்றும், உன்மணி என்றும் மனோன்மணி என்றும், அசாட்டிய நித்திரை என்றும் நாமங்களாக விளங்குகின்றன.

அமன் சக்கரம்

சுவாபம சாக்கிர சொற்பனங்கள் அதிகமாகி செனன மரணங்கள் இல்லாமல் வர்ம சொரூபமான அந்த அமன் சக்கரம் என்கின்ற முத்திரையை எப்போது அடையப் போகிறோம் என்று கேட்ட சீடனுக்கு குரு மூர்த்தி வேறு ஒருமுறையில் மனோ நிவர்த்தி சொல்லுகிறார்.

மனோலயம்

எவ்வாறெனில் மனம் எங்கெங்குப் போகுமோ அங்கங்கே நிறுத்திக் காரணமாக மனோலயம் அடையவேண்டும். அந்த மனத்தை அப்படியே விடாமல் நிறுத்தினால் விழைய விருத்தியாகும்.

யதாஸ்தானம்

ஆதலால், அந்த மனத்தின் போக்கில் விட்டுத் தற்செயலாகத் திரிந்து தானே திரும்பி வந்து யதாஸ்தானம் சேரும். எப்படியெனில் மதம் கொண்ட யானையானது அங்குசத்துக்கு உட்படாமல் இயல்பாகத் திரிந்து நிதானத்திற்கு வந்து சேர்வதைப் போலாகும்.

நிராலெம்பம் அவத்தை

வசத்திலே சிரேட்டமானது நிராலெம்பம் அவத்தையில் சிரேட்டமானது உன் மணியாகும்.

மனோன்மணி முத்திரை

ஆகையால் இராசயோகத்துக்குச் சத்தி ரூபமான அந்த மனோன்மணி முத்திரையை அடைந்த யோகீசுரன் வால உன்மத்த பிசாசுகளைப் போல் சகல லோகங்களிலேயும் சஞ்சரித்துக் கொண்டிருப்பான்.

மோட்சப் பிரகாரம்

இந்தச் சீவன் முத்தியடைவதற்கு இதுவே யோகம். இதற்கு வினா வேறில்லை. மோட்சப் பிரகாரம் சமஸ்த்த தரிசனங் களுக்குச் சமமானதாகக் கருதப்படும்.

மந்திர லய லோகங்கள்

மந்திர லய லோகங்கள் இரண்டும் ஆத்ம மாத்திரம் அடையும் யோகமானது அப்பியாசம் ராசயோகமானது. மோட்சபதம் என்பதால் முந்திய மூன்றையும் பூர்வ

பட்சமாக நிறுத்தி இந்த ராச யோகத்தில் மோட்சப் பிரதான சித்தாந்தமாக விளங்கும்.

ராச யோக மார்க்கம்

ஆகையால் யோகீசுரனுக்கு மோட்சம் அடைவதற்கு இந்த ராசயோக மார்க்கமாக அப்பியாசம் செய்யவேண்டும். இந்த யோகத்துக்கு விக்கினங்கள் சொல்லுகிறோம்.

பதார்த்த உபகாரங்கள்

மதுஷ்ட்டான சாபகாசம், புத்திர மித்திர களத்திராதிகள் பந்துக்களால் ராச சிநேகம், சாத்திர வாசனை சரீரத்தில் ரோகங்கள் முதலான யோக விக்கினங்கள் உண்டுபண்ணும். இவறறை வெற்றியடைந்து மகாயோகாப் பியாசத்தினால் பிறந்த அணிமாதி, அஷ்ட்டா, ஐஸ்கரியங்களும், காய சித்திகளுமான சகலத்தையும் விட்டு நல்ல தேசத்தில் ராச நெட்டூரங்கள் இல்லாமல் வேறொரு உபாதிகளும் இல்லாமல் சற்புருசாளியாக இருக்கின்ற தர்ம இராச்சியத்திலிருந்து இந்த இராச யோகத்தை அப்பியாசம் செய்து, மகா ஆத்மாக்களுக்குத் தாபத்திரவியங்களும், நல்லவித பதார்த்த உபகாரங்களையும், அனுசரிக்க வேண்டும்.

பிரகிரிதி விகாரங்கள்

வர்க்க விகாரங்களும், பஞ்ச கோசங்களும், சடப்ர விகாரங்களும், அடிமைகள் போன்ற பிரகிரிதி விகாரங் களில் மட்டுமில்லாமல் இல்லை.

ராச யோகம்

மகாப் பிரகாசமான அக்கினியானது, பச்சை விறகு, காய்ந்த விறகில் சுகமாக எப்படித் தீப்பிடிக்கிறதோ அதுபோல் ஏகக்கியானமான அக்கினி அசன மாத்திரத்தில்

புண்ணிய பாவங்கள் எல்லாவற்றையும் மதித்து அதன் பேரில் ராச யோகத்தை அடையச் செய்யும். இவ்வாறு அடைந்த மகா ஆத்மா முத்தியைப்பெறும்.

ராசயோக சமாதி

அற்பமான தீயானது, மகத்தாகிய அந்தக் காரத்தை எப்படிப் போக்குகின்றதோ அதுபோல் ராசயோக சமாதியான சுவா, அசுவா, கர்மங்கள் எல்லாவற்றையும் போக்குகின்றன.

இராசதம்

இந்த இராசதம் அனுசரிக்க எத்தனம் செய்து யாரொருவன் யோக சித்தி அடையும் முன்பே மூர்க்கமானால் மனோபவலோகத்தை அடைந்து வெகுகாலம் சுகத்தை அனுபவித்து அதன்பிறகு பூமியில் ஐஸ்வர்யம் பெற்று வேதசாத்திர சம்பன்னாய் யோகீசுரரான சற்புருசர்களின் வங்கிசத்தில் அவதரித்து முத்தனாவான்.

புண்ணிய புருசர்

இதன்படி ராசயோகத்தினால் யாரொருவன் மனமானது பரப்பிரம்மத்திலே வீனமாகின்றானோ அவனுடைய தாய் தகப்பன் நல்ல குடும்பம் நடத்துபவர் ஆவார்கள். அவர்களுடைய வீட்டில் பிறந்தவர்கள் மகா புண்ணிய புருசராவார். அவர் வாழும் பூமியும் மகா புண்ணியமாகும்.

சிவயோகம்

சிவயோகத்தின் மகத்துவத்தைச் சொல்லி அதற்குமேல் கிருதாரத்தில் ஆனவர் இந்த மந்திர எழுத்துக்களைச் சொல்லுவர். சகல சாத்திரங்களுடன் இரகசிய அந்திரங்களைச் சித்தப்புருசரின் சித்தாந்தங்களும்

சோதித்துச் சரிசெய்து சிறப்பிடமாக இந்தச் சிவயோக தீபிகை எனும் இந்நூல் சமர்ப்பிக்கப்பட்டது.

மகா இரகசியம்

இந்தச் சிவயோக தீபிகையானது, மகா இரகசியமானது. இதனைப் பயிற்சி செய்ய உறுதியுடையவரான இந்திரயங்களை அடக்குபவராகச் சிவனிடத்திலும், குருவிடத்திலும் மனப் பூர்வமாகப் பக்தியுடன் இருக்கும் நல்ல மனிதர்களுக்குக் கொடுக்கலாம். எக்காரணத்தாலும் மூடனானவனுக்கும், குரு துரோகியானவர்களுக்கும் கொடுக்கக் கூடாது. பக்குவமறிந்து இருப்பவர்களுக்கே கொடுக்கவேண்டும்.

அனுக்கிரகம்

இது உலகத்தில் பலவிதச் சாத்திரங்களுடன் கூடிய ஐந்து படலமாக எழுதி முடிப்பதற்கு அனுகிரகம் செய்தார்.

இதன்படி சதாசிவ யோகீசுரனால் சொல்லப்பட்ட சிவயோக தீபிகை எனும் யோக சாாத்திரத்தினால் இராச யோகமானது அனுசரிக்கும் விதமாக ஐந்தாம் படலம் நிறைவடைந்தது.

ஐந்தாம் படலம் முற்றும்

திருச்சிற்றம்பலம்.

இதனை எழுதி நிறைவேற்றப்பட்ட பராபவ வருடம் புரட்டாசி மாதம் 20ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை உத்திரட்டாதி நட்சத்திரமான தனுசு இலக்னத்தில் சுந்தரம் கையால் சிவ கிருபையினால் எழுதி நிறைவேற்றப்பட்டது.

சிவயோக தீபிகை முற்றும்.

கலைச் சொல் விளக்கம்

1. அத்துவான (6)	-	வன்னம், பதம், மந்திரம், புவனம், தத்துவம், கலை
2. அவத்தை (5)	-	சாக்கியம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்
3. இந்திரியம் 2 வகை	-	1. ஞானேந்திரியம்(5), மெய், வாய், கண, மூக்கு, செவி 2. கன்மேந்திரியம் (5) வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம்
4. ஐந்து மூர்த்திகள்	-	பிரமன், திருமால், உருத்திரன், மகேசுரன், சதாசிவம்
5. உடம்பு வகை	-	அன்மைய கோசம் பிராணமய கோசம் மனோமய கோசம் விஞ்ஞானமய கோசம் ஆனந்த மயகோசம்
6. உடம்பின் மற்றொரு வகை	-	தூலசரீரம், சூக்கும சரீரம், குணசரீரம், கஞ்சுக சரீரம், காரணசரீரம்
7. உயிருணர்வு	-	உணர்வது உயிரே, ஐம்பொறி, புலன், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் முதலிய கருவிகளால் உணர்வது. அவ்வாறின்றி அதுதானே உணர்வது உயிருணர்வு, ஏனையவை முறையே பாலுணர்வு, மனவுணர்வு

0 5 7 9